# திருக்கோயில்


“என் கடன் பணி செய்து கிடப்பதே”



ஸ்ரீ சனி பகவான், திருநள்ளாறு.

மாலை 9] பராபவ-தை-பிப்ரவரி, 1967 [மணி 5

சென்னை அரசாங்க அறநிலையப்



தஞ்சைப் பெரிய கோயிலில், நமது அறநிலைய ஆணையர் அவர்கள், பிடியரிசித் திட்டம் துவங்கி, பிரசாதப் பொட்டலங்கள் வழங்குதல்.

## பொருளடக்கம்


1. திருஞான சம்பந்தர் திருவுள்ளம்
2. பொங்கல் விழாவும் புறநானூறும்
3. சிதம்பர சுவாமிகளும், பொங்கல் விழாவும்
4. முருகன் பெருமை
5. திருமுருகன் சிறப்பு
6. விடை தெரியுமா ?
7. விடை விளக்கம்
8. தென்கிழக்கு ஆசியாவில் திருவாசகமணி
9. மனுதரும சாத்திரத்தின் மாண்பு
10. பூந்தண்மலிக் கல்வெட்டுக்கள்
11. ஞான சித்தர்களும் சித்தமருந்தும்
12. இதுதான் இந்துமதம்
13. பௌத்தமும் தமிழும்
14. இறை வழிபாடு


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங் களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித் துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9]  பராபவ-தை-பிப்ரவரி '67  [மணி 5


# திருஞான சம்பந்தர் திருவுள்ளம்

**முன்னுரை:**

சைவ சமய ஆசிரியர்கள் ஆகிய நால்வர்களுள், திருஞான சம்பந்தர் தனிப் பெரும் சிறப்பும் முதன்மையும் உடையவர் ஆவர். அவரது தனி முதன்மைப் பெருஞ் சிறப்பைக் கருதியே, அவரது தேவாரத் திருப்பதிகங்கள் திருமுறைகளின் வரிசையில் முதற்கண் அமைக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தரை வழி வழியாக, வாழையடி வாழையாக வந்த சைவப் பெரும் சான்றோர்கள் அனைவரும், மிக ஈடுபட்டுத் துதித்துப் போற்றி வந்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் விளங்கிய அருட் பெருஞ் சான்றோராகிய இராமலிங்க அடிகளார், 'தம் உயிர்க்கு உயிரெனும் குரு' ஆகக் கொண்டு, போற்றி மகிழ்ந்தார். அருணகிரிநாதர் அவரைத் தம் வழிபடு கடவுளாகிய முருகன் என்றே கூறிப் புகழ்ந்து தொழுகின்றார். மெய்கண்டார் முதலிய சான்றோர்களும் திருஞான சம்பந்தரை மிகவும் துதித்துப் போற்றியுள்ளனர். சேக்கிழார், நம்பியாண்டார் நம்பிகள் ஆகியவர்களும், திருஞான சம்பந்தரையே தமக்குரிய உபாசனா மூர்த்தியாகக் கொண்டிருந்தனர். சுந்தரர் அப்பர் ஆகியோரும் திருஞான சம்பந்தர்பால் எல்லையில்லா ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கி யிருந்தமை, அவர்கள் அருளிய தேவாரப் பாடல்களால் புலனாகின்றது.

> தருண மங்கலை உனது சிந்தை
> தழைந்த பால்அமுது ஊறினால்,
> அருண கொங்கையில் அது பெருங்கவி
> அலைநெடுங் கடல் ஆகுமோ?
> வருண நன்குறு கவுணியன் சிறு
> மதலை அம்புயல் பருகியே
> பொருள் நயம்பெறு கவிதை என்றொரு
> புனித மாரி பொழிந்ததே!

எனச் சௌந்தரிய லகரியில் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும், திருஞானசம்பந்தரைக் குறித்துப் பாராட்டியுள்ளனர்.

இத்துணைப் பெருஞ் சிறப்பு வாய்ந்தவராகிய திருஞான சம்பந்தர், எத்தகைய சிறந்த—பரந்த திருவுள்ளம் உடையவராகத் திகழ்ந்தார் என்பதனை, அவர்தம் திருப் பாடல்கள்

கொண்டு ஆராய்ந்து உணருந்தொறும், நமக்கு அளவிலா வியப்பும் விம்மிதமும் விளைகின்றன. 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' எனத் திருக்குறள் கூறுவதற்கு ஏற்ப, ஒருவருடைய உயர்வு அவர்தம் உள்ளத்தின் உயர்வு அளவை ஒட்டியே அமைவதாகின்றது.

அம்முறையில் ஆராய்ந்தால், திருஞான சம்பந்தரின் திருவுள்ளம் மிகவும் பரந்து விரிந்ததாக விளங்குதல் புலனுகின்றது. அதனை அறிதற்கு மிகப் பல சான்றுகள் வேண்டுவதில்லை. 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' எனவரும் திருப்பாடல் ஒன்றே, அவர்தம் திருவுள்ள மாட்சிமையினை, நாம் அறிதற்குப் போதிய சான்றாக அமையும்! ஆதலின் அப்பாடலின் பொருளை ஈண்டு நாம் ஒரு சிறிது ஆராய்ந்துணர்வோம்!

**வாழ்க அந்தணர்:**

வாழ்க அந்தணர், வானவர், ஆன்இனம்!
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயது! எல் லாம்அரன் நாமமே
சூழ்க! வையக மும்துயர் தீர்கவே!

*(பொருள்)*: அந்தணர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! பசுக் கூட்டங்கள் வாழ்க! குளிர்ந்த நீர் ஆகிய மழை பொழிக! அரசனும் உயர்ச்சி யுறுக! தீயது ஆகிய அயல் நெறிகளின் தொகுதி, வலிமை யற்று அடங்குக! மக்கள் எல்லாரும் சிவபிரானின் திருப் பெயர் ஆகிய திருவைந்தெழுத்தை ஓதி வழிபடுக! உலகமும் துயரங்கள் தீர்ந்து, நலம் பெறுக!

*(1)* இப்பாடல், 'திருப்பாசுரம்' என்னும் இச் சிறந்த திருப்பதிகத்தின் முதற் பாடல் ஆகும். அத்திருப்பதிகத்தின் மெய்ம் மொழிப் பயன், உலகுயிர்கள் யாவையும் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு எய்துதலேயாம். ஆதலின், உலகுயிர்களின் வாழ்வு நலங் குறித்துச் சிவ வேள்விகளும் சிவார்ச்சனைகளும் இடையருது நிகழ்தல் வேண்டும் என விரும்பி, ''வாழ்க அந்தணர்—வானவர்—ஆனினம்'' என்று திருஞான சம்பந்தர் அருளிச் செய்வாராயினர்.

'வாழ்க' என்றே முதற்கண் அமையத் தம்முடைய திருப் பாசுரத்தினைத் தொடங்கி யிருத்தல், திருஞான சம்பந்தரின் அருள்கனிந்த திருவுள்ளத்தின் நல்லியல்பைப் புலப்படுத்துகின்றது.

பரார்த்தமாகிய வேத வேள்விக்கு உரிய வைதிகர்களும், ஆகம வேள்விக்கு உரிய சிவ வேதியர்களும், ஈண்டு அந்தணர் எனப்பட்டனர். சிவபாத இருதயர், நமிநந்தியடிகள், திருநீலநக்கர், புகழ்த் துணையார் போன்ற சான்றோர்கள் எனக் கொள்ளினும் பொருந்தும். ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'வேதத்தின் அந்தத்தை அணவுவார்' எனவும், பரிமேலழகர் 'அழகிய தட்பத்தினை யுடையார்' எனவும் குறிப்பிடுதலைத் தழுவி, அந்தணர் என்ற சொல்லுக்கு முனிவர்கள் எனவும் பொருள் கொள்ளலாம். பின்னர்த் தேவர்கள் வாழ்த்தப் படுதலால், இனம்பற்றி 'அந்தணர்' என்பது ஈண்டு முனிவர்களைக் குறிப்பதாகக் கொள்ளுதல் அமையும்.

உலக உயிர்கள் அனைத்தின் நலத்தையும் கருதி வேள்வியும் வழிபாடுகளும் இயற்றுதல் குறித்து அந்தணர்களையும், அவற்றை யெல்லாம் இறையருள் வழிநின்று ஏற்றுச் செலுத்துதல் பற்றி வானவர்களையும், வேள்வி வழிபாடுகட்கு உரிய 'பஞ்ச கவ்வியம்' ஆகிய ஆனைந்தையும் திருநீற்றையும் அளித்துத் துணை புரிதலால் ஆனினங்களையும் வாழ்க என்று, திருஞான சம்பந்தர் முறையே வைத்து வாழ்த்தியருளினார்.

இதனைச் சேக்கிழார் சுவாமிகள் 'அந்தணர்—தேவர்—ஆன் இனங்கள் வாழ்க என்ற இந்த மெய்ம் மொழிப் பயன், உலகம் இன்புறச் சந்த வேள்விகள் முதல், சங்கரர்க்கு முன் வந்த அர்ச்சனை வழிபாடு மன்ன ஆம்' *(2720)* என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

(2) உலகுயிர்க ளெல்லாம் தழைத்து வாழ்வதற்கு வேள்விகளின் நற்பயனும் மழை இன்றியமையாது வேண்டப்பட்டு விளங்குவதாதலால், 'வீழ்க தண்புனல்' என்ருர். 'வேள்வி நற்பயன் வீழ் புனல் ஆவது நாளும் அர்ச்சனை நல் லுறுப்பு ஆதலால்' (2721) என்பது பெரிய புராண விளக்கம்.

(3) வேள்விகள் முதலியன இடை யூறு இன்றிச் செவ்விதின் நடைபெறு வதற்கும், உலக மக்க ளெல்லாரும் நெறி முறையே அறத்தாற்றின் வாழ்வ தற்கும் காரணமாகத் திகழ்தல் பற்றி 'வேந்தனும் ஓங்குக' என்ருர். 'ஆளும் மன்னனை வாழ்த்தியது, அர்ச்சனை மூளும் மற்றிவை காக்கும் முறைமை யால்' (2721) என்பது காண்க.

(4) 'வேந்தன்' என்றது ஈண்டு, நின்ற சீர்நெடுமாறர் ஆகிய கூன் பாண்டியன் என்னும் மன்னனைக் குறித்து நின்றது. தற்கால வர லாற்று அறிஞர்கள் மாறவர்மன் அரிகேசரி என்னும் பாண்டியனுக இவரை வழங்குவர். 'வேந்தனும்' என்பதில் உள்ள உம்மை, முன்பு அவர் சமண சமயச் சார்பினராக இருந்த தனைச் சுட்டியதாகக் கொள்ளலாம்.

(5) 'ஓங்குக' என்றது, அவ்வேந்த னின் உயிர்ச் சார்பான நலங்களுக்கு மட்டுமே யன்றி, உடற்சார்பான நலத் துக்கும் கூட ஆக்கம் பயக்கும் ஏதுவாயிற்று. அவர் தமக்கு முன்பு இருந்த கூன் நீங்கப் பெற்று, நின்ற சீர் நெடுமாறர் ஆயினர். இதனை, 'எம்பிரான் சிவனே எல்லாப் பொரு ளும் என்று எழுதும் ஏட்டில், தம்பி ரான் அருளால் வேந்தன் தன்னை முன் ஓங்கப் பாட, அம்புய மலராள் மார் பன் அநபாயன் என்னும் சீர்த்திச் செம்பியன் செங்கோல் என்னத் தென் னன் கூன் நிமிர்ந்ததன்றே' (2745) எனச் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்குதல் கொண்டு தெளியலாம்.

(6) ஒரு சிலர் இப்பாடலைப் பாடுங் கால், 'ஆழ்க தீயதெல்லாம்' எனப் பாடுவர். அது தவறு. 'தீயது' என் பது ஒருமை. 'எல்லாம்' என்பது பன்மை. ஆதலின் 'தீயதெல்லாம்' என்று இயைத்தல் பொருந்தாது. எனவே 'ஆழ்க தீயது' என்று மட்டுமே, ஒரு தொடராகக் கொள் ளுதல் வேண்டும். இதற்குப் பொருள்: 'வேத சிவாகமங்களுக்குப் புறம்பாக உள்ள தீய அயல் நெறிகளின் தொகுதி வலிமையற்று அடங்குக' என்பது. 'ஆழ்க தீயது என்று ஓதிற்று, அயல் நெறி வீழ்க என்றது' (2722) என்பர் சேக்கிழார் பெருமான்.

(7) மேற்கூறியபடி 'எல்லாம்' என் பதனைத் தனியே வேருகப் பிரித்து 'எல் லாம் அரன் நாமமே சூழ்க' என இயைத்து ஒரு தொடராகக் கொள் ளுதல் வேண்டும். அரன் நாமம், சிவபிரானின் திருவைந் தெழுத்து. சூழ்தல், ஓதித் தியானித்து வழிபடு தல். எனவே 'எல்லாம்' என்றது ஈண்டுத் திருவைந் தெழுத்தினை ஓதி வழிபடுவதற் குரிய மக்கட் பிறவியி னரை மட்டுமே குறிக்குமாயினும், சேக் கிழார் சுவாமிகள் தமது பரந்து விரிந்த திருவுள்ளப்பாங்கினுல், 'தொல் லுயிர் யாவையும்' எனப் பொருள் காண்கின்ருர். 'வேறு எல்லாம் அரன் பெயர் சூழ்க என்றது, தொல்லுயிர் யாவையும் அஞ்செழுத்து ஓதி வளர் கவே' (2722).

(8) இவ்வுலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது. சம்பந்தர் தம் முதற் பதிகத்திலேயே 'துயர் இலங்கும் உலகு' எனக் குறிப்பிடுகின்ருர். புறநானூறு என்னும் பழந்தமிழ் இலக்கியமும் 'இன் னது அம்ம இவ்வுலகம்' எனப் புகலு கின்றது. துன்பம் என்பதற்கு இவ் வுலகில் துன்னுவது என்றும், இன்பம் என்பதற்கு இவ்வுலகில் இல்லாதது என்றும் அறிஞர்கள் விளக்கம் (Etymological derivation) கூறுவர். எனவே, நம் துயர் தீர்தல் மறுமையிலேயே மட்டும் இயலும் எனப் பொதுவாகப் பல சமயங்களும் (Pessimistic view) வற்புறுத்துவது உண்டு. ஆனுல் ஞான சம்பந்தரோ 'மண்ணில் நல்ல வண் ணம் வாழலாம்' (Optimism) என்று நமக்கு உறுதி கூறுபவர்.

எனவே, அவர்தம் நோக்கும் வாக்கும் ஓர்த்துணர வல்ல சேக்கிழார் சுவாமிகள், 'மறுமையில் மட்டுமே யன்றி இம்மையிலும் உலகுயிர்கள் துயர் தீர்க (இன்பம் நிறைக) என 'வையகமும் துயர் தீர்க' என்னும் தொடருக்குப் பொருள் விரித்துரைக்கின்றார். இதன்படி 'வையகமும்' என்பதில்'வையகம்' என்பது இகம் ஆகிய இம்மை வாழ்க்கையைக் குறித்து நிற்க, உம்மை எதிரது தழீஇய எச்சவும்மையாய்ப் பரம் ஆகிய மறுமை வாழ்க்கையைச் சுட்டி நின்றது. 'சொன்ன வையகமும் துயர் தீர்கவே என்னும் நீர்மை, இகபரத்தில் துயர் மன்னிவாழ் உலகத்தவர் மாற்றிட முன்னர் ஞானசம்பந்தர் மொழிந்தனர்' (*2723*).

(*9*) திருப்பாசுரத்தின் முதற் பாடலாகிய 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்னும் இப் பாடல், பண்டைப் பழம் பெருந்தமிழ் நெறி பற்றி எழுந்ததொன்றாகும். அந்தணர் (முனிவர்) வானவர் ஆனினம் மழை அரசன் உலகம் என்னும் அறுவகைப் பொருள்களையும் வாழ்த்துதல், பண்டைத் தமிழ் மரபாகத் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இஃது அறுமுறை வாழ்த்து எனப்படும்.

> அமரர்கண் முடியும் அறுவகை யானும்
> புரைதீர் காமம் புல்லிய வகையினும்
> ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப

எனவரும் தொல்காப்பியப் புறத்திணை நூற்பா (*81*), இவ் வுண்மையைச் செவ்விதின் விளக்கும். தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்தர்' எனப் பல பதிகங்களிலும் சிறப்பித்துக் குறிப்பிட்டுக் கொண்டு பெருமிதம் கொள்ளும் இயல்பினராகிய திருஞான சம்பந்தர், நம் பண்டைத் தமிழ் முன்னோர்களின் நெறி தழுவியே, இச் சிறந்த திருப்பாடலை அருளிச் செய்தனர் என ஈண்டு நாம் கொள்ளலாம்.

(*10*) இனி, ஒவ்வொரு திருப்பாடலிற்றனே எத்துணைப் பொருள் நுட்பங்கள் அமையப் பெற்றுள்ளன என்பது, கருதி மகிழ்தற்குரியது. 'வாழ்க அந்தணர்' என்றதனுல் வாழ்த்தும், 'எல்லாம் சூழ்க' என்றதனுல் வணக்கமும், 'அரன் நாமமே' என்றதனுற் சாதனமும், 'துயர் தீர்கவே' என்றதனுற் பயனும் கூறியவாறுதல் காண்க.

இம்மட்டுமோ! அரன் என்றதனுல் சங்கார காரணன் ஆகிய முதல்வனே முதல்வன் என்ற பதியுண்மையும் இலக்கணமும் (*1*), எல்லாம் சூழ்க—வையகமும் துயர் தீர்க, என்றதனுற் பசுக்களின் உண்மையும், இலக்கணமும் (*2*), தீயது—துயர் என்றதனுற் பாசங்களின் உண்மையும், இலக்கணமும் (*3*), குறிப்பால் உணர்த்தப் பெற்றன. இத்தகைய நுண்பொருட் குறிப்புக்களால், இத்திருப்பாசுரமானது பின்னேதோன்றிய சைவ சித்தாந்த சந்தானுசிரியர்களுக்கும், அவர்தம் நூல்களுக்கு மெல்லாம் ஒரு சிறந்த முன்னேடியாகத் திகழ்ந்தமை தெளியலாம்.

**முடிவுரை :**

இங்ஙனம் எண்ணுவார் எண்ணுந்தொறும் பல அரிய நுண்ணிய பொருள்களை உட்கொண்டு சிறப்புற உணர்த்த வல்லதாகத் திகழும், இவ்வரிய இனிய சிறந்த பாடல் ஒன்று கொண்டே, திருஞான சம்பந்தரின் திருவுள்ளத்திறன் எத்தகைய மாட்சிமை மிக்கது என்று நாம் தெள்ளிதின் அறியலாம்.

— ஆசிரியர்.

# பொங்கல் விழாவும் புறநானூறும்

**முன்னுரை :**

தமிழக மக்கள் கொண்டாடி வரும் பண்டிகைகளுள், பொங்கல் விழா என்பது, மிகவும் சிறப்புடைய தாகப் புகழ் பெற்று விளங்குகின்றது. ஒரு நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவன வற்றுள், அந்நாட்டு மக்களால் கொண்டாடப் பெறும் பண்டிகைகளும் விழாக்களும், சிறப்பிடம் பெறுகின்றன. அம்முறையில் பொங்கல் விழாவானது, தமிழ் மக்களின் பலவகைச் சிறந்த பண்பாடுகளை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது.

**மருதத்திணை :**

ஆராய்ச்சி அறிஞர்கள், உலகில் முதன் முதலாக மனிதன் குறிஞ்சி நிலத்தில் தோன்றி, அதனை அடுத்த முல்லை நிலமாகிய காடுகளில் காய் கனி வகைகளை உண்டு வசித்து வந்தான் என்றும், பின்னர் அவன் காலப் போக்கில் உழுதற் றொழிலை உணர்ந்து, பயிரிடக் கற்றுக் கொண்டு, ஓரிடத்தில் நிலையாக வாழத் தலைப் பட்டான் என்றும் கூறுவர். மனிதன் வயல்களில் உழுது பயிர்த் தொழில் செய்ய முற்பட்ட நிலப் பகுதியே, மருதத்திணை எனப் பெறுவதாயிற்று.

மருதத் திணைப் பகுதியிலேயே மக்கள் நகரங்கள் அமைத்து, மிகப் பெரிய அளவில் சேர்ந்து வாழத் தலைப்பட்டனர். மருத நிலத்தில்தான் நகரங்கள் அமைந்தன. நகரங்கள் அமையத் தொடங்கிய காலம் முதல் தான், மனிதன் நாகரிக வளர்ச்சி பெறத் தொடங்கினன். நாகரிகம் என்னும் சொல் நகர் என்ற சொல்லினின்றே தோன்றிய தாதலைக் காணலாம். 'Civilization' என்னும் ஆங்கிலச் சொல்லும் City எனப் பொருள்படும் Civitas என்னும் சொல்லினின்றே தோன்றியது என்பர். உழவுத் தொழில் செய்யத் தலைப்பட்ட பின்னரே, மனிதன் பண்பாடு வளரப் பெற்றான். பண்பாடு என்னும் பொருளுடைய Culture என்னும் சொல், உழவுத் தொழிலைக் குறிக்கும் Agriculture என்னும் சொல்லோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும்.

**உழவர் திருநாள் :**

இம் முறையில் ஆராய்ந்தால், பொங்கல் விழா நமது நாகரிகப் பண்பாட்டு விழாக்களுள் தலை சிறந்ததா தலை உணரலாம். பொங்கல் விழாவை 'உழவர் திருநாள்' என்றும், 'தமிழர் திருநாள்' என்றும் குறிப்பிடலாம். உழவுத் தொழிலின் உயர்வும் இன்றியமையாமையும் பற்றி யாவரும் உணருவர். அதனைப் போற்றும் முறையிலேயே பொங்கல் விழா பொருத்தமுற அமைந்துள்ளது. உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது. ஆதலின் உரிய காலத்தில் வேண்டும் அளவு மழை பெய்வித்து உதவிய மழைக் கடவுள் ஆகிய போகி என்னும் இந்திரனுக்கு, நன்றி செலுத்தி வழிபாடாற்றும் நாளே போகிப் பண்டிகை ஆயிற்று. அந்நாளில் தூசு நீக்கியும், மாசு போக்கியும் வீடு முதலியனவற்றைத் துப்புரவு செய்து, புதுமைப் பொலிவுறுத்துதல் வழக்கம். தைம்மாதத்தின் முதல் நாளே பொங்கல் விழா நாளாகும்.

சூரியன் மகர ஓரையில் புகும் நன்னாள் அதுவே. அந்நாளிலேயே சூரியன் தட்சிணாயனம் கழிந்து உத்தராயணம் செல்லத் தலைப் படுகின்றான். ஆடி மாதம் முதல் மார்கழி

மாதம் வரை தேவர்களுக்கு இரவு என்றும், தை மாதம் முதல் ஆனி மாதம் வரை பகல் என்றும் பெரியோர்கள் கூறுவர். அம் முறையில் தைம்மாதத்தின் முதல் நாளானது, இரவு கழிந்து பகல் தொடங்குவதற்கு இடைப்பட்ட வைகறைப் போதாக அமைகின்றது. வைகறை வேளை கடவுள் வழிபாட்டுக்குச் சிறந்தது என்பர். உத்தராயண புண்ணிய காலம் என்பது பெரு வழக்கு. இந் நன்னாளில் உழவு தொழிலுக்குப் பலவகைகளில் பேருதவி புரிந்த சூரிய வழிபாடு நிகழ்வது சாலப் பொருத்தமாகும்.

**சூரிய வழிபாடு :**

சூரியவழிபாடு (Heliolatry) என்பது, ஒரு நாட்டிற்கோ ஒரு சமயத்திற்கோ மட்டும் உரியதன்று; அஃது உலகம் அனைத்திற்கும் பொதுவானது; உலகம் எங்கணும் நிகழ்வது.[1] 'உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர் புகழ்ஞாயிறு' என்று நக்கீரர் சூரியனைப் புகழ்ந்திருத்தல் காணலாம். 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என இளங்கோவடிகளும் பாடுவர். சிவசூரியன், சூரிய நாராயணன் முதலிய பெயர்களும் சூரியனின் சிறப்பை உணர்த்தும். புதிதாக அறுவடை செய்த நெல்லின் அரிசி கொண்டு பாற்பொங்கலிட்டு மக்கள் சூரியனை வழிபடுவர். பயிரிட்டுப் புதிதாகக் கிடைத்த பொருள்களே, அன்று இறைவனுக்கு வைத்துப் படைக்கப்படும். ஆதலின் 'பொங்கற் புதுநாள்' எனவும் இதனைக் குறிப்பிடுவர். வாழ்க்கை வளர்ச்சி பெறுதற்கு அவ்வப்பொழுது தேய்ந்து சிதைந்து போன பழையனவற்றைக் கழித்து, புதிய புதிய நலங்களை நாம் தழுவிக் கொண்டு நன்மை பெறுதல் வேண்டும் என்பதனை, இவ்விழாவின் அமைப்புப் புலப் படுத்துகின்றது.

**மாட்டுப் பொங்கல் :**

உழவுக்கு இன்றியமையாதனவாக மாடுகள் விளங்குதலின், அவற்றைத் தக்கவாறு போற்றும் முறையில், மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப் படுகின்றது. நாணயப் புழக்கம் இல்லாத மிகப் பழங் காலத்தில், மாடுகளே மக்களின் செல்வமாக விளங்கின. ஒருவருடைய செல்வத்தின் மதிப்பு அவருக்கிருந்த மாடுகளின் எண்ணிக்கையைக் கொண்டே மதிப்பிடப் பெற்றது. ஆதலின் 'மாடு' என்னும் சொல்லுக்கே 'செல்வம்' என்று பொருள் உண்டு. 'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடு அல்ல மற்றையவை' என்னும் திருக்குறளில், 'மாடு' என்னும் சொல் 'செல்வம்' என்னும் பொருளில் வந்திருத்தல் காணலாம். இவ்வாறே 'பசு' என்னும் சொல்லுடன் தொடர்புடைய Pecus என்னும் சொல்லினின்றே, பண சம்பந்தமான என்னும் பொருளுடைய Pecuniary என்னும் ஆங்கிலச் சொல் வழக்காறு ஏற்பட்டுள்ளமையும் காணலாம்.[2] இவ்வாற்றால் நாட்டு வளம் பெருகுதற்கு நன்கினிது பயன்படும் கால்நடைச் செல்வங்களைப் போற்றும் முறையிலேயே மாட்டுப் பொங்கல் தொன்று தொட்டுக் கொண்டாடப் பெற்று வருதலை யுணரலாம்.

---

[1] "In the words of Diadorus Siculos : man in earliest times struck with the beauty of the universe, with the splendour and regularity which everywhere were in evidence made, no doubt, that there was some divinity who therein presided and then presented the sun as expressing the likeness of the deity."

—*William Tyler Olcott,*
(Sun Lore of All Ages, p. 42)

[2] "Among pastoral peoples wealth naturally consists in flocks and herds, and wealth is counted by so many head of cattle. Thus the cattle become a kind of legal tender. This happened among the Indo-Europeans, and Indo-European languages have preserved many traces of this primitive state, in which cattle, a man's only wealth, were used as money.

Homer speaks of girls who 'bring oxen' to their fathers...Irish law ordinarily fixed penalties and prices by the head of cattle; a female slave was worth three cows.

In many languages, the same word dignifies both money and cattle. The Latin 'pecunia', for instance, is merely derived from 'pecus'. In German, the word 'Vieh' now applies only to cattle, but the corresponding English 'fee' refers to a certain kind of earned wage. Here the word can be traced to the name for cattle.

—*J. Vendryes,* Language.

நம் தமிழகத்தில் சில பகுதிகளில், 'மஞ்சு விரட்டு விழா' மிகச் சிறப்பாக நடைபெறும். அடங்காத காளைகளை அஞ்சாது எதிர்த்துஆண்மை காட்டி அடக்கும் வீரப் பெரு விழாவாக அஃது இந்நாளிலும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. சங்க இலக்கியங்களுள் ஒன்ருகிய 'கலித்தொகை' என்னும் கவின் மிகு நூலின்கண் உள்ள 'முல்லைக் கலி' என்னும் பகுதியைச் சேர்ந்த பாடல்கள் பலவும், இவ்வீரப் பெருஞ் செயலைச் சிறப்பித்துப் பாடும் முறையிலேயே அமைந்துள்ளன. ஆடு மாடுகளைமேய்க்கும்ஆயர் குலத்தில்தோன்றியருளிய கண்ணபிரான், நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்ளுதற் பொருட்டு, ஏழு வலிய காளைகளை அடக்கி வெற்றி கொண்டான் என்பது வரலாறு. கண்ணபிரானின் இவ்வரிய வீரச் செயலை ஆழ்வார்கள் மிகவும் போற்றித் துதித்துள்ளனர்.

**காணும் பொங்கல்:**

அடுத்ததாகிய மூன்ரும் நாள், 'காணும் பொங்கல்' என வழங்கப் பெறும். சமுதாய வளர்ச்சிக்கு மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து தொடர்பு கொள்ளுதலும், அவ்வப்போது ஒருவரை ஒருவர் சந்தித்து அன்புடன் கலந்து பேசி உறவாடுதலும், மிக மிக இன்றியமையாதனவாகும். சமுதாய நலமும் வளர்ச்சியும் குறித்து, நம் பண்டைச் சான்ரோர்கள் தொன்று தொட்டே, ''காணும் பொங்கல்'' திருநாளை மிகச் சிறப்பாகக் கருதிப் போற்றி வந்துள்ளனர். ''கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தாற் சுற்றப்படும்''; ''அளவளா இல்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று' என்பன போன்ற திருக் குறள்களின் அடிப்படையில் 'காணும் பொங்கல்' அமைந்துள்ளது.

இவ்வாறு பற்பல சிறப்புக்களை உடைய பொங்கல் விழாவானது, நம் தமிழகத்தில் தொன்று தொட்டே நிகழ்ந்து வருகின்றதாயினும், நம் பழந்தமிழ் நூல்களில் இவ்விழாவைப் பற்றிய குறிப்புக்கள் ஏதும் காணப்படவில்லை. 'சிஷ்டாசார சித்தம்' எனப்படும் முறையில், 'மேலையார் செய்வனகள்' எனத் தக்கபடி, நிகழ்ந்து வருவனவற்றில் ஒன்ருகவே, பொங்கல் விழா காணப்படுகின்றது.

இலக்கியங்களைச் சமுதாயக் கண்ணுடிகள் எனலாம். சமுதாயச் செழிப்புக்கும் சூழ்நிலைக்கும், வரலாற்றுக்கும் ஏற்ப இலக்கியங்கள் தோன்றுகின்றன. ஒரு சமுதாயத்தின் உயர்வு தாழ்வுகளையும், வெற்றி தோல்விகளையும், வாழ்க்கை முறைகளையும், நடையுடை பாவனைகளையும், அவ்வச் சமுதாய இலக்கியங்கள் அழகுறப் புனைந்து காட்டி விளக்குகின்றன. இஃது உண்மையே யாயினும், தமிழ் மக்களின் சமுதாய வாழ்வில் சிறப்பிடம் பெறும் ஒரு பெரும் விழாவாக விளங்குகின்ற பொங்கற் பண்டிகையைப் பற்றித் தமிழிலக்கியங்களில் யாதொரு குறிப்பும் காணப்படாமை, மிகவும் வியப்பும் திகைப்பும் விளைவிப்பதாகவே உள்ளது.

என்ருலும், சங்ககால நூல்களுள் மிகவும் புகழ் பெற்றதாகத் திகழும் 'புறநானூறு' என்னும் பழந்தமிழ்ப் பெரு நூலின் இடையில் அமைந்துள்ள ஒரு பாடல், இப் பொங்கல் விழாவைப் பற்றி ஒரு வகையிற் குறிப்பிடுவது போல அமைந்து காணப்படுகின்றது. இப்பாடல் இந்நாளைய பொங்கல் விழாவின் இயல்புகளை நேரே குறிப்பிட்டு நிரல்பட எடுத்து விளக்கும் தன்மையில் அமைந்திலது. எனினும் கூட, ஏறத்தாழ இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், தமிழகத்தின் மலைநிலப் பகுதியைச் சார்ந்து வாழ்ந்திருந்த மக்களின் வாழ்க்கையினை விளக்குவதாக இருக்கின்றது. 'கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனர்' என்பவர் ஒரு சங்க காலப் புலவர். அவர் 'பிட்டங்கொற்றன்' என்னும் வள்ளல் ஒருவனைப்புகழ்ந்து பாடுகின்ருர். பாரிக்குப் பறம்பு மலையும், குமணனுக்கு முதிர

மலையும், பேகனுக்குப் பொதினி மலை யும் போல, குதிரை மலை என்பது பிட்டங்கொற்றனுக்கு உரிமை யுடைய தாகும். குதிரை என்பது ஊர்ந்து செல்லும் பரிமாவினையும் குறிக்கும். ஆதலின், அதனினின்று பிரித்துக் காட்டக் குதிரை மலைக்குத் தலைவ ஞகிய பிட்டங்கொற்றன் என்னும் வள்ளலைச் சாத்தனர் 'ஊரா குதிரைக் கிழவன்' எனச் சிறப்பிக்கின்றார்.

அக் குதிரை மலையில் பற்பல அருவிகள் உள்ளன. அவ்வருவிகளில் இடைவிடாது நீர்பெருகிப் பேரொலி யெழுப்பிக் கொண்டு வந்து விழும். அம்மலை எங்கணும் மூங்கிற் காடுகள் பரந்து நிறைந்திருக்கும். அதன் சரிவு களில் மிளகுக் கொடிகள் படர்ந்து விளங்கும். காந்தட் பூக்கள் மலர்ந்து நறுமணம் பரப்பும். அதன் அடர்ந்த காடுகளில் காட்டுப் பன்றிகள் கூட்ட மாக வசிக்கும். அவைகள் கொழுமை யான பல வகைக் கிழங்குகளின் பொருட்டு, மலைப் பகுதிகளில் ஆங் காங்கு ஆழமாகக் கிளறிக் கொண்டி ருக்கும். அதனல் மலைப் பகுதிகள் எங்கணும் ஏர் கொண்டு உழுதமை போலப் புழுதி மிக்குத் திகழும். அப் புழுதியில், மலை நில மக்க ளாகிய குறவர்கள், தினை விதை களைத் தூவி விதைப்பர். அவர்களின் முயற்சி யில்லாமலே நிலத்தின் செழு மையால் தினைக் கதிர்கள் ஓங்கி வள ரும். குறவர் குல மக்கள் அத்தினைக் கதிர்களைக் கொய்வர். நல்ல பண்டிகை நாள் வரும் செவ்வியை நோக்குகின் றனர். முதல் முதலாக விளைந்துவரும் தினையை நல்ல நாளில் புதிதாகஉண்ண விரும்புகின்றனர். அதன் பொருட்டு அம்மலை நிலக் காடுகளில் வாழ்ந்து பெருகி வளர்ந்துவரும் மானினங்களின் மடியினின்று பால் கறப்பர். கறந்த நுரை மிகுந்த இனிய பாலைக் கொண்டு, சந்தன மரங்களின் கட்டைகளை விற காக இட்டு மூட்டிய அடுப்பில், ஒரு பெரும் பானையை ஏற்றிப் பொங்கல் அடுகின்றனர். கூதளஞ் செடிகள் அழ குற வளர்ந்து, காட்டு மல்லிகைகள் மலர்ந்து மணங் கமழும் நல்ல இனிய சூழலில், அகன்ற பெரிய வாழை இலையில், தாம் அட்டிய பொங்கலைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்துப் பல ராகக் கூடி உண்டு மகிழ்கின்றனர். அத் தகைய இயற்கை வளம் நிறைந்த குதிரை மலைப் பகுதிக்குத் தலைவன் பிட்டங்கொற்றன் எனப் புலவர்பாடிச் செல்கின்றார்.

அருவி ஆர்க்கும் கழைபயில் நனந்தலைக்
குறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக், கிளையொடு
கடுங்கட் கேழல் உழுத பூழி
நன்னுள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதிது உண்மார்,
மரைஆன் கறந்த நுரைகொள் தீம்பால்
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்,
கூதளம் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்
நறைதார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும!
கைவள் ஈகைக் கடுமான் கொற்ற!
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர்! நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே!

—புறநானூறு, 168

இப்பாடல், இந்நாளைய பொங்கல் விழா நிகழ்ச்சியைக் குறிப்பிடும் ஒரு சிறந்த இலக்கியச் சான்று என நாம் கொள்ளலாம். இந் நோக்குடன் இப் பாடலை ஆராய்ந்தால், இப் பாடல் அறிஞர்களுக்குத் தேனும் பாலும் அமு தமுமாய்த் தித்திப்பதாகும். பொங்கல் விழாவின் பழமைக்கும், அது உழவர் களின் திருநாள் என்பதற்கும் இப்பா டல் சான்று பகர்கின்றது. மருதத் திணை வாழ்க்கைக்கு முன்னர்க் குறிஞ்சி முல்லைத் திணை வாழ்க்கையே மக்கட் குத் தொடக்கத்தில் அமைந்திருந்தது என்பதும் இதனற் புலனுகின்றது. முதல் முதல் மக்கள் (Primitive men) எங்ஙனம் உழவு தொழிலைக் கற்றுக் கொண்டனர்? அவர்களின் வாழ்க்கை எவ்வாறு இயற்கையோடு இயைந்திருந் தது? என்பன போன்ற செய்திகளை யும், இப்பாடல் உணர்த்துகின்றது.

பொங்கற் பண்டிகையை 'நன்ஞள் வருபதம்' என்றும்; அறுவடையான பயிரை 'முந்துவிளை யாணர்' என்றும்; பாற்பொங்கல் இட்டு உண்ணுதலை,

நாட்புதிது உண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்,
சாந்த விறகின் உவித்த புன்கம்

என்றும்; நல்ல இனிய சூழலில் எல்லோருடனும் கூடியிருந்து உண்ணுதலை,

கூதளம் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்

என்றும்; இப் புறநானூற்றுப் பாடல் குறிப்பிட்டிருத்தல், அறிந்து மகிழத் தக்கது.

**முடிவுரை :**

தமிழ் மக்களின் கடவுளுணர்ச்சி, நன்றியுணர்வு, சிற்றுயிர்களுக்கு இரங்கிப் பரிவு காட்டும் தன்மை, விருந்தோம்பல், சுற்றம் தழுவுதல், பிறருடன் கலந்து பழகி உறவு கொள்ளுதல், முதலிய சிறந்த பல பண்புகளை விளக்குவதாகவும், அவற்றிற்கு மேன்மேலும் ஆக்கம் அளிப்பதாகவும், 'பொங்கல் விழா' அமைந்து விளங்குகின்றது எனச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்.

— ஆசிரியர்

## கோயில் நிகழ்ச்சிகள்

**1. பாவை மாநாடு :**

1. திருவேடகம் ஸ்ரீஏடகநாத சுவாமி தேவஸ்தானம்.
2. அம்பாசமுத்திரம் ஸ்ரீ கிருஷ்ண சுவாமி தொகுதி தேவஸ்தானம்.
3. மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி தேவஸ்தானம் (மன்னார்குடி வட்டார ஆலயங்களின் சார்பில்).
4. ஸ்ரீ வேதாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், வேதாரண்யம்.
5. சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதி அம்பாள் திருக்கோயில், திருநெல்வேலி.
6. திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீ அக்னீசுவரர் தேவஸ்தானம்
7. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம்.
8. ஸ்ரீ பாடலீசுவரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்.
9. ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மன் தேவஸ்தானம், பாரியூர், கோபிசெட்டிபாளையம்.
10. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருத்தணிகை.
11. ஸ்ரீ அருணசலேஸ்வரர் தேவஸ்தானம், திருவண்ணமலை.
12. திருவகீந்திரபுரம் ஸ்ரீ தேவநாதசுவாமி தேவஸ்தானம்.
13. தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.
14. ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானம்.
15. ஸ்ரீ கொழுந்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம், கோட்டூர், மன்னார்குடி வட்டம்.
16. ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் ஆலயம் (கும்பகோணம் வட்ட ஆலயங்களின் சார்பில்), கும்பகோணம்.
17. ஸ்ரீ பூமிநாத சுவாமி தேவஸ்தானம், வீரவநல்லூர்.
18. வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்.

**2. தெப்போற்சவம் :**

1. ஜம்புகேசுவரர் (ஆனைக்கா அண்ணல்) அகிலாண்டேசுவரி தேவஸ்தானம், திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி-5.
2. ஸ்ரீ மீனட்சி சுந்தரேஸ்வரர் தொகுதி தேவஸ்தானம், மதுரை.

**3. தைப்பூசத் திருவிழா :**

1. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி.
2. பண்பொழி ஸ்ரீ திருமலைக் குமார சுவாமி கோயில்.
3. திருவிடைமருதூர் ஸ்ரீ பிருகத்சுந்தரகுசாம்பிகா சமேத ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்.
4. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், எண்கண்.
5. ஸ்ரீ மத்யார்ஜுனேஸ்வரர் தேவஸ்தானம், இராஜேந்திரம்,

# சிதம்பர சுவாமிகளும், பொங்கல் விழாவும்

## முன்னுரை :

சிதம்பர சுவாமிகள் இற்றைக்குச் சற்றேறத்தாழ 300 ஆண்டுகட்கு முன் வாழ்ந்திருந்தவர். மதுரை மாநகரில், சங்கப் புலவர் வழி வந்த சைவ மரபில் தோன்றியவர். 'மீனாட்சியம்மை கலி வெண்பா' என்னும் நூலைப் பாடி, அருள் பெற்றவர். சிறந்த புலமை நலம் நிறைந்து, 'கவிராசர்' என்று பலராலும் போற்றப் பெற்றவர். விருத்தாசலம் குமார தேவர் அவர்களால் ஆட்கொள்ளப் பெற்றவர். பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் பணித்தருளியபடி வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், அவிரோத வுந்தியார், கொலை மறுத்தல், ஒழிவில் ஒடுக்கம் என்னும் நூல்களுக்கு உரை வகுத்தவர்.

## திருப்போரூர் :

சிதம்பர சுவாமிகள், மதுரை ஸ்ரீ மீனாட்சி யம்மை தம்முடைய கனவில் மயில் வடிவாகத் தோன்றிக் காட்சி தந்து அருளிச் செய்தபடி, திருப்போரூர்க்குப் போந்து, பனைமரக் காடாக இருந்த இடத்தில், புற்று வடிவில் இருந்த முருகனின் திருவுருவைக் கண்டுணர்ந்தார். பழைய கோவிலைப் புதுப்பித்துப் பெரிய அளவில் திருப்பணிகள் பல செய்தார். அத்தலத்தின் புகழை மிகவும் ஓங்கச் செய்தவர் அவரே ஆவர். முருகனின் திருமுன்னிலையில் முறையீடு செய்து கொள்ளும் நிலையில், சிதம்பர சுவாமிகள் பாடியருளிய நூலே 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்பதாகும். சிவபிரானுக்குத் திருவாசகம் போல, முருகனுக்குத் திருப்போரூர்ச் சந்நிதி முறை அமைந்துள்ளது. அது கல்நெஞ்சத்தையும் கரைத்து உருக்கும் பெருஞ் சிறப்புடையது.

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை :

இத்தகைய சிறப்பு மிக்க சிதம்பர சுவாமிகள் அருளிய திருப்போரூர்ச் சந்நிதி முறையில், பொங்கல் விழாவை நினைவூட்டும் வகையில், ஒரு சிறந்த திருப்பாடல் அமைந்து காணப்படுகின்றது. உலக நிலையில் கொண்டாடப் பெறும் பொங்கல் விழாவை, ஞான நிலையில் நாம் கொண்டாடுவதற்குரிய முறையினை விளக்குவதாக, அப்பாடல் அமைந்திருக்கின்றது. நாம் நம் இல்லங்களில் அடுப்பு அமைத்து, விறகிட்டு நெருப்பு மூட்டிக் கலசம் ஏற்றி, உலை நீர் வார்த்துச் சோறு பொங்கி, உண்டு மகிழ்கின்றோம். இது நம்மனோர் கொண்டாடும் பொங்கல் விழா. இப்பொங்கல் விழாவின் அடிப்படையில் அடியார்கள் நாடோறும் நிகழ்த்தி மகிழ்தற்குரிய பொங்கல் விழா, பின் வருமாறு இருத்தல் வேண்டுமெனச் சிதம்பர சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

## அருட்பொங்கல் :

அடியவர்களின் உள்ளமே வீடு. பொங்கலுக்கு முன்னர்ப் போகிப் பண்டிகை நாளில் வீட்டைக் கழுவி மெழுகித் தூய்மை செய்தல் போல, அடியவர்களும் தங்கள் மன மாசுகளைப் போக்கி, காம வெகுளி மயக்கம் முதலிய குற்றங்களை அகற்றிக் கொள்ளுதல் வேண்டும். பொங்கல் இடுதற்கு அடுப்பமைக்குங்கால், அதனை மூன்று கொம்மைகள் கொண்டதாகச் செய்வர். அதுபோல அன்பு-பொறுமை-அவா அறுத்தல் என்னும் அரிய பண்புகளைக் கொண்டு, அழற் குண்டம் அமைத்தல் வேண்டும். அதன்கண் மலமாகிய விறகை இட்டு, ஞானமாகிய நெருப்பை மூட்டுதல் வேண்டும். அதன் மீது உயிராகிய பானையை ஏற்றி, அருளாகிய உலை நீர் வார்த்து, சிவா

னந்தம் என்னும் இனிய உணவைத் தினமும் பொங்குதல் வேண்டும். பின்னர்ச் 'சீவபோதம்' என்னும் உயிரின் மயக்கச் சிற்றறிவு ஆகிய இருள் நீங்கும்படி, மவுனநிலை அடைதலாகிய ஒளி விளக்கு ஏற்றி நிட்டை கூடி, இன்புற உண்ணுதல் வேண்டும். இங்ஙனம், ஆண்டிற்கு ஒருமுறை யன்றி, நாடோறும் பொங்கல் விழா நிகழ்த்தி இறைவனை வழிபட்டு மகிழ்தல், அடியவர்களுக்கு உரிய இயல்பாகும் எனப் பின் வரும் பாடலில், சிதம்பர சுவாமிகள் தெரிவிக்கின்றார். அப்பாடல் வருமாறு:

> அடியார் நிமலத் திருவகத்துள்,
> அன்பு பொறுமை அவாஅறுத்தல்
> அடுப்பாய் அமைத்து, மலவிறகின்
> அதிக ஞானக் கனல்மூட்டி,
> மடியாது இருந்த உயிர்க்கலசம்
> வழிய அருட்பேர் உலைவார்த்து,
> மாறாப் பெருமைச் சிவானந்த
> மதுரச் சோறு தினம் பொங்கி,
> விடியாச் சீவ போதஇருள்
> வீய மவுனச் சுடர்விளக்கு
> விளக்கி, இருந்த படியிருந்து,
> மேலாம் சிற்றில் விளையாடும்
> செடிதீர் அகத்தோர் புகழ்வாலை
> சிறுவா! சிற்றில் சிதையேலே!
> தேரூர் வீதிப் போரூரா!
> சிறியேம் சிற்றில் சிதையேலே!
> —திருப்போரூர்ச் சந்நிதி முறை

**இலக்கியப் பொங்கல் :**

பொங்கல் விழாவின் இயல்பினை அடியவர்கள்மேல் ஏற்றி அழகுற விளக்கி, உருவகம் செய்து, முருகன் துதியாகச் சிதம்பர சுவாமிகள் பாடியிருக்கும் கவிதைத் திறன் மிகவும் சுவை யுடையதாகத் திகழ்கின்றது. இதனை ஒரு வகையில் ''இலக்கியப் பொங்கல்'' (இலக்கிய நூலில் வரும் பொங்கல், அனைவரும் பின்பற்றும் நிலையில் எடுத்துக் காட்டாக விளங்கும் பொங்கல்) எனக் கூறலாம். முருகனைப் பற்றிய துதி நூலில், பொங்கல் விழாவின் தத்துவ நுட்பத்தினை விளக்கும் வகையில், சிதம்பர சுவாமிகள் இப்பாடலை அமைத்திருத்தற்கு, ஏதேனும் ஒரு காரணமும் இயைபும் இருந்திருத்தல் வேண்டும். இப்பாடலை அவர் பாட நேர்ந்த நாள் பொங்கல்பண்டிகை நாளாகத் தற்செயலாக அமைந்து இருந்திருத்தல் கூடும். இவ்வாறு நேர்தல் ஒருவகையில் இயல்பே யாகும்.

**நற்செயல் நிகழ்ச்சி :**

மனிதர் குல மாணிக்கமாகிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தாம் எழுதிய ''இந்தியாவின் புதுநிலைக் காட்சி'' (The Discovery of India) என்னும் நூலில், தாம் புத்தரைப் பற்றியும், அவர்தம் மறைவைப் பற்றியும், புத்தர் மறைந்தருளிய வைசாக பூர்ணமி நாளிலேயே தற்செயலாக எழுத நேர்ந்தமை, வியப்புக்குரியதாகும் எனக் குறிப்பிடுகின்றார்.[1] ஆசிரியர் மறைமலை அடிகள் தாம் இயற்றிய 'மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலில், கார்த்திகைத் திருவிழாவினைப் பற்றித் தற்செயலாகக் கார்த்திகைத் திருநாளன்றே எழுத நேர்ந்தமையினை நினைந்து, வியந்து குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை :**

இங்ஙனமே, நமது சிதம்பர சுவாமிகளும், திருப்போரூர்ச் சந்நிதி முறையில் முருகனோடு நேரே இயைபு இல்லாத பொங்கல் விழாவினை, ஒருவகையால் இயைபுபடுத்திப் பாடி யிருத்தற்குக் காரணம், பொங்கல் விழா நாளில் அவர் அப்பாடலைப் பாடியருள நேர்ந்ததே யாகும் போலும் என நாம் கருத வாய்ப்பு உள்ளது.

[சென்னைத் தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில், கனம் அமைச்சர் திரு. G. பூவராகன், B.Sc., Hons. அவர்களின் தலைமையில், பொங்கற் புது நாள் விழாவில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியவை.
ஆசிரியர்].

---

[1] "Mahavira, the founder of Jainism, and Buddha were contemporaries, and both came from the kshatriya warrior classes. Buddha died at the age of eighty, in 544 B.C., and the Buddhist era begins then ... (It is an odd coincidence that I am writing this on the Buddhist New Year's Day, 2488—the day of full moon—the Vaisaka Purnima, as it is called.)"

—*Shri Jawaharlal Nehru.*
The Discovery of India.

# முருகன் பெருமை

**முன்னுரை :**

ஒரு நாட்டில் வாழும் மக்களின் பண்பிற்கு ஏற்பவே, அவர்கள் வணங்கும் தெய்வத்தின் இயல்புகளும் அமைகின்றன. எத்தியோப்பியர்கள் தங்களைப் போலவே, தங்கள் தெய்வமும் கருநிறமும் தட்டை மூக்கும் உடையனவாகக் கருதுகின்றனர்.[1] திரேசிய மக்கள் தங்கள் கடவுளைத் தங்களைப்போலவே, நீலநிறக்கண்களும், செம்பட்டை மயிரும் கொண்டனவாகக் கருதுகின்றனர். அம்முறையில் ஆராய்ந்தால், தமிழ் மக்களின் உயரிய நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றின் உருவகமாக விளங்கும் முருகப் பெருமானின் அருமை பெருமைகளை, நாம் அறிந்துணர்ந்து கொண்டு மகிழலாம்.

**தொல்காப்பியம் :**

முருகன் வழிபாடு தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றது. மக்கள் முதன்முதல் தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்றும், அதன்கண்ணும் குறிஞ்சித் திணைப்பகுதியே யாகும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கும் மிக முற்பட்டதெனக் கருதப்படும் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம், முருகனைக் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வம் என்று சிறப்புறக் குறிப்பிடுகின்றது. இவ்வாற்றால் முருகன் வழிபாடு மிகத் தொன்னெடுங்காலம் முதலே நிகழ்ந்து வருதல் தெளியப்படும்.

**இயற்கைத் தெய்வம் :**

முருகன் இயற்கைத் தெய்வம். இயற்கையோடு இயைந்த இன்ப எழில் வாழ்க்கை நடாத்தி வந்த பழந் தமிழ்ப் பெரு மக்கள், முருகனை இயற்கையின் வாயிலாக இனிதறிந்தனர். முருகனின் திருவுருவை இயற்கைக் காட்சியின் வாயிலாகக் கண்டு கருதிக் கவினுறப் போற்றிக்களித்தனர். நீலக் கடலில், காலைச் செங்கதிரவன் தோன்றும் அழகிய இனிய காட்சியைக் கண்டு மகிழ்ந்த பழம் பெரும் தமிழ்ச் சான்றோர்கள், அக்காட்சியின் வாயிலாக, நீல மயில் மீது இவர்ந்து வரும் செந்நிறம் உடைய முருகனை நினைந்துணர்ந்து, மிகப் பழங்காலம் முதலே வழிபடத் தொடங்கினர் என்பர் அறிஞர்.

**சங்க நூல்கள் :**

முருகனைக் குறித்து முன்னைத்தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் விளக்கி யருளிச் செய்துள்ள கருத்துக்கள், நினைத்துணருந்தோறும் அனைத்தெலும்பும் உள்ளுருக ஆனந்தத் தேன் சொரியும் இயல்பினவாக உள்ளன. முருகன் தன் அடியவர்கள் நினைத்தவற்றை யெல்லாம் நிறைவேற்றி முற்றுவித்துத் தருதலில் சிறந்தவன் என்று, புறநானூறு குறிப்பிடுகின்றது.

முருகன் அருளே வடிவானவன். தன் அடியவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு, அவர்களுக்கு அருள் புரிபவன், ஆதலின் தண்டிக்கும் தன்மையே இல்லாத சிறந்த கடவுள் என்னும் கருத்தில், 'தெறல் அரும் கடவுள்' என்று, அகநானூறு என்னும் சங்க நூல் முருகனைச் சிறப்பித்துக் கூறுகின்றது.

---

[1] "Our mental pictures of God are as varied as we are. The Ethiopeans make their Gods black and snub-nosed ; the Thracians say theirs have blue eyes and red hair...A triangle, if only it had the power of speech, would say that God is eminently triangular, and a circle would say that the Divine Nature is eminently circular, and in this way each thing would ascribe its own attributes to God and make itself like unto God, while all else would appear to it deformed."

—*Dr. S. Radhakrishnan*, An Idealist View of Life.

**தமிழ்க் கடவுள் :**

முருகன் தமிழ்க் கடவுள். முருகனே தமிழ் மொழியை முதன் முதலில் அகத்தியருக்கு அறிவுறுத்தினன் என்பது வரலாறு. மேலும் சிவபிரானுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான்.

> கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
> கொஞ்சித் தமிழால் பகர்வோனே

என்பது அருணகிரி நாதர் திருப்புகழ். கூடல் மா நகரில், ஆலவாய் அவிர் சடைக் கடவுளுடன் குன்றம் எறிந்த குமரவேளும் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தான் என்பர் நக்கீரர். ''சங்கத் தமிழின் தலைமைப் புலவன்'' என்பர் குமர குருபர அடிகள். தமிழ் மொழியின் மெய் எழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண்களாகவும்,[1] தமிழில் வல்லினம் மெல்லினம் இடையினம் என வழங்கும் எழுத்துக்கள் ஆறும் திருமுகங்களாகவும், தமிழின் அகரம் முதலிய உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் தோள்களாகவும், தனி நிலை எனப்படும் ஆய்தமே, ஒப்புயர்வற்ற நிலையில் தனிச் சிறப்புற்றுத் திகழும் வேலாகவும் கொண்டு, தமிழ்த் தெய்வமாகிய முருகன், தமிழ் வடிவினனாக விளங்குகின்றான்.

> கண்நிகர் மெய்யும், சென்னிக்
> கணம்உறழ் இனத்தின் கூறும்,
> திண்ணிய புயங்க ளேபோல்
> திகழ்தரும் உயிரும், வேறொன்
> றெண்ணிடற் கரிய தாகும்
> எஃகமும், இயலிற் காட்டும்
> புண்ணிய முருகன் செய்ய
> பொற்பதம் போற்றி வாழ்வாம்

என்பது, புலவர் புராணம் பாடிய திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் அவர்களின் அரிய திருப்பாடல்.

**பண்பு நலங்கள் :**

இந்து சமயத்திற்குரிய வேதாகம உபநிடதங்கள் முதலியன எல்லாம், கடவுளைச் சத்து—சித்து—ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்புகளும் ஒருங்கியைந்த பொருளாகக் கூறும். அவற்றுள் சத்து என்பது சிவம்; சித்து என்பது திருவருளாகிய சக்தி; ஆனந்தம் என்பது முருகன். இவ்வுண்மையினையே சிவபிரான் கோயில்களில் எல்லாம் வைத்து வழிபடப்பெறும் சோமாஸ்கந்த மூர்த்தம் உணர்த்துகின்றது.

மேலை நாட்டு நாகரிகப் பண்பாடுகள் அனைத்திற்கும் சாலவும் அடிப்படை வகுத்தவர்கள், கிரேக்க நாட்டு மக்கள் என்பர். அக் கிரேக்க நாட்டு மக்கள் உண்மை (Truth), நன்மை (Goodness), அழகு (Beauty) என்னும் மூன்றையும் மிகச் சிறந்த பண்புகளாகப் போற்றுவர். அவற்றுள் உண்மையைச் சிவம் என்றும்; நன்மையைச் சக்தி என்றும்; அழகை முருகன் என்றும் நாம் கூறுதல் பொருந்தும். முருகன் என்னும் சொல்லுக்கு அழகு, இளமை, மணம், கடவுட் டன்மை என்னும் பொருள்கள் இருத்தல், இங்கு நாம் கருதுதற்குரியது.

முருகன் அடியவர்களுக்கு ஞான குருவாக எழுந்தருள்கின்றான். பழநி ஆண்டவன் வடிவில் யோகியாக ஒளிர்கின்றான். வீரர்களுக்கெல்லாம் மிக்க பெரு வீரனாக விளங்குகின்றான். தேவர்களுக்கெல்லாம் தேவனாகத் திகழ்கின்றான். தவமுனிவர்க ளெல்லாம் முருகனையே தம் வழிபடு கடவுளாகக் கொள்ளுகின்றனர். கலைஞர்களுக்கும், புலவர்களுக்கும் அவன் கருணை புரிகின்றான்.

குழந்தைகளுக்குக் குழந்தை வேலன் ஆகவும், இளைஞர்களுக்குப் பாலசுப்பிரமணியன் ஆகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம் கொண்ட அண்ணல் ஆகவும், வீரர்களுக்குத் தேவசேனாபதி ஆகவும், மந்திரோபதேசம் பெற விரும்பி வழிபடும் அன்பர்களுக்குச் சுவாமிநாதன் ஆகவும், இல்லற நிலையினர்க்கு வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணிய

[1] தந்தையாகிய சிவபிரானுக்கு முக்கண்கள் உள்ளமை போல, முருகனாகிய மைந்தனுக்கும் முக்கண்கள் உண்டு என்றும், ஒரு முகத்திற்கு மூன்றாக முருகனின் ஆறு திருமுகங்களுக்குப் பதினெட்டு கண்கள் உண்டு என்றும், பெரியோர்கள் கூறுவர்.

சுவாமி ஆகவும், பற்றற்ற தூய ஞானத் துறவற நிலையினர்க்குப் பழநி யாண்டவர் ஆகவும் பிறவாறும் விளங்கி, அவரவர்களுக்கு ஏற்ற நிலைகளிற் பல வேறு வகைகளில், முருகப் பெருமான் அருள்புரிந்து காத்து வருகின்ருன்.

**களவும் கற்பும்:**

தமிழிலுள்ள அகப் பொருள் இலக்கண நூல்கள் கூறும் கற்பு நெறி, களவு நெறி என்னும் இருவகை நெறிகளையும், தெய்வயானையின் திருமணத்தாலும், வள்ளியம்மையின்திருமணத்தாலும் உலகுக்கு முறையே உணர்த்தியருளினன் முருகன். வள்ளி அம்மையின் திருமணம் ஐம்புலன்களாகிய வேடர்களிடையே அகப்பட்டு உழன்று வரும் உயிர்களை, இறைவன் குருவாக வந்து தடுத்தாட் கொண்டருளும் தன்மையினையே, தத்துவ முறையில் தகவுற உணர்த்துகின்றது. ''பணியாது? என வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனுக'' முருகன் விளங்குதல், அவன் அடியார்களுக்கு எளியனுகும் இனிய இயல்புடையவன் என்னும் உண்மையினையே உருவக முகத்தால் உணர்த்துகின்றது.

**கந்த புராணம்:**

முருகனின் வரலாறு கூறும் கந்த புராணம், உண்மையில் ஆராய்ந்துணர்ந்தால், ஒருவகையில் நமது சொந்த புராணமே யாகும். கந்த புராணத்தில் வரும், சூரபதுமன் சிங்கமுகாசுரன் தாரகாசுரன் என்னும் மூவரும், முறையே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களைக் குறிப்பவரே யாவர். தாரகன் கன்ம மலம். சிங்கமுகன் மாயா மலம். சூரபதுமன் ஆணவ மலம். கன்ம மலம் முதலில் அழியும். ஆதலின் தாரகாசுரன் முதலில் இறந்தான். மாயா மலம் அறிவை விளக்கும், ஒரோ வழி மயக்கமும் செய்யும். அம்முறையில் சிங்கமுகாசுரன் நல்லியல்பும் தீய இயல்பும் ஒருசேரக் கொண்டிருந்தான். ஆணவ மலம் ஆவாரக சக்தி, அதோ நியாமிகா சக்தி என்னும் இரு திற ஆற்றல்கள் உடையது. அவ்வாறே சூரபதுமனும் மனித உடலும் குதிரைத் தலையும் கொண்டு, சூரன், பதுமன் என இருவேறு உடல்கள் ஒன்றி நின்ருன். ஆணவ மலம் ஆற்றல் கெடுமே யன்றி, என்றும் அழிவதில்லை என்பது சைவ சித்தாந்தம். அம்முறையில், சூரபதுமன் தன் தீய இயல்புகள் அழிந்து சேவலும் மயிலுமாக முருகனுக்குத் தொண்டு பூண்டு என்றும் அழியாத பெரு நிலை பெற்ருன். அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும். சூரபதுமனுகிய அஞ்ஞானப் பிழம்பை, மெய்ஞ்ஞானமாகிய வேற் படை வென்றது. முருகனுக்கு வேல் ஞான சக்தி; வள்ளி அம்மை இச்சா சக்தி; தெய்வயானை கிரியா சக்தி. முருகனின் மயில் விந்து தத்துவம், கோழி நாத தத்துவம் என்னும் உண்மைகளைக் கந்த புராணம் கவினுற விளக்குகின்றது.

**ஆறுபடை வீடு:**

முருகன் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு தலங்களில் எழுந்தருளி விளங்குகின்ருன். முருகன்படை வீரர்களுக்கெல்லாம் தலைசிறந்த படை வீரன் ஆதலின், அவன் எழுந்தருளி விளங்கும் தலங்கள், படை வீடுகள் எனப் பெயர் பெற்றன. ஆறு படை வீடுகளிலும் முறையே ஒளிவடிவம், அருள்வடிவம், தவவடிவம், மந்திர வடிவம் எளிமைவடிவம், வியாபக வடிவம் என்னும் நிலைகளில், முருகன் விளங்கும் இயல்பினைத் திருமுருகாற்றுப் படை சிறப்புற விளக்குகின்றது.

**சமஷ்டித் தெய்வம்:**

முருகனை வணங்கினுல், பல கடவுளரை வணங்கி அடையும் பயன்களையெல்லாம் நாம் ஒருங்கே பெறலாம். மைந்தனுக்குச் செய்யும் சிறப்பால், தந்தை தாயராகிய சிவபிரானும் உமாதேவியும், தம்பியைப் போற்றுத

லால் தலைமையனுகிய விநாயகரும், மருகனை வழிபடுதலால் மாமனுகிய திருமாலும், தலைவனை வணங்குதலால் தேவரும், முனிவரும் ஆகிய அனைவரும் மகிழ்ச்சி அடைவர். ஆதலின் முருகன் வழிபாடு மிக்கசிறப்புடையது. எல்லாக் கடவுளரின் இயல்புகளும் தன்பால் ஒருங்கே கொண்ட முருகனைச் 'சமஷ்டித் தெய்வம்' என்பர் பெரியோர். முருகன்பால் நாம் அருளை எளிதாகவும் விரைவாகவும் பெறலாம் 'மழக் கை இலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்' என மாணிக்க வாசகர் பாடியது, முருகன் திறத்தில் மிகவும் பொருந்துவதாகும்.

**வேளைக்காரன் :**

தனது அன்பர்களாகியஅடியவர்களை உற்ற வேளையில் வந்து காக்கும் சிறப்பால், முருகன் 'வேளைக்காரன்' எனப்படுவான். வேளைக்காரர் என்னும் படையைச் சேர்ந்த சிறந்த வீரர்கள், எங்ஙனம் உற்ற வேளையில் உயிர் கொடுத்தும் தங்கள் அரசனைக் காப்பாற்றும் உறுதியும் கடமையும் உடையவரோ, அங்ஙனம் தன் அடியவர்களைக் காத்தலில் உறுதியும் கடப்பாடும் பூண்டு கொண்டிருப்பவன் முருகன். அச் சிறப்பை வலியுறுத்தவே அருணகிரிநாதர் முருகனை 'வேளைக்காரன்' என வியந்து கூறித் துதித்துப் போற்றுவர்.

முருகன் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தால், எத்தகைய கொடியவர்களும் திருந்தி நலம் பெற்று உய்வர். சில தெய்வங்கள் தம்மை எதிர்த்த பகைவர்களை அறவே அழித்தொழித்ததாக நாம் நூல்களில் அறிகின்றோம். ஆனால், முருகனே தன்னை எதிர்த்து நின்ற கொடியவனுகிய சூரபதுமனையும் நல்லவனுக்கித் திருத்தி ஆட்கொண்டு காத்தருளினுர்.

தீயவை புரிந்தா ரேனும்
 குமரவேள் திருமுன் உற்ருல்
தூயவர் ஆகி மேலைத்
 தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ?
 அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்ருே
 வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!
—கந்த புராணம்.

**கற்பக மரம் :**

முருகன் தன் அடியவர் வேண்டும் நலங்களை யெல்லாம், அவர்கள் வேண்டியவாறே விரும்பிக் கொடுத்தருளும் பெருந்தன்மை வாய்ந்தவன். கேட்டன எல்லாம் கொடுத்தருளும் மாட்சிமையால் அவனைக் கற்பக மரம் போல்பவன் எனக் கவிஞர்கள்புகழ்ந்து பாடுவர். வள்ளி தெய்வயானையரைக் கிளைகளாகக் கொண்டு, பல்லுயிர்க்கும் அருளைப் பூத்து, அவற்றின் பிறவியைக் காய்த்திட்டு, அன்பர்கள் எல்லோருக்கும் முக்திக் கனியை அளிக்கும் கற்பக மரமாக முருகன் விளங்குகின்ருன்.

கல்லகம் குடைந்த செவ்வேற்
 கந்தன்ஓர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான
 வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க்கு அருளைப் பூத்துப்
 பவநெறி காய்த்திட்டு அன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
 இருங்கனி உதவும் என்றும்
—கந்த புராணம்.

**கலியுகத்தும் வரதன் :**

முருகன் கலியுக வரதன் என்பர். பாம்பன் குமர குருதாச சுவாமிகள், அங்ஙனம் கூறின் முருகன் கலியுகத்தில் மட்டுமே வரம் கொடுப்பவன் எனப் பொருள்பட்டுப் பிழையாய் முடியுமாதலின், எல்லா யுகங்களிலுமே அடியவர்களுக்கு வரங்களைத் தரும் இயல்புடைய முருகன், கொடியதாகிய கலியுகத்திலுங்கூடப் பேரருள் சுரந்து வேண்டும் வரங்களை விரைந்து கொடுக்கும் பெருமாட்சிமையுற்றுப் பிறங்குகின்ருன் என்னும் கருத்தமையக் ''கலியுகத்தும் வரதனும் கந்தன்'' என்றே கூறுதல் வேண்டும் என ஒருகால் தம் மாணவர்களுக்குப் பணித்தருளினுர் என்பர். இவ்வாற்ருல் முருகனின் அருள் மாட்சிமையை நாம் பெரிதும் உணரலாம்.

**முடிவுரை :**

முருகனை அன்புடன் வழிபட்டு' முருகா முருகா எனப் பலகாலும்கூறித் தியானிப்பவர்கள், என்றும் குறை யாத பெருஞ் செல்வத்தைப் பெறுவார் கள்; அவர்களை ஒருபோதும் எத்த கைய துன்பமும் அணுகாது; அவர் களுக்கு எந்த ஒரு நோயும் வராது. அவர்கள் சுற்றமும் கிளையும் சூழ, உயர்ந்த இன்பங்களை நுகர்ந்துகொண்டு நீடூழி காலம் வாழ்வார்கள்.

முருகா எனஉனை ஓதும்
தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்;
வியாதி அடைந்து நையார்;
ஒருகால மும்துன்பம் எய்தார்;
பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாறு புகார்;
சமரா புரிப் புண்ணியனே.

—திருப்போரூர்ச் சந்நிதி முறை.

—ஆசிரியர்.

---

## செய்திச் சுருக்கம்

### தலவழிபாட்டுச் சுற்றுப் பயணம்:

சென்னை திருமயிலையில் தொடங்கப் பெற்றுள்ள இந்து சமயப் பரப்புநர்—விளக்குநர் பயிற்சி நிலைய மாணவர்கள், நம் தலங்களையும், கோயில்களையும் நேரிற் சென்று பார்வையிட்டு அறிந்து பயன் பெறுவதோடு, பொது மக்களும் அறிந்து பயன் கொள்ளும்படி அவர்களே முன்னின்று ஏற்பாடு செய்து பின்னர்ப் பணியாற்றுதலும் வேண்டும் என்னும் நோக்கத்துடன், நமது அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் தலவழி பாட்டுச் சுற்றுப் பயணம் ஒன்று, ஜனவரி மாதம் 26, 27, 28 தேதிகளில், மூன்று நாட்கள் ஏற்பாடு செய்யப் பெற்றது.

இந்து சமயப் பரப்புநர்—விளக்குநர் பயிற்சி நிலைய மாணவர்கள், நமது தலங்களையும் கோயில்களையும் நேரிற் சென்று கண்டு, அவற்றின் பழமை பெருமை தெய்விகம் வரலாறு கலைத் திறன் ஆகிய பலவற்றை உணர்ந்து கொள்ளுதலும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆகிய நம் சமயச் சான்றோர்களின் திருவடி பதிந்த புனித இடங்களைச் சென்று காண்பதனால், அவர் களின் திருவருள் நலம் பதியப் பெறுதலும், அதன் பயனாக மக்கட் சமுதாயத்தில் இக்கால நிலைக்கு ஏற்ப அறிவார்ந்த சமய ஒழுக்கப் பண்பாட்டு நெறிகளைப் பரப்பும் அறிவாற்றல் நலங்களைப் பெறுதலும், இப்பயணத்தின் குறிக்கோளாகும்.

பயணத்தின் போது பயிற்சியாளர்களுக்குப் பயன்படுவதன் பொருட்டுத் ''தலக் குறிப்புகள்'' என்னும் சிறு நூல் அச்சிடப்பெற்று, நமது அறநிலைய ஆணையர் திரு. எம்.எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ.,பி.எல்., அவர்களால், 25-1-1967 அன்று மாலை திருமயிலை ஸ்ரீ கற்பகாம் பாள் கலியாண மண்டபத்தில் வெளியிடப் பெற்றது.

திருமயிலை, திருவான்மியூர், திருப்போரூர், மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், மதுராந்த கம், திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், திருவாமூர், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருவகீந்திரபுரம், சிதம்பரம், வடலூர், விருத்தாசலம், திருப்பெண்ணாகடம், திருவண்ணாமலை காஞ்சிபுரம், திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், ஆகிய தலங்களுக்குப் பயிற்சி யாளர்கள் அழைத்துச் சென்று காண்பிக்கப் பெற்றனர். இப்பயணத்தில் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சென்னைத் துணை ஆணையர் திரு. ஏ. சிதம்பரம், பி.ஏ.,பி.எல்., சென்னை உதவி ஆணையர் திரு ஆர். தண்டமாணி, பி.எஸ்ஸி., பி.எல்., திருக் கோயில் ஆசிரியர் திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., பயிற்சி நிலையத் தலைவர் மகா வித்துவான் திரு கே. ஆறுமுக நாவலர், சித்தாந்தக் கலைச் செல்வர் திரு க. வச்சிரவேல் முதலி யார், பி.ஏ., எல்.டி., திரு இராமதுரை, பி.ஏ., திரு நாராயணசாமி, பி.ஏ., முதலிய பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயணத்தின் போது, ஒவ்வொரு கோயிலிலும் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்து வர வேற்று வழிபடச் செய்தும், விருந்தளித்தும், அறங்காவலர்களும் நிர்வாக அதிகாரிகளும் ஆய்வர் களும் பேருதவி புரிந்து மகிழ்வித்தனர். கடலூர் உதவி ஆணையர் திரு. P.S. கோபாலசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆங்காங்குச் சிறந்த பல ஏற்பாடுகள் செய்து மிக்க உதவி புரிந்தமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

தலவழிபாட்டு அறிவுநெறிச் சுற்றுப் பயணத்தில், கலந்து கொண்ட பெண்கள் எழுவரும், ஆண்கள் நாற்பதின்மரும் ஆகிய பயிற்சியாளர்கள், சென்னைத் துணை ஆணையர் அவர்களின் சிறந்த மேற்பார்வையினாலும், ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அருளாசியினாலும், உடல் தளர்ந்தும் உளம் தளராமல் மகாவித்துவான் ஸ்ரீ நாவலர் அவர்கள் உடன் வந்தமையி னாலும், இப்பயணத்தின் வாயிலாக எத்துணையோ பல இனிய நலங்களைப் பெற்றுப் பயனடைந்து மகிழ்ந்தார்கள்

—ஆசிரியர்.



திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன்

# திருமுருகன் சிறப்பு

உலகின் நடுஇடத்தில் ஓங்குமலைப் பாங்கர்
இலகுமக்கள் தோன்றினர் என்பர்;—நிலையதுவேல்
செந்தமிழ் நாட்டுத் திருமுருகன் தான், பண்டே
முந்துபெருந் தெய்வம் மொழி! [1]

நீல நிறக்கடல் நின்றிளஞ் செஞ்ஞாயிறு
ஏலமிகப் பேரழகா ஈண்டுதித்தல்—கோலமிகும்
தெய்வ இளமுருகன் செவ்வேட் குரிசில்என
மெய்கண்டார் சான்றோர் வியந்து. [2]

'முருகொத்தி முன்னியது முற்றலின்நீ' என்று
பெருகச் சிறந்தெடுத்துப் பேசும்—ஒருகுறிப்புச்
சங்கப் புறம்சாற்றும்; தக்கஅறிவு இச்சைதொழில்
நன்கவன்தன் ஆற்றல்அத னுல். [3]

'தெறலருஞ் சீர்க்கடவுள்' என்றுசெப்பிச் சங்க
நிறைபெருஞ் சான்றோர் நிகழ்த்தும்—இறையவனும்
இன்ப எழில்முருகன், யாவர்க்கும் இன்னருளே
நன்றுமிகச் செய்வன் நயந்து. [4]

தமிழ்க்கடவுள்; செய்ய தமிழ்வடிவன்; மேலாம்
தமிழ்க்குரவன்; நல்லதமிழ்ச் சான்றோன்;—தமிழ்ப்புலவன்;
செந்தமிழில் வைதாலும் தீங்கொழித்துக் காத்தருள்வோன்;
நந்தம் முருகன்என்றே நாடு. [5]

களவுநெறி கற்புநெறி என்றிரண்டு காதல்
உளநெறியும் மக்கட் குணர்த்த—வளம் அமையும்
வள்ளிதெய்வ யானை மணம்புணர்ந்தான்; இச்சைதொழில்
கொள்சத்தி என்றும்அவர்க் கூறு. [6]

ஐம்புல வேடரிடை ஆழ்ந்துழலும் ஆருயிரை
எம்பெருமான் ஆட்கொண் டினிதருளும்—செம்பொருளே,
வள்ளித் திருமணமாம் மாண்பார் வரலாறென்
றுள்ளியுணர்ந் துய்க உவந்து. [7]

அடியார்க் கெளியனும் தன்மை அதனைப்
படியார்க் குணர்த்தும் படிக்கே,—கொடியார்க்கும்
மெல்லிடைநல் வள்ளியின்பால் மிக்க விநோதமெலாம்
பல்வகையிற் செய்தான் பரன்! [8]

கங்கை யமுனை கடலிற் கலந்தாற்போல்
மங்கைதெய்வ யானையொடு வள்ளியம்மை,—நங்கள்
இறையாம் முருகன் இருபுறத்தும் சார்ந்து
முறையே விளங்குகிற்பர் முன். [9]

நங்கள் முருகனுக்கு நாதமும் விந்துவுமே
இங்கினிய நல்ல எழிற்கொடியாய்த்—துங்கமிகும்
தூயபெரும் ஊர்தியாய்த் தோன்றி விளங்குதலை
நேயமிகப் போற்றுகிற்போம் நேர்ந்து. [10]

ஓங்கியுயர்ந் தாழ்ந்தகன்று நுண்ணியதாய் உற்ளொளிரும்
பாங்குமிகு சீர்வேற் படையதுதான்—ஈங்கே
அறிவினியல் தேற்றிஅருள் ஞானசத்தி யாகச்
செறிவுற் றிலங்கும் சிறந்து. [11]

சூரபன்மன் ஆணவம்; சிங்கமுகன் தொல்மாயை;
தாரகன் கன்மமலம் தான்என்க!—போரினில்வெல்
நம்முருகன் தான்நல்ல ஞானகுரு! மற்றவன்வேல்
செம்மையுறு ஞானம்எனத் தேர். [12]

தக்கார் அலாதாரைச் சாகவைக்கும் சிஃறெய்வம்;
எக்காலும் அஃதுருற்றுன் எம்முருகன்;—மிக்கோனுய்த்
தன்னை எதிர்த்துநின்ற சூரனையும் தான்,முருகன்
நன்னர்க்காத் தேற்றுன் நயந்து. [13]

தீயவை செய்வாரும் செவ்வேள் திருமுனுற்றுல்
தூயவர் ஆகிச் சுகம்பெறுவர்;—நேயமிகச்
சூரபன்மன் தானும்அன்றே? தோகைமயி லாய்முருகன்
பேரருள்பெற் றுய்ந்தான் பெரிது. [14]

சத்துச்சித் தானந்தம் தான்என்றே இந்துமதத்
தத்துவ நூல்களெலாம் சாற்றியிடும்—முத்தன்மை
தம்முள், சிவம்சத்து; சத்தி சித்து; ஆனந்தம்
நம்முருகன் என்றே நவில். [15]

உண்மையொடு நன்மை உயர்அழகு என்பவற்றை
வண்மைஒளிர் பண்புகளா வாழ்த்துகிற்பர்!—ஒண்மை
தரும்சிவமே உண்மை;சத்தி நன்மை; அழகோ
திருமுருகன் என்றே தெளி. [16]

கருணை மிகுவேலைக் காரன்என்றே சான்றோர்
அருணகிரி போற்றும் அதனுல்,—தெருள்நயந்த
நல்லோர்கள் தம்மை நயந்து நனிகாக்க
வல்லோன் முருகன்என்றே வாழ்த்து. [17]

அருட்குரவன்; யோகி; ஆன்றபெரு வீரன்;
தெருட்பெருகு தேவர்கள்தம் தேவன்;—இருட்டெறூஉம்
செம்மைத் தவநிலையோர் தெய்வம்; கலைஞர்இறை;
மெய்ம்மை முருகன் மிக. [18]

விரும்பும் நலங்களெலாம் மிக்களித்துக் காக்கும்
பெருந்தகைமை வாய்ந்தொளிரும் பெம்மான்,—அரும்பெறல்நம்
செய்ய தமிழ்முருகன். ஆதலின்சீர்க் கற்பகமா
மெய்யவனைச் சொல்வர் வியந்து. [19]

'கலியுகத்தும் நல்வரதன் கந்தன்' என்றே சான்றோர்
மலிசிறப்பிற் போற்றி வாழ்த்தும்—நலமிகுத்த
தெய்வத் தலைவன், திருமுருகன் தாள்இறைஞ்சி
வையத்து வாழ்வோம் மகிழ்ந்து. [20]

முருகா எனஓதும் மூதக்கார் எல்லாம்
அருகாத செல்வம் அடைவார்;—ஒருகாலும்
துன்பமுறுர்; நோய்அணுகார்; சுற்றமொடு சூழ்ந்துயர்ந்த
இன்பமெலாம் துய்த்துவப்பர் ஈண்டு. [21]

—ஆசிரியர்

# தென்கிழக்கு ஆசியாவில் திருவாசகமணி

உலகத் தமிழ் அறிஞர் கருத்தரங்கிற் பங்கு கொள்ள 15-4-1966 அன்று தமிழக முதல்வர் தலைமையின்கீழ் விமான மூலம் கோலாலம்பூர் சென்றடைந்த குழுவினுள் ஒருவர், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள்.

மகாநாடு முடிந்த பின்னும் அந்நாட்டிலுள்ள தமிழன்பர்கள், சமயப் பெரியோர்கள் முதலியவர்களது வேண்டுகோளுக் கிணங்கி அந்நாட்டில் சமயப் பிரசாரம் செய்யும் பொருட்டுத் திருவாசகமணி அங்கேயே தங்கி விட்டார். அவர் தம்முடைய சமயப் பிரசாரப் பணியை அந்நாட்டில் வெற்றிகரமாக ஆற்றுதற்கு முன், இந்திய ஜனதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராச் சாரிய சுவாமிகள், தருமையாதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் ஆகிய பெரியோர்களது நல்லாசிகளைப் பெற்று மகிழ்ந்தார்.

திருவாசகமணி யவர்கள் மலேசிய நாட்டிலும், சிங்கப்பூரிலும் சுமார் எட்டுத் திங்கள் வரைச் சுற்றுப் பிரயாணம் செய்து தங்கி வந்தார். எனினும் அவர் தொடர்ந்து சமயச் சொற்பொழிவுகள் ஆற்றிய காலம் மொத்தம் 5 திங்கள்களே ஆகும்.

அவர் இந்த 5 மாதக் காலத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் 130. இவற்றுள் 14 சொற் பொழிவுகள் மலேயப் பல்கலைக் கழகத்தில் ஆற்றியவை. அவையனைத்தும், பெரியபுராணம், திருவாசகம், திருக்குறள் பற்றியனவே ஆகும். 25 சொற் பொழிவுகள் மலேசிய வானொலியிலும், சிங்கப்பூர் வானொலியிலும், திருக்குறள், திருவாசகம், பெரிய புராணம் பற்றி ஒலி பரப்பப்பெற்றவை யாகும். 9 தொலைக் காட்சி (டெலிவிஷன்) நிகழ்ச்சிகளிலும் பேசியுள்ளார். ஏனைய ஆலயப் பேச்சுக்கள் அனைத்தும் சைவத்தையும் வைணவத்தையும் பற்றியனவாகும். அத்தகைய பேச்சுக்களில் மிகவும் தலையாயவையாயும், மக்கள் அனைவரின் கருத்தைக் கவர்ந்து கண்ணைத் திறந்தனவாகவும் அதமந்தவை பின் வரும் தலைப்புக்களில் பேசப்பட்டன. பெரியபுராணம், திருமுறைகள், திருவாசகம், சிவ-விஷ்ணு, இறைவழிபாடு, நடராஜர் தத்துவம், சிவலிங்கத் தத்துவம், விநாயகர் தத்துவம், முருகன் தத்துவம், சைவ சித்தாந்தம் முதலியன. உருவ வழிபாடு, சுவாமி விவேகானந்தர், சர்வ சமய ஒற்றுமை முதலிய பொருள்களைப் பற்றித் திருவாசகமணி, கோலாலம்பூர், பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய நகரங்களில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளை 'இணையற்றவை' என்றும், 'இதுவரைக் கேட்டிராதவை' என்றும் மிகச் சிறந்த அறிஞர்களும், அகில மலேய புத்தர் சங்கத் தலைவர் உட்பட்ட சமயப் பெரியோர்களும், முஸ்லீம்களும் மிகவும் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர். இவர் இவ்வாறு ஆங்கிலத்தில் நிகழ்த்திய பேச்சுக்கள் 13 ஆகும்.

இந்து மதத்தின் சிக்கலான பல கொள்கைகளையும் படித்தவர் பாமரர் ஆகிய அனைவர் உள்ளத்திலும் பசுமரத் தாணிபோற் பதியும்படித் தெளிவுற விளக்கிய திருவாசகமணியை அனைவரும் புகழ்ந்து பாராட்டி மகிழ்ந்தனர்.

அவ்வாறு பாராட்டிய கூட்டங்களுள் ஒன்று, கோலாலம்பூர் மகா மாரியம்மன் கோவிலில் நடைபெற்றது. அதில் அகில மலேயத் தெய்விக வாழ்க்கைச் சங்கத் தலைவர் ஸ்ரீ பிரணவாநந்த

சரசுவதியுட்பட்ட பல பிரமுகர்கள் இவரது ஈடு இணையற்ற சைவத்தொண்டினைப் பாராட்டிப் பேசிய பின், மலேய நாட்டுத் தமிழ் அமைச்சருள் ஒருவராகிய திரு. மாணிக்கவாசகம் அவர்கள் விலையுயர்ந்த பொன்னுடையொன்றினைத் திருவாசகமணிக்குப் போர்த்திக் கௌரவித்தார்.

அதே கோவிலில் நடைபெற்ற பிறிதொரு கூட்டத்தில் திருவாசகமணியால் ஆக்கப் பெற்ற மகா மாரியம்மன் திருப்பதிகம் அரங்கேற்றப்பட்ட காலை, மலேயாவின் மற்றொரு தமிழ் அமைச்சராகிய டான் ஸ்ரீ வி.தி. சம்பந்தன் அவர்கள் 'ஓம்' பொறிக்கப் பெற்ற பொன் மோதிரம் ஒன்றினை ஆலயத்தின் சார்பில் அணிவித்தார்.

*28-8-1966* அன்று பினங்கு நகர மக்கள் சார்பில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டம் ஒன்றில், அந்நகர்ப் பிரமுகர், திருவள்ளுவமணி, வள்ளல். திரு ரெங்கசாமி பிள்ளையால் திருவாசகமணிக்குப் பொன்னுடை போர்த்தப் பெற்றதோடு 'நாவலர் மணி' என்ற புதிய பட்டமும் வழங்கப் பெற்றது.

பினங்குக்கு அருகிலுள்ள பட்டர்வொர்த் என்னும் இடத்திலுள்ள திருவள்ளுவ மன்றம் தனது சிறப்புக் கூட்டம் ஒன்றில் 'திருவள்ளுவ மணி' என்றதொரு பட்டத்தைத் திருவாச்கமணிக்கு வழங்கியது.

சிங்கப்பூரில் உள்ள தமிழர் பிரதிநிதித்துவ சபையின் சார்பில் அளிக்கப்பட்ட விருந்தொன்றில் அதன் தலைவர், 'தமிழ் முரசு' ஆசிரியர், 'தமிழவேள்' திரு. கோ. சாரங்கபாணி அவர்கள், திருவாசக மணிக்குப் பட்டாடையொன்று போர்த்தி, வெகு விரைவில் பெரிய புராண ஆங்கில மொழி பெயர்ப்பினை அவர் எழுதி வெளியிட வேண்டும் என ஆசியும் கூறினர்.

பினங்கு முதல் அமைச்சர், மலேசியாவின் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், மலேயத் தமிழ் அமைச்சர் திரு, மாணிக்க வாசகம், சிங்கப்பூர்த் தமிழ் அமைச்சர் திரு. இராஜரத்தினம் முதலியோருக்குத் தனித்தனியே திருவாகசமணி தமது ஒப்பற்ற திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பின் பிரதியை முறையே பரிசாக வழங்கினர்.

அவர் ஆற்றிய பெரிய புராணச் சொற் பொழிவுகள் அனைத்தையும், தொடர்ந்து மலேசிய வானொலி ஒவ்வொரு புதன்கிழமைதோறும் காலையில் பத்து நிமிடம் ஒலிபரப்பி மலேயா வாழ் சைவர்களைச் சிவநெறியில் ஈடுபடுத்தி வருதல்தான் திருவாசகமணியின் வெளிநாட்டுச் சைவத் தொண்டின் சிகரம் போன்றதாகும்.

இவ்வாறு, இதற்கு முன்பு எவரும் சிறப்புறச்செய்திராதஅளவுக்குச்சைவப் புனருத்தாரணம் செய்து மலேசியநாட்டில் சமயப் புரட்சியாற்றி, வாகைமாலை சூடித் தமிழகம் திரும்பியுள்ள திருவாசகமணியை நாமும் வாழ்த்துகின்றோம் தென்னாப்பிரிக்காவிற்குப்பின் தென்கிழக்காசியா! இன்னும் ஏனைய பல நாடுகளும் திருவாசகமணியின் சிவத் தொண்டினை எதிர் நோக்கி நிற்கின்றன!

திகழும் மலேயா நாடுசென்று,
திருவா சகநன் மணி அவர்கள்,
புகழும் தகையிற் சொன்மாரி
பொழிந்து, சமயப் பயிர்தழைத்து
நிகழும் வகையில், இறையருளின்
நெறியைப் பரப்பி, வளர்த்துவந்தார்!
மிகவும் சிறந்த அவர்தொண்டின்
மேன்மை வியந்து போற்றுதுமே!

—ஆசிரியர்.

# விடை தெரியுமா?

1. காஞ்சிபுரத்திலுள்ள சிவாலயங்கள் சிலவற்றின் பெயர்களையும், அவற்றைப் பற்றிய குறிப்புக்களையும் தருக.

2. விஷ்ணு சந்நிதிகள் உள்ள சிவாலயங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக; அங்ஙனமே சிவாலயங்கள் உள்ள விஷ்ணு கோயிலைக் குறிப்பிடுக.

3. சாத்தனார் என்னும் ஐயப்ப சுவாமி பற்றித் திருமுறைகளில் ஏதேனும் குறிப்பு வந்துள்ளதா? பிரமசாத்தன் என்பவர் யார்?

4. குமார தந்திரம் என்னும் நூல் கூறும் முருகனின் திருவுருவ வகைகள் யாவை ? பெயர் கூறுக.

5. இந்திய தேசத்தில் சூரியனுக்கெனத் தனிச் சிறப்பாகக் கோயில்கள் உள்ள இடங்களைச் சுட்டுக.

6. அஷ்ட லட்சுமியின் பெயர்களைக் கூறுக.

7. 'பைங்குவளைக் கார்மலரால்' எனத் தொடங்கும் திருவெம்பாவைப் பாடலின் பொருள் நுட்பத்தைப் புலப்படுத்துக.

8. 'ஓங்கி உலகளந்த உத்தமன்' எனவரும் திருப்பாவையில், 'உத்தமன்' என்னும் சொல்லுக்குக் கூறப்பட்டுள்ள சிறப்புரையை விளக்குக.

9. 'சிறுபேரழைத்தனவும் சீறி அருளாதே' என்னும் திருப்பாவை வரிக்குரிய சிறப்புப் பொருள்களை விவரிக்க.

10. பாரத யுத்தத்தில் பதினெட்டு 'அக்குரோணி சேனைகள்' போர் புரிந்தன என்று நூல்கள் கூறுகின்றன. 'அக்குரோணி' என்னும் படையின் அளவைப் புலப்படுத்துக.

(விடை: மறுபுறம் காண்க).

# விடை விளக்கம்

*(1)* காஞ்சிபுரத்திலுள்ள சிவபிரான் கோயில்கள் சிலவற்றின் பெயர்களும், அவற்றைப் பற்றிய குறிப்புக்களும் வருமாறு:

1. அகத்தீசம்—அகத்திய முனிவர் பூசித்தது.
2. அநந்தபற்பநாபேசம்—உமையம்மையின் சாபத்தால் பாம்புருவான திருமால் பூசித்தது.
3. அனேதங்காவதம்—விநாயகர் பூசித்தது.
4. அந்தகேசம்—இரணியாக்கன் மகனுகிய அந்தகாசுரன் என்பவன் பூசித்தது.
5. அபிராமேசம்—வாமனர், மாவலியை அழிக்க வழிபட்டது.
6. அமரேசம்—இயக்கனுக வந்து இறைவன் நட்ட துரும்பை அசைக்க முடியாமல் செருக்கடங்கிய தேவர்கள் வழிபட்டது.
7. அரிசாப தீர்த்தேசம்—பிருகு முனிவரின் சாபத்தினின்று விமோசனம் பெறத்திருமால் வழிபட்டது.
8. ஆடகேசம் —இரணியன் பூசித்தது.
9. இட்ட சித்தீசம்—ததீசி முனிவர் வச்சிர யாக்கையும், சுக்கிராசாரியர், அமிர்த சஞ்சீவியும் பெறுவதற்கு வழிபட்டது.
10. இராமேசம்—சிறந்த சிவனடியானுகிய இராவணனைக் கொன்ற பாபம் தீர இராமபிரான் வழிபட்டது.
11. இரேணுகேசம்—பரசுராமரின் தாய், உலக மக்கள் தன்னைத் தெய்வமாக மதிக்கும் பொருட்டு வழிபட்டது.
12. இறவாத்தானம்—மார்க்கண்டேயரும், சுவேத முனிவரும் இறவாமை பெறுவதற்காக வழிபட்டது.
13. ஐராவதேசம்—தேவேந்திரனுக்கு வாகனம் ஆவதற்கு விரும்பி, ஐராவதம் பூசித்தது.
14. ஓணகாந்தேசம்—வாணுசுரனின் சேனைத் தலைவர்களாகிய ஓணன் காந்தன் என்னும் அசுரர்கள் பூசித்தது.
15. கச்சி மயானம்—பண்டாசுரன் என்பவனை அழிக்க இறைவன் சர்வ சங்காரம் செய்து, மீட்டும் உலகங்களைப் படைத்த சிறப்புடைய தலம்.
16. கச்சபேசம்—திருமால், கச்சபம் என்னும் ஆமை வடிவம் கொண்டு பூசித்த தலம்.
17. கச்சிநெறிக் காரைக்காடு—காரைச் செடிக்காடுகள் அடர்ந்திருந்தது. சிபிச் சக்க்ரவர்த்தி, தேவேந்திரன், புதன் பூசித்தது. சத்தியவிரதம் எனவும் வழங்கும்.
18. கடகேசம்—ஏகம்பரை வழிபடுமுன், காமாட்சியம்மை கடகம் அணிந்து பூசித்தது.
19. காப்பீசம்—காமாட்சியம்மை ஏகம்பரை வழிபடுமுன், கங்கணம் ஆகிய காப்பு அணிந்து பூசித்தது.

20. காயா ரோகணம்—பிரளய காலத்தில், பிரமன் திருமால் ஆகியோரின் உடலங்களைச் சிவபிரான் தம் திருமேனியில் ஏறிட்டுக் கொண்டது.

21. சத்ததானம்—அத்திரி முதலிய சப்த (ஏழு) முனிவர்கள் வழி பட்டு அருள் பெற்றது.

(2) விஷ்ணு சந்நிதிகள் அமைந்துள்ள சிவாலயங்களுள் சில பின்வருமாறு:

1. சிதம்பரம்
2. கச்சி ஏகம்பம்
3. காஞ்சிக் காம கோட்டம்
4. திருவண்ணுமலை
5. இராமேசுவரம்
6. திருஉத்தரகோச மங்கை
7. திருநெல்வேலி
8. திருச்செந்தூர்
9. திருக்குற்ருலம்
10. சுசீந்திரம்
11. திருவொற்றியூர்
12. திருநாவலூர்
13. திருப்பாண்டிக் கொடுமுடி
14. திருவக்கரை
15. கொடிமாடச் செங்குன்றூர்
16. பவானி (திருநணு)
17. திருப்பழனம்
18. சிக்கல்

இவ்வாறே பின்வரும் வைணவத் தலக் கோயில்களில் சிவ சந்நிதியும் உள்ளன:—

1. உத்தமர் கோயில்
2. திருக்கோட்டியூர்
3. திருக்குறுங்குடி
4. திருவித்துவக்கோடு

(3) சாத்தனுர் என்னும் ஐயப்ப சுவாமிகள் பற்றிப் பின்வரும் குறிப்புக்கள் திருமுறைகளில் காணப்படுகின்றன.

''பார்த்தனுக்கு அருளும் வைத்தார் பாம்பரை ஆட வைத்தார்
சாத்தனை மகனு வைத்தார் சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடையில் வைத்தார் திருப்பயற் றூர னுரே''.

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரம், சிவபிரானுக்குச் சாத்தன் மகனுகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். சேரமான் பெருமாள் நாயனுர், சிவபெருமானுக்குத் திருக்கயிலையில் விண்ணப்பம் செய்து அரங்கேற்றிய 'திருக் கயிலாய ஞான உலா' என்பதனைத் திருப்பிடவூர் என்னும் தலத்தில், உலகுக்கு வெளிப்படுத்திப் பரவும்படி செய்து நன்மைபுரிந்தவர் மாசாத்தனுரே எனப் பெரிய புராணம் கூறுகின்றது.

சேரர் காவலர் விண்ணப்பம் செய்தஅத் திருவுலாப் புறம்அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்ட மாசாத்தனுர் தரித்து, இந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலைசூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே.

—வெள்ளானைச் சருக்கம்

பிரமசாத்தன் என்பது, முருகப் பெருமானின் திருவுருவங்களில் ஒன்று. பிரணவப் பொருள் இது என்று சொல்லத் தெரியாது விழித்த பிரமனைத் தலையில் குட்டிச் சிறையில் அடைப்பித்து, முருகன் தன் கைகளில் கமண்டலமும் ஜபமாலையும் தாங்கி, உலகைப் படைக்கும் தொழிலை மேற் கொண்டருளினுர். அந்நிலையில் அமைந்த முருகனின் திருவுருவ அமைப்பே 'பிரமசாத்தன்' எனப்படும். காஞ்சி

புரத்தில் குமரகோட்டத்தில் எழுந்தருளி விளங்கும் முருகன், பிரமனின் படைப்புத் தொழிலை மேற்கொண்டு கையில் ஜபமாலையும் கமண்டலமும் தாங்கி நிற்கும் 'பிரமசாத்தன்' என்னும் திருவுருவம் உடையவரேயாவர். இதனைக் குமரகோட்டத்து அருச்சகராக விளங்கி யிருந்த ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர் பின்வருமாறு கந்தபுராணத்தில் பாடியுள்ளார்.

கொண்டலை அளக்கும் நொச்சிக் குமரகோட் டத்துச் செவ்வேள்
கண்டிகை வடமும் தூநீர்க் கரகமும் கரத்தில் ஏந்திப்
பண்டையில் அயனை மாற்றிப் படைத்தருள் வேடம் தாங்கி
அண்டர்கள் எவரும் போற்ற அருள்புரிந்து அமர்ந்தான் அன்றே.

—கந்தபுராணம்: 1-6-108.

(4) குமார தந்திரம் கூறும் முருகனின் திருவுருவங்கள் பதினாறு ஆகும். அவைகளாவன பின்வருமாறு:

1. ஞான சத்திதரர்
2. கந்த சுவாமி
3. தேவசேனாபதி
4. சுப்பிரமணியர்
5. கஜவாகனர்
6. சரவணபவர்
7. கார்த்திகேயர்
8. குமாரர்
9. சண்முகர்
10. தாரகாந்தகர்
11. சேனாபதி
12. பிரமசாத்தர்
13. வள்ளி மணவாளர்
14. பாலசுப்பிரமணியர்
15. கிரவுஞ்ச பேதனர்
16. சிகி வாகனர்.

(5) சூரியனுக்கு இந்தியாவிற் பின்வரும் இடங்களில் கோயில்கள் உள்ளன:

1. மேற்குப் பாகிஸ்தானில் மூல்ட்டான் என்னும் இடத்தில், குஷான அரசன் ஆகிய கனிஷ்கன் (கி.பி. 78-120) கட்டியது.

2. குவாலியர் மாவட்டத்தில் மண்டோசர் என்னும் இடத்தில், கி.பி. 440-இல் கட்டப் பெற்றது. இது புகழ் மிக்க ஹர்ஷவர்த்தனன் (கி.பி. 606-647) என்னும் சக்கரவர்த்தியும், அவன் முன்னோர்களும் வழிபட்டது.

3. ஊண அரசன் ஆகிய மிஹிரகுலன் (கி.பி. 502-542) என்பவனால், குவாலியர் என்னும் இடத்திற் கட்டப் பெற்றது.

4. ஒரிசாவில் பூரி ஜகந்நாதத்திற்கு அருகில், கோனாரக் என்னும் இடத்தில், முதலாம் நரசிங்க தேவன் (கி.பி. 1237—1264) என்பவர் கட்டியது.

5. கும்பகோணத்திற்கு அருகே, ஆடுதுறையில் முதலாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1120) கட்டிய சூரியனார் கோயில். இந்நாளில் கோயிலின் பெயரே ஊருக்கும் வழங்குகின்றது.

6. வட இந்தியாவிற் கயை மாவட்டத்தில், தேவ் என்னும் இடத்தில், பாமன்கஞ்ச் என்னும் ஊருக்குப் பதினான்கு கல் தொலைவில் சூரியனுக்கு ஒரு கோயில் உள்ளது. வடமொழியிற் புகழ் மிகுந்த கவிஞர் ஆகிய பாணர் என்பவர், இக்கோயிலை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது.

(6) அஷ்ட லட்சுமிகளாவன:

1. ஆதி லட்சுமி
2. சந்தான லட்சுமி
3. கஜ லட்சுமி
4. தன லட்சுமி
5. தான்ய லட்சுமி
6. விஜய லட்சுமி
7. ஐசுவரிய லட்சுமி
8. வரலட்சுமி.

கலித்தொகை என்னும் சங்ககால நூலில், கபிலர் என்னும் கவிஞர் பெருமான், எதிரெதிராக ஓங்கியுயர்ந்து நின்ற இருபெரும் மலைகளின் இடையில், வேங்கைமரம் பூத்துப் பொலிவுடன் விளங்க, அதன் கிளைகளின் மீது இருபுறங்க ளினின்றும் அருவிகள் வந்து விழும் அழகிய காட்சியானது, தனது இருபுறத்தும் இரண்டு சிறந்த யானைகள் பூவும் நீரும் சொரிய, அவற்றின் நடுவே தாமரை மலரின் மீது வீறுற்று விளங்கும் திருமகள் ஆகிய கஜ லட்சுமியைப் போலத் திகழ் கின்றது என்னும் கருத்தமையப் பாடியிருத்தல், இங்கு அறிந்து இன்புறுதற்குரியது.

'கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்
எதிர்எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து
அதிர்இசை அருவிதன் அஞ்சினை மிசைவீழ
முதிர்இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை
வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலர்அங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப. —கலித்தொகை, 44.

(7) (அ) இப்பாடலில் சைவ சித்தாந்த முறைப்படி ஆணவம் முதலிய பாசங்களை ஒழிப்பதற்கு இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளி, பக்குவமுள்ள உயிர்களுக்குச் செய்யும் தீக்கையாகிய கிரியைகளைப் பற்றிய குறிப்புக்கள் அமைந்து காணப்படுகின்றன. 'பைங்குவளைக் கார் மலர்' என்பது, மாந்திரிகன் பாம்பி னால் கடிக்கப்பட்டவனைக் கருட பாவனையால் பார்த்து நஞ்சை நீக்குவதுபோல' ஆசிரியன் தன் திருநோக்கத்தால் மாணாக்கனைப் பார்த்துப் பாசத்தை நீக்குவித்த லாகிய நயன தீக்கையைக் குறிக்கும்.

(ஆ) 'செங்கமலப் பைம்போது' என்பது, ஆசிரியன் மாணவனது இதய கமலத்தில் பாவனையினால் புகுந்து, அவ் வறிவை வாங்கித் தன் இதய கலத்தில் கலந்ததாகக் கொண்டு, பின்னர் அதனை அவன்பால் நிலைப் படுத்துதல் ஆகிய மானசிக தீக்கையைக் குறிக்கும். இஃது ஆமை தன் முட்டையை நினைத்த அள வில் குஞ்சு பொரிக்கச் செய்து காப்பதைப் போன்றதாகும்.

(இ) 'அங்கம் குருகினம்' என்பது, பறவை தனது முட்டையைச் சிறகால் தழுவி அடை இருந்து காத்தல் போல, ஆசிரியன் தன் கையினால் மாணவனது தலை முதல் எங்கும் பரிசித்துப் பாசத்தை நீக்கிக் கலத்தலாகிய பரிச தீக்கை யாகும்.

(ஈ) 'பின்னும் அரவத்தால்' என்புழி 'அரவம்' என்பதில், திருவைந் தெழுத்தை உபதேசித்து நலம் புரிதலாகிய 'வாசக தீக்கை' பற்றிய குறிப்பு அமைந்துள்ளது.

(8) 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என வரும் திருப்பாவை வரியில் வரும் 'உத்தமன்' என்னும் சொல்லுக்குப் பின்வருவன சிறந்த வியாக்கியானமாகத் தரப்பட்டுள்ளது.

(1) பிறரை இம்சித்துத் தன் வயிற்றை வளர்க்க வேண்டும் என்று இருப்பவன் அதமன்.

(2) பிறரும் ஜீவிக்க வேண்டும், நாமும் ஜீவிக்க வேண்டும் என்றிருக்கு மவன் மத்திமன்.

(3) தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேண்டும் என்னு மவன், உத்தமன்.

சிதம்பர சுவாமிகள் தாம் இயற்றிய திருப்போரூர்ச் சந்நிதி முறையில், உத்தமர், மத்திமர், அதமர் என்னும் மக்கட் பாகுபாட்டினைக் குறித்து அருளி யிருப்பதும் இங்கு இயைபுபற்றி அறிதற்குரியது. தாம் விரும்பும் சிறுசிறு இம்மைப்

பயன்களை விரும்பி, இறைவனை வழிபடுபவர்கள், அதமர். மறுமைப் பயனாகிய வீடுபேறு முதலியன குறித்து வழிபடுவோர், மத்திமர். எதனையும் தமக்கெனக் குறியாமல் அன்பினால் மட்டுமே இறைவனைப் பணிபவர்கள், உத்தமர் எனச் சிதம்பர சுவாமிகள் கூறுகின்றார்.

'மறுமை குறித்த பயத்தாற் பணிபவர் மத்திமரே
சிறுமை குறித்துப் பணிவா ரதமர்கள் செப்புமிந்த
உறுமை குறித்தில தன்பாய்ப் பணிபவ ருத்தமரே
பொறுமை குறித்தவர் சூழ்சம ராபுரிப் புண்ணியனே'

(9) இங்குச் 'சிறுபேர்' என்றது நாராயண நாமத்தை. சகஸ்ராட்சரங்கள் த்வாதசாட்சரங்கள் தொடக்கமான பெரும்பேர்கள் எல்லாம் அவன் பெயர் எட்டெழுத்தையுங் கண்டவாறே சிறுகிற்று; அதுதான் மூன்றெழுத்துடைய பேரைக் கண்டவாறே சிறுகிற்று. நித்திய சூரிகளுடைய ஓலக்கத்திலே அவாப்த சமஸ்த காமனாய் நாராயணன் என்னும் பெயர் பெற்றுஇருக்கும் நிலையை விலக்கி, குறைவாளரான இடையர்களை நிறைவாளர் ஆக்கும் பொருட்டு இடைச் சேரியில் பசு மேய்த்தலை விரும்பிப் பிறந்து, கோவிந்தன் என்று பெயர் பெற்று நின்றான் இறைவன். அங்ஙனம் அவனே விரும்பித்தன் சௌலப்பியத்தைக் காட்ட ஏற்றுக் கொண்ட பெயரைத் தவிர்த்து, அவனே விரும்பாமல் விலக்கி நின்ற 'நாராயணன்' என்னும் பெயரைக் கூறுதல் குற்றமாகும். குளிர்ந்த தண்ணீரை விநியோகம் கொள்ளுமவனுக்குக் காய்ச்சின தண்ணீர் பகையிறே. சுலபனைப் பரன் என்கிறதுதான் அபசார மாகிய தசையிறே. கிருஷ்ணனுடைய ஆற்றலுக்கு ஈச்சுவரத்தால் வந்த அழல் பகையிறே.

அச்சிறு பேர் தன்னையும் ஒருகால் சொல்லி அமையாமல், 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்றும், 'நாற்றத்துழாய்முடி நாராயணன்' என்றும், 'நாராயண மூர்த்தி' என்றும் பலகால் சொல்லியமை மிக்க பெருங் குற்றமாகும். ஒருவன் அரசனாய் முடி சூடப் பெற்ற பின்னர், அவனை முன்னைய இளம் பருவப் பெயரிட்டு அழைக்கைக்கு மேற்பட்ட குற்றம் இல்லை. அதனின் மேலும் 'பாழியந் தோளுடைப் பற்பநாபன்' என்று வேறுசில பெயர்களை இட்டும் அழைத்தார்கள். அவைகளும் குற்றமே யாம்.

'உன்றன்னை அழைத்தனவும்' என்ற உம்மையால், இங்ஙனம் உன்னையாம் சிறு பேரிட்டு அழைத்தமையே யன்றி, எங்களில் நாங்கள் ஊடல் கொண்டு, 'பேய்ப் பெண்ணே', 'ஊமையோ அன்றிச் செவிடோ', 'நாணாதாய் நாவுடையாய்', 'பண்டேயுன் வாயறிதும்' என்பன முதலாகச் சொல்லிக் கொண்ட சிறு பேர்களையும் பொறுத்தருள வேண்டும். சீறுதலையும் ஓர் அருளாகச் சிறப்பித்துக் கூறினார்கள். எங்கள்பால் ஏதொரு தகுதியும் இல்லையாகினும், எதிர்த்தலையில் ஒன்றையும் எதிர்பாராமல், நீ எங்களுக்கு அருள் செய்ய முற்பட்டால், வேண்டா என்று நின்னை விலக்குகைக்கு உரியாரும் உண்டோ? ஆதலின் எங்கள் தகுதி நோக்காது நின் பெருந்தகைமையினால் அருள் செய்தல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளும் கருத்தில் 'இறைவா' என்றார்கள்.

(10) 'அக்குரோணி' என்பது, 21,870 தேர்களும், 21,870 யானைகளும், 65,610 குதிரைகளும், 1,09,350 காலாள் வீரர்களும் கொண்ட ஒருபடைத் தொகுதியே யாகும். இங்ஙனம் பதினொரு அக்குரோணிப் படைகள் துரியோதனின் பக்கலிலும், ஏழு அக்குரோணிப் படைகள் பஞ்சபாண்டவர் பக்கலிலுமாகப் போர் புரிந்தன. ஒரு அக்குரோணிப் படைக்குரிய இவ்வெண்ணிக்கை, ஸ்ரீ பிரகாசா அவர்களின் தந்தையாரும், புகழ்மிக்க நூல்கள் பலவற்றின் ஆசிரியருமாகிய பேரறிஞர் ஸ்ரீ பகவன்தாஸ் அவர்கள் எழுதியுள்ள நூலொன்றில், அடிக் குறிப்பாகத் தரப்பட்டுள்ளது.

— ஆசிரியர்.

# மனுதரும சாத்திரத்தின் மாண்பு

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.)

தர்ம சாஸ்த்ரங்களுக்கு ஸ்ம்ருதி யென்று பெயர். ''கலௌ பராசரம் ஸ்ம்ருதம்'' என்கிறபடியே கலியுகத்தில் பராசர ஸ்ம்ருதிக்குச் சிறப்பு சொல்லப்பட்டிருந்தாலும் வேதத்தில் (2-2.) ''யத் வை கிஞ்ச மநுரவதத் தத்பேஜஷம்'' என்று மநு சொன்னதெல்லாம் மருந்தென்று புகழப் பட்டிருப்பதாலும், ''வேதேஷு பௌருஷம் ஸூக்தம் புராணேஷு ச வைஷ்ணவம், பாரதே பகவத் கீதா தர்மசாஸ்த்ரேஷு மாநவம்'' என்று தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ளே மநு ஸ்மிருதி சிறந்ததென்று கூறப்பட்டிருப்பதாலும் மநு ஸ்மிருதியின் ப்ராசஸ்த்யம் ஸர்வ ஸம்மதமானது. மேலே உதாஹரித்த 'யத் வை கிஞ்ச மநுரவதத்' என்கிற ச்ருதியில் மநு: என்பதற்கு மநுமஹர்ஷி அர்த்தமன்றென்றுசிலர் சொல்லுவதுண்டாகிலும்(2-1-1) ஸ்ம்ருத்யதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் மநுமஹர்ஷிபரமான அர்த்தமேயுள்ளது. முந்தின பாஷ்யத்திலும் அப்படியே தானுள்ளது. சததூஷணியிலும் (64ல்) உள்ளது. ஆக, மநு ஸ்ம்ருதியின் ஏற்றம் வேத மேறினதால் அதிலிருந்து சில விஷயங்கள் ஸாரமாக எடுத்து நிரூபிக்கப்படுகின்றன.

தருமங்கள் எப்போதும் ஒரு படிப்பட்டேயிருக்கமாட்டா. யுகங்களுக்குத் தக்கபடி தருமங்கள் குறைந்துகொண்டே வரும் என்கை. இதற்கடுத்த சுலோகத்தில், க்ருதயுகத்தில்தபஸ்ஸுக்கு ப்ராதான்யமென்றும், திரேதாயுகத்தில் ஜ்ஞானத்திற்கு ப்ராதான்யமென்றும், த்வாபரயுகத்தில் யஜ்ஞத்திற்கு ப்ராதான்யமென்றும் கலியுகத்தில் தானம் ஒன்றுக்கே ப்ராதான்யம் என்றும் சொல்லப் பட்டுள்ளது. வேறோரிடத்தில் க்ருத யுகத்தில் த்யானத்துக்கு ப்ராதான்யமும், த்ரேதாயுகத்தில் யஜ்ஞத்துக்கு ப்ராதான்யமும், த்வாபரயுகத்தில் அர்ச்சனைக்கு ப்ராதான்யமும், கலியுகத்தில் நாம ஸங்கீர்த்தனத்திற்கு ப்ராதான்யமும் சொல்லப்பட்டுள்ளது. (அத். 1, சுலோ. 85).

இரண்டாமத்யாயத்தில் 36,37,38 ஆம் சுலோகங்கள் குறிக்கொள்ளத் தக்கவை.(36ல்) கர்ப்பாஷ்டமாகிய ஏழாவது வயதில் ப்ராமணனுக்கு உபநயனம் பண்ண வேண்டுமென்றது. (37ல்) ஐந்தாவது வயதிலேயே உபநயனம் பண்ணினால் அப்போதிருந்தே வேதாத்யயன ஸம்பத்து மலிந்து ப்ரம வர்ச்சஸம் மிகும் என்றபடி. இங்கு பஞ்சமே என்பதற்கு ''கர்ப்ப பஞ்சமே'' என்றே வியாக்கியானம் செய்கிறார்கள். நான்காவது பிராயத்திலென்றதாயிற்று. (38ல்) பிராமணனுக்குப் பதினாறுவது வயது வரையில் உபநயன காலம் அனுமதிக்கப்படுகிறது. இதே ச்லோகத்தில் க்ஷத்ரியனுக்கு இருபத்திரண்டாம் வயது வரையிலும், வைச்யனுக்கு இருபத்து நான்காம் வயது வரையிலும் உபநயன காலம் அனுமதிக்கப் பட்டிருப்பதால் இக்காலத்து பிராமணப்பிள்ளைகளுக்கு க்ஷத்ரிய வைச்ய தர்மமே கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிகிறது.

இரண்டாமத்யாயத்திலேயே (127) நூற்றிருபத்தேழாம் சுலோகம்—பிராமணன் அணுகினால் குசலமா? என்று கேட்க வேண்டியது; க்ஷத்ரியன் அணுகினால் அநாமயமா? என்று கேட்க வேண்டியது. வைச்யன் அணுகினால் க்ஷேமமா? என்று கேட்க வேண்டியது. சதுர்த்தன் அணுகினால் ஆரோக்யமா? என்று கேட்க வேண்டியது. இதில் குசலம் க்ஷேமம் என்கிற பதங்களும், அநாமயம் ஆரோக்யம் என்கிற பதங்களும் பரியாயமே யானாலும் இங்கு அர்த்தத்தில் நோக்கில்லை; உச்சரிக்க வேண்டிய சப்தத்தில் நியமம் விவட்சிதம் என்பர் வ்யாக்யாதா. இது யுக்தமே.

இரண்டாம் அத்தியாயத்திலேயே(131)நூற்றுமுப்பத்தோராம் சுலோகம் சிறிய தாயார் அம்மாமி மாமியார் அத்தை ஆகிய இவர்கள் ஆசார்ய பத்னியோ டொத்தவர்க ளாகையால் அவளைப் போலவே இவர்களை வழிபட வேண்டுமென்கிறது. எழுந்திருத்தல் தொழுதல் செய்யவேண்டிய தென்கை. இதற்குமேல் 140, 141ஆம் சுலோகங்களில் இன்னாருக்கு ஆசார்யரென்று பெயர்,இன்னாருக்குஉபாத்யாயரென்று பெயர் என்பது தெரிவிக்கப்படுகிறது. [1](40) சிஷ்யனைத்தம்மிடத்திலேயேவைத்துக் கொண்டு கல்பம் ரஹஸ்யம் இவற்றோடுங்கூட வேதசாகையைப் பூர்த்தியாக ஓதுவிப்பவரை ஆசார்யரென்று கூறுவார்கள். (141). வேதத்தில் ஏகதேசத்தையோ (அல்லது) வியாகரணம் முதலான வேதாங்கங்களையோ வ்ருத்திக்காக ஓதுவிப்பவர்உபாத்யாயரெனப்படுவர். இதற்கு மேல் (145ல்) உபாத்யாயாந் தசாசார்ய: இத்யாதியில், பத்து உபாத்யாயர்களுக்கு ஸமமானவர் ஒரு ஆசார்யரென்றும், நூறு ஆசார்யர்களுக்கு ஸமமானவர் ஒரு பிதா என்றும், ஆயிரம் பிதாக்களுக்கு ஸமமானவள் ஒருமாதா என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு மேல் 225, 226ஆம் சுலோகங்களில் இன்னும் விசேஷம் சொல்லப்படுகிறது. ஆசார்யன் பரமாத்மாவின் வடிவானவன். பிதா பிரமனுடைய

வடிவமானவன். மாதா பூமிப் பிராட்டியின் வடிவமானவள். ஆசார்யன் தந்தை தாய் தமையன் ஆகிய இவர்களால் தனக்கு ஏதேனும் பீடை யுண்டானாலுங்கூட இவர் களைப் பிராமணன் அவமதிக்கவே கூடாது என் கிறது.

மூன்றுவ தத்யாயத்தில் (77, 78ஆம் சுலோ கங்களில்) க்ருஹஸ்தாச்ரமிக்கு மிக்க ஏற்றம் சொல்லப்படுகிறது. (77) ஸர்வப் பிராணி களும் வாயுவை யவலம்பித்தே வாழ்வதுபோல ஸர்வாச்ரமிகளும் க்ருஹஸ்தாச்ரமியை யவலம் பித்தே வாழ வேண்டியிருக்கிறது. வாயு இல்லையானல் மூச்சடங்கிவிடும்; க்ருஹஸ்தன் இல்லையானல் ப்ரமசாரிகளும் ஸம்ந்யாஸி களும் ஜீவிக்க முடியாதென்றபடி. அடுத்த சுலோகத்தினல் இது உபபாதிக்கப்படுகிறது. வேதார்த்த வ்யாக்க்யான முகத்தாலும் அன்ன தான முகத்தாலும் க்ருஹஸ்தனே மற்ற ஆச்ர மிகளுக்கு உபகாரகனென்கை. ஆனதுபற்றியே காளிதாஸர் ரகு வம்சத்தில் ''ஸர்வோபகார க்ஷமமாச்ரமம் தே'! என்ருர்.

மூன்றும் அத்தியாயத்திலேயே போஜன காலத்து நியமம் கூறப்படுகிறது. முட்டாக் கிட்டுக் கொண்டு உண்ணலாகாது; தெற்கு முகமாயிருந்து உண்ணலாகாது. பாதரக்ஷை யணிந்து கொண்டு உண்ணலாகாது. இந்த நிஷேதத்திற்குக் கட்டுப்படாமல் உண்டால் அந்த உணவு ராக்ஷஸர்களுக்கே சேரும். [இந்த மூன்றும் அத்தியாயம் 286 சுலோகங் கள் கொண்டது; பூர்த்தியாக ஊன்றி வாசிக் கத்தக்கது.]

நான்காம் அத்தியாயத்தில் ஜீவிக்க வேண்டிய வழிகள் கூறப்படுகின்றன. பிறர்க்குத்தொண்டு செய்து ஜீவிப்பது கூடாதென்று முடிவாகச் சொல்லி, ருதம் அம்ருதம் ம்ருதம் ப்ரம்ருதம் ஸத்யாந்ருதம் என்னும் வழிகளால் ஜீவிக்கலா மென்கிறது. இந்த பதங்களெல்லாம் விவரண ஸாபேக்ஷ மாகையாலே மேலே மஹர்ஷி தாமே விவரிக்கிருர். ருதம் உஞ்சம் ஸிலம் என்று பர்யாயம். தட்டுத்தடை யில்லாத இடங்க ளில்ஒஷதிகள் முளைத்திருக்குமே. அவற்றை ஒவ்வொன்ருய்க் கிள்ளிக் கொய்து கொள்ளு மது உஞ்சம்; கொத்துக் கொத்தாகக் கொய்து கொள்ளுமது ஸிலம். இனி அம்ருதம் என்பது அயாசிதம். இரந்து பெருமல், பாத்ர விநி யோகம் பண்ணுமவர்கள் கொடுப்பதைக் கொள்ளுவது அம்ருதம். இரந்து பெறுவது ம்ருதம். க்ருஷியினல் கிடைக்குமது ப்ரம்ருதம். ஸத்யாந்ருத மென்று வாணிஜ்யத்திற்குப் பெயர்; அதாவது வர்த்தகம். மெய்யும் பொய்யும் கலந்து வாணிஜ்யம் நடத்தப்படுவ தால் அதற்கு ஸத்யாந்ருத மென்று பெயர் போலும். ஆக இவற்ருல் ஜீவிக்கலாமே யொழிய ஸேவக வ்ருத்தியால் ஒரு போதும் ஜீவிக்கலாகாது. இதைக் கண்ட ஒரு அபியுக்தர் ''அடிமைப்படுவதை நாய் வேலையென்று மநு மஹர்ஷி கூறியது தவறு; ஒருவர்க்கும் அடிமைப் படாமல் யதேஷ்டமாகத் திரிகிற நாய் எங்கே? நாலு காசுக்கு உயிரை அறவிலை செய்திருக்கும் சேவகன் எங்கே?'' என்று சொல்லி வைத்தார். இதனல் சேவகன் நாயினும் கடை கெட்ட வன் என்பதாயிற்று. குணங்கண்டு ப்ராப்த விஷயத்திலே சேவகனுயிருப்பவனைப் பற்றிய தன்று இந்த நிந்தை.

நாலாவது அத்யாயத்திலே ஒவ்வொரு வருடைய சிந்தனையிலும் இருக்க வேண்டும். வேஷம் வாக்கு வ்ருத்தி என்னுமிவை மூன்றும் வயதுக்கும் தொழிலுக்கும் பொருளுக்கும் படிப்புக்கும் குலத்துக்கும் தக்கபடியிருக்க வேண்டுமென்பது பொருள். இதன் கருத்தை விவரிப்போம். வேஷமாவது அரையில் துணி சுட்டுதல், நெற்றியில் புண்ட்ரமணிதல், ஆபர ணம் பூணுதல் பூமுடித்தல் முதலியன. இவை வயதுக்குத் தக்கபடியா யிருப்பதாவது— சைசவம் கௌமாரம் யௌவநம் வ்ருத்தாப்யம் ஆகியபருவங்களுக்குத் தக்கபடி இருப்பதாம். வயதுக்கு மட்டுமன்று; தொழிலுக்கும் தக்கபடி இருக்க வேணும். லௌகிகத் தொழிலுக்குத் தக்க வேஷம் வேறு; வைதிகத் தொழிலுக்குத் தக்க வேஷம் வேறு என்பது தெரிந்ததே. அர்த்தஸ்ய—தனத்திற்கும் தக்க படியிருக்கவேணும். தனிகன் கொள்ளத் தக்க வேஷத்தைத் தரித்ரன் கொள்ளலாகாது; தரித்ரன் கொள்ளத் தக்கவேஷத்தைத் தனிகன் கொள்ளலாகாது. ச்ருதஸ்ய—படிப்புக்குத் தக்கபடிவேஷமிருக்கவேணும். வித்வான்களின் வேஷம் வேருகவும், படிப்பில்லாத மூடர்களின் வேஷம் வேருகவும் இருக்கத் தக்கதென்கை. விபிஜ நஸ்யச—விபிநஜமாவது ஆபிஜாத்யம். ஸத்குல ப்ரஸூதத்வம் என்றவாறு, உயர்குடிப் பிறப்பாளர் வேஷம் வேறு. விநபிஜாதர்களின் வேஷம் வேறு. ஆக இதுவரை வேஷத்தைப் பற்றிச் சொல்லியாயிற்று; இனி வாக்கைப் பற்றிச் சொல்லுவோம். வாக்கும் வயது தொழில் பொருள் படிப்பு குலம் ஆகிய இவற் றுக்குத் தக்கபடி இருக்க வேணும். பெரியார் வாக்கில் வெளி வரவேண்டியது சிறியார் வாக் கில் வெளி வரலாகாது; சிறியார் சொல்லக் கூடியதைப் பெரியோர் சொல்லலாகாது. நியீன காரியங்களைச் செய்பவன் சொல்லு மதை உத்க்ருஷ்ட காரியங்கள் செய்பவர்சொல் லலாகாது. தனிகர்கள் சொல்லக்கூடிய வாக்கை தரித்ரன் சொல்லலாகாது. படிப்பாளிகள் சொல்ல வேண்டிய வாக்கை அறிவிலிகள் சொல்லலாகாது; குலீனர்கள் சொல்ல வேண் டிய வாக்கை அநபிஜாதர்கள் சொல்லலாகாது. இனி வ்ருத்தியைப் பற்றிக் கேண்மின். வ்ருத்தி யாவது தானிருக்கவேண்டிய நிலைமை. இதுவும் —வயது தொழில் பொருள் படிப்பு குலம் ஆகிய இவற்றுக்குத் தக்கபடி யிருக்கத் தக்கது. இந்த சுலோகம் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் முமுக்ஷுத் வாதிகாரத்தில் உதாஹரிக்கப் பட்டுள்ளது.

நாலாம் அத்தியாயத்தில் சுலோகம் 171 முதல் நான்கு சுலோகங்கள் தார்மிகர்கள் கண்ட பாடம் செய்து வைத்துக் கொள்ளத் தக்கவை. அதர்மம் செய்பவர்கள் தனிகர்களாயிருப்பதை யும், தருமம் செய்பவர்கள் அகிஞ்சனர்களா யிருப்பதையும் காணும்போது தார்மிகர்களுக்கு அதர்ம ருசி ஏற்படக்கூடும்; தருமம் செய்து தரித்ரர்களாயிராமல் அதர்மம் செய்து தனிகர் களாக இருப்போம் என்கிற எண்ணம் உண் டாகி அதர்ம ப்ரவ்ருத்தி விளையக்கூடுமன்றே. அன்னவர்களைக் குறித்துச் சொல்லப்படுகிறது. தருமம் செய்வதனுலேதான் நமக்குக் கஷ்டங் கள் உண்டாகின்றனவென்று நினைக்க நேர்ந் தாலும்கூட அதர்மாசரணத்தில் நெஞ்சைச் செலுத்தக்கூடாது; ஏனென்றல் அதர்மஞ் செய்யும் பாபிகள் வாழ்ந்தே நிற்காமல் அதற்கு மாறுபாடான நிலைமையையும் அடையக் காண்கையாலே. அடுத்த 172 சுலோகத்தினுல் அதர்மம் பலன் காட்டியே தீருமென்று வற் புறுத்திச் சொல்லப் படுகிறது. அதர்மம் செய்யப்பட்டால் அது உடனே அனர்த்தமா கிற பலனைக் கொடுத்துவிடுமென்பதில்லை. எதற்கும் பரிபாக தசை யென்று ஒன்றுண்டு; அப்போது ஸமூலநாசம் பண்ணியே தீரும். 173. யதி நாத்மநி இத்யாதி. அதர்மமானது ஸாக்ஷாத்து கர்த்தாவினிடத்திலும் பலனைக் காட்டும்; இல்லையேல் புத்திரர்களிடத்திலோ பௌத்ரர்களிடத்திலோ ப்ரபௌத்ரர்களிடத் திலோ பலித்தே தீரும். செய்த அதர்மம் எந்த விதத்திலும் நிஷ்ப்பலமாகாது. அடுத்த சுலோகம் 174 மிக முக்கியமானது. இந்த சுலோகம் அதர்மம் செய்து பழுத்தவன் ஸ்வா நுபவத்தைத் தெரிவிக்கும் சுலோகம் போலவே காண்கிறது. அதர்மம் செய்தவன் தற்காலத் தில் ஸம்ருத்தி அடைகிறுன்; மாட மாளிகை கள் கட்டிக் கொள்வதும், யானை, குதிரைகளை ஏறப் பெறுவதுமான செல்வங்களையும் அநு பவிக்கிறுன். சத்துருக்களையும் வெல்லுகிறுன். நாளடைவில் பரிபாக தசை வந்தவாறே ஸமூல நாசத்தை அடைகிறுன். ஆகவே தரும நிஷ் டையே க்ஷேமங்கரமென்ற தாயிற்று.

எட்டாம் அத்தியாயத்தில் சுலோகம் 92 ஆழ்வார்கள் பாசுரம் போலுள்ளது. பெரும் பாலும் ப்ரதம புருஷ நிர்தேசமாகவே செல்லு கிற இந்த தரும சாஸ்த்ரத்தில் இங்கு ஒரு மூன்று சுலோகங்கள் மத்யம புருஷ நிர்தேச மாக நிகழ்கின்றன. ஆழ்வார்கள் உபதேசம் செய்தருளும் வகை காண்கிறது. ஆகவேதான் இந்த சுலோகம் பகவத்விஷயத்தில் விசேஷித்து கையாளப்படுகிறது. எம்பெருமானேடு த்வே ஷம் முற்றி நிற்கும் நிலை நீங்கி அத்வேஷ நிலையென்று ஒன்று உண்டாகும். அது பரபக்தி பரஜ்ஞான பரம பக்திகளுக்கு முதற்படியான நிலைமையாகையாலே அதையே பக்தி தசை யாகவுங் கொள்ளுவர்கள். எம்பெருமானேடு விவாதப்படுகிற நிலை நீங்குமளவே போதுமா னது. எம்பெருமான் கண்ணுக்குப் புலப்பட்டா லன்றே அவனேடு விவாதப்பட முடியும்; கட்கி லியான அவனேடு விவாத ப்ரஸக்தியே யில்லை யேயென்று சிலர் நினைக்கவும் கேட்கவும் கூடும். அவனேடு தனக்குண்டான உறவை ஒப்புக் கொள்ளாமலிருப்பது தான் விவாதமெனப் படுவது. 'த்வம் மே' என்று பகவான் சொல் லுவதாகவும் 'அஹம் மே' என்று சேதநன் சொல்லுவதாகவும் வைத்துப் பட்டர் அருளிச் செய்திருப்பது சமத்காரோக்தி விந்யாஸம். பகவச் சேஷத்வத்திற்கு இசையாமலிருப்பது தான் பகவானேடு விவாதப்படுகையாவது. அது தீராதஅளவில் (பகவச்சேஷவத்திற்குஇசையாத அளவில்) கங்கை நீர் குடைந்தாடப் போவ தும் குரு க்ஷேத்ர யாத்திரை செய்யப் போவ தும் வீணேயாகும். சேஷத்வ ருசி யுண்டாய் விட்டதாகில் க்ஷேத்ர தீர்த்த யாத்திரையே வேண்டா. அது உண்டாகாத அளவில் இந்த யாத்திரை நிஷ்ப் பலமாகையாலே ஸர்வாத் மநா யாத்திரை போகவே வேண்டா என்கி றது. இதற்கு யாத்ரா நிஷேதத்தில் தாத்பரிய மன்று; பகவானேடுள்ள உறவை அறிய வேண் டியது முக்கியம் என்கையிலே தாத்பர்யமத் தனை. இந்த சுலோகத்தைத் திருவாய்மொழி யில் 'வீடுமின் முற்றத்தில் உம்முயிர் வீடுடை யானிடை வீடுசெய்மினே' என்ற இடத்து நம்பிள்ளை அற்புதமாக வியாக்கியானித் தருளு கிறுர்.

ஒன்பதாம் அத்தியாயத்தில் ஸ்திரீ புருஷ தரு மங்களைச் சொல்லத் தொடங்கி ஸ்த்ரீகளுக்கு ஒருபோதும் ஸ்வாதந்திரியம் கூடாதென்று வலி தாக மறுக்கிறுர். சுலோகம் 3. பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே, ரக்ஷந்தி ஸ்தாவிரே புத்ரா: ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர் ஹதி. இந்த சுலோகம் நீதி சாஸ்த்ர ஸங்க்ர ஹத்தில் ஏறியிருந்தாலும் இதற்கு ஆகரம் மநுஸ்மிருதியே யாகும். ஸ்த்ரீகளை இளம் பிராயத்தில் தந்தை காக்கிறுர்; யௌவனத்தில் கணவன் காக்கிறுன். முதுமையில் புத்திரர் கள் காப்பர். ஆக, ஸ்த்ரீகள் தங்களைக் காத் துக் கொள்வதில் ஒருபோதும் ஸ்வாதந்திரிய முடையவரல்லர் என்பது ச்லோகார்த்தம். இதன்மேல் கேள்வி பிறக்கக்கூடும்; இளமையில் வைதவ்யமடைந்து பதியுமின்றிக்கே புத்திரனு மின்றிக்கே யொழிந்தவர்களைக் காப்பவர் யார்? என்று. இதற்கு வ்யாக்க்யாதா (குல்லூக பட்டர்) ஸமாதான மெழுதி யுள்ளார்—தந்தை, தந்தையுடன் பிறந்தவர் முதலானுர் காக்கும்படியைக் காணு நின்றேமென்று.

மாதா பிதாக்கள் ஜீவித்திருக்கும் போது புத்திரர்கள் பங்கு பிரித்துக் கொள்வது கூடா தென்றும், அவர்கள் முடிந்த பிறகு கநிஷ்ட ப்ராதாக்கள் ஜ்யேஷ்ட ப்ராதாவையே அநு வர்த்தித்து வாழ வேண்டும் என்றும் நியமிக் கிறுர். (9-104). மாதா பிதாக்கள் ஜீவித்

திருக்கும் வரையில் அவர்களது தனத்தில் புத்திரர்களுக்கு ஸ்வாமித்வம் கிடையாதாகையாலே அத் தந்தையாருடைய வாழ்நாள் முடிந்த பிறகே பங்கு பிரித்துக் கொள்ள வேண்டியது. (இங்கு வியாக்யாதா எழுதுகிறார்.) தகப்பனார் இஷ்டப்பட்டால் புத்திரர்களுக்குத் தாமே பங்கு பிரிக்கலாம் என்று யாஜ்ஞவல்க்யர் சொல்லி இருக்கையாலே தகப்பனார் இஷ்டப்படாத அளவில் இந்த சாஸ்த்ரம் செல்லுமென்கிறார். அடுத்த சுலோகம் 105. பிதாவின் தனத்தை யெல்லாம் மூத்த புதல்வனே அடையக் கடவன்; மற்ற ப்ராதாக்கள் தமையனையே தந்தையாகக் கொண்டு அவன் கீழ் வாழக் கடவர்கள். மேலே சுலோகம் 108. பிதா புத்திரர்களைக் காப்பதுபோல் மூத்தவன் தம்பிமார்களைக் காக்கக் கடவன். தம்பிகளும் பிதாவினிடத்திற் போலவே மூத்தவனிடத்தில் வர்த்திக்கக் கடவர்கள். இதெல்லாம் ஜ்யேஷ்டப்ராதா யோக்யனாயிருக்கும் அளவில் என்று நூற்கொள்கை.

அனுஷ்டானங்களில் முக்ய கல்பமென்றும் கௌண கல்பமென்றும்இரண்டுண்டு. கௌண கல்பத்தை ஏதோ ஆபத்காலத்தில் கொள்ளலாமேயல்லாது சக்தியும் ஸௌகர்யமுமிருக்குங் காலங்களில் முக்ய கல்பத்தைத்தான் கொள்ள வேண்டும்; கௌணகல்பம் கேவலம் ஆபத்கால மாத்ரவிஷயம். 11-28 கௌண கல்பத்திற்கு ஆபத்கல்பமென்று பெயர். அதை ஆபத் காலத்தில் மட்டுமே அனுட்டிக்கலாம். ஆபத்தொன்றும் இல்லாத அளவிலும் பிராமணன் கௌண கல்பத்தை அனுஷ்டித்தான் ஆகில், அது அனுஷ்டியாததோடு ஒக்குமத்தனை. இந்த விதியைப் பரிபாலனம் செய்பவர்கள் மிகச் சிலரே யாவர். ஆசமன ப்ராணாயாமாதிகளையும் தினப்படி பெரும்பாலும் கௌண கல்பமாகவேயன்றோ அனுஷ்டித்து வருகிறோம்.

நான்கு ஜாதியார்க்கும் சத்துருக்கள் மூலமாகப் பரிபவங்கள் நேருவது ஸம்பாவிதம். அதைப் போக்கிக் கொள்ளும் உபாயம் ஜாதி பேதேந வெவ்வேறு பட்டிருக்கும் என்கிறது. க்ஷத்ரியன் தன்னுடைய பராக்ரமத்தைக் கொண்டு ப்ரதிக்ரியை பண்ணக்கடவன். வைச்யனும் சதுர்த்தனும் தனத்தைக் கொண்டு வெல்லக்கடவன். பிராமண உத்தமனோ வென்னில், கேவலம் ஜபம் ஹோமம் முதலிய வைதிகக் கருமங்களைக் கொண்டே சத்ரு பக்ஷ ப்ரதிக்ஷேபம் பண்ண வேண்டியவன். (11-34). [இதனால் தெரிவிக்கப் படுவதென்ன? பிராமணன் தன்னிடத்தில் பராக்ரமம் இருந்தாலும் கூட அதை உபயோகிக்கக் கடவனல்லன்; தனமிருந்தாலும் அதை ப்ராப்த விஷயங்களில் தவிர இத்தகைய காரியங்களில் துர் விநியோகம் செய்யக் கடவனல்லன். ஓதியுணர்ந்திருக்க வேண்டியதையே கடமையாக உடையவனாதலால் ஜப ஹோமாதிகளைக் கொண்டே ஜயசீலனாயிருக்கக் கடவன் என்பதாம். 'திக் பலம் க்ஷத்ரிய பலம் ப்ரஹம தேஜோ பலம் பலம் என்ற புகழ்ச்சியைப் பரிபாலித்துக் கொள்ளக் கடவோம்].

ஸம்ந்யாசிகளை த்ரி தண்டிகள் என்கிறோம். முக்கோல் பிடித்த முனிகள் என்றபடி, இந்த முக்கோல்களே த்ரி தண்டம் எனப்படுகின்றன. தண்டம் என்பதற்குக் கோல் என்கிற பொருள் தவிர, தண்டித்தல் [அடக்குதல்] என்கிற பொருளும் ப்ரஸித்தமாதலால் மூன்று வகையான தண்டங்களைக் கொண்டவர்களே த்ரி தண்டிகள் எனத் தகுவார்கள் என்கிறார் மனு மஹர்ஷி. 12-10. வாக் தண்டம், மநோ தண்டம், காய தண்டம்,என்னும் இவைமூன்று தண்டங்களாம். வாக்கை அடக்குதல், மனத்தை அடக்குதல், சரீரத்தை அடக்குதல் ஆகிய இம் மூன்று அடக்கங்களும் மூன்றுதண்டங்கள். இவற்றை உடையவர் த்ரிதண்டி. (இதன் விவரணம் வருமாறு) பொய் சொல்லுவது, பழி மொழிகளைச் சொல்லுவது. பகவத் பாகவத ஆசார்ய நிந்தைகளைப் பொழிவது. தன்னைத் தானே ப்ரசம்ஸித்துக் கொள்வது முதலான வாக் தோஷங்களில்லாமை வாக் தண்டமெனப்படும். (வாக்கினாலே தண்டித்த லென்று பொருளன்று, வாக்கைத் தண்டித்து அடக்கி வைத்துக் கொள்ளுதலென்றுபொருள்) மனோ தண்டமாவது—அப்ராப்த விஷயங்களைச் சிந்தனை செய்யாதபடி மனத்தை நிக்ரஹித்தல். காயதண்டமாவது—கரசரணாதி யவயவங்களை அப்ராப்த விஷயங்களில் போகவொட்டாத படி தடுக்கை. பெரிய திருமொழி 1-6-7இல் 'நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதியல்லாதன செய்தும்' என்றருளிச் செய்தபடியே மனமொழி மெய்களால் அநீதியொன்றும் நிகழாதபடி ஜாகரூகர்களாய் வர்த்திப்பவர்களே த்ரிதண்டிகள் என்றதாயிற்று. இங்கு வியாக்யானத்தில் குல்லூகபட்டர் ''நமது தண்ட த்ரயதாரண மாத்ரேண த்ரிதண்டீதி உச்யதே'' என்றெழுதி யிருக்கையாலே அவர் ஏகதண்டிகளை நெஞ்சிலெண்ணாது த்ரிதண்டிகளையே சிந்தனை செய்பவரென்று புலப்படுகின்றது. சததூஷணி 64ஆம் வாதத்தில் இது வ்யக்தம்.

சுலோகம் (12-122). இதில் பரமபுருஷனையே அநவரதமும் சிந்திக்க வேணுமென்று மநுமஹர்ஷி தம்முடைய ஸ்ம்ருதியைத் தலைக் கட்டுகிறார். இதில் நான்கு விசேஷணங்கள் பரம புருஷனைச் சிறப்பித்துக் கூறுவன. ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம்—ஸர்வநியந்தா என்றபடி. கீதையில் 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸம்நிவிஷ்டோ மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச' என்றதை நினைப்பது. அணீயாம் ஸம் அணோரபி—'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்' என்கிறபடியே அணு பதார்த்தங்களும் அந்த: ப்ரவேச ஸௌகர்யார்த்தமாக

மிகவும் அணுவாயிருக்குமவன். [ருக்மாபம்] ச்சாந்தோக்யத்தில் அந்தராதித்ய வித்யையிலே 'ஹிரண்மய: புருஷ: என்றும் 'ஆப்ரணகாத் ஸர்வஏவ ஸுவர்ண:' என்றும் 'சுட்டுரைத்த நன்பொன் உன் திரு மேனியொளியொவ்வாது' (திருவாய்மொழி 3-1-2), என்றும் சொல்லுகிறபடியே பொன் மேனியன். 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்கிறபடியே ஹிரண்யவர்ணையான பிராட்டியின் தேஜோ வ்யாப்தியாலே பொன்மேனி படைத்தவனென்னவுமாம். [ஸ்வப்நதிகம்யம்] ஸ்வப்நமுண்டாவது எப்போது? செவி வாய் கண் மூக்கு முதலான ஸகலேந்திரியங்களினுடையவும் வியாபாரம் உபரதமானவாறே கேவலம் மநோ ஜந்யமானது கனவு. அப்படியே பரம புருஷனும் கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவிகளும் ஒய்ந்து, 'என்றேனும் கட்கண்ணால் காணாத விவ்வுருவை நெஞ்சென்னு முட்கண்ணால் காணுமுணர்ந்து' (பெரிய திருவந்தாதி). என்கிறபடியே விசுத்தேந மநஸா க்ராஹ்யனாயிருப்பவன். இப்படிப்பட்ட பரமபுருஷனைச் சிந்தித்து வாழ்வோமாக. இந்த ஸ்ம்ருதியின் உபக்ரமத்தில்சுலோகம் 10ல் நாராயண நாம நிர்வசனம் செய்திருக்கையாலே இம்முனிவர்க்குப் பரம புருஷத்வேந விவட்சிதன் நாராயணனே என்று அறிவது.

---

## செய்திச் சுருக்கம்

### திருமந்திர மாநாடு:

திருவாவடுதுறை ஆதீன மடாலய கொலுமண்டபத்தில், குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவுள்ளப் பாங்கின் வண்ணம், மெய்கண்டார் ஆண்டு 744, பராபவ மார்கழி மாதம் 26, 27, 28 தேதிகளில் (10, 11, 12-1-1967) மூன்று நாட்கள் நடைபெற்றது. நமது அறநிலைய ஆணையர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார், பி.ஏ.,பி.எல்., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மூன்று நாட்களிலும் முறையே, தினமணி பொறுப்பாசிரியர் திரு வி. சந்தானம், பேராசிரியர் திரு டி.எம்.பி. மகாதேவன், எம்.ஏ. பிஎச். டி., பேராசிரியர் திரு லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் ஆகியோர்கள் தலைமை தாங்கினார்கள். திருவாளர்கள்: மீ. ப. சோமு, அ. ச. ஞானசம்பந்தம், எம்.ஏ., க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., வித்துவான் தி. சா. தியாகராஜ தேசிகர், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., சி. இராமலிங்கம், எம்.ஏ., எஸ். வி. வரதராஜ ஐயங்கார், எம்.ஏ., எம்.ஓ.எல்., வித்துவான் த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகிய அறிஞர் பெருமக்கள், திருமந்திரப் பகுதிகள் பலவற்றைக் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். திருமந்திரம் ஏழாம் தந்திரம் (பிற்பகுதி), திருமந்திரக் கட்டுரை—மூன்றாம் தந்திரம் (கலை நிலை) என்னும் இரண்டு சிறந்த நூல்கள் மாநாட்டு மலர்களாக வெளியிடப் பெற்றன.

### திருப்பணித் துவக்க விழா:

அம்பா சமுத்திரம் வட்டம் விக்கிரமசிங்கபுரம் ஸ்ரீ பாபவிநாச சுவாமி கோயிலில், 22-12-66 அன்று திருப்பணிக் குழுத் தலைவர் திரு ஐ.ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தலைமையில், திருப்பணித் துவக்க விழா நடைபெற்றது. மதுரைத் துணை ஆணையர், திருநெல்வேலி உதவி ஆணையர் மற்றும் பல அறிஞர் பெருமக்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள். தருமை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் விழாவிற்கு ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்கள். நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவுற்றவது.

### திருவண்ணாமலை நகரச் சங்கம்:

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், திருவண்ணாமலை நகரச் சங்கம், ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத் திருக் கல்யாண மண்டபத்தில், 27-1-67 அன்று நமது அறநிலைய ஆணையர் திரு எம்.எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ.பி.எல்., அவர்களால் துவக்கி வைக்கப் பெற்றது. அதுபோதே சென்னைத் துணை ஆணையர் திரு ஏ. சிதம்பரம், பி.ஏ.பி.எல்., அவர்கள் வார வழிபாடும், பிடி அரிசித் திட்டமும் ஆரம்பித்து வைத்தார்கள்.

### கால்கோள் விழா:

மருதமலை ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தானத்தில் கல்யாண மண்டபம் கட்டுவதற்கு, சென்னை அறநிலைய ஆட்சித் துறைத் துணை ஆணையர் திரு. ஏ. சிதம்பரம், பி.ஏ. பி.எல்., அவர்களால், 21-1-67 அன்று அடிக்கல் நாட்டப் பெற்றது.

# பூந்தண்மலிக் கல்வெட்டுக்கள்

(டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனர்)

## கல்வெட்டுக்கள் :

காகிதம் செய்யப்படுவதற்கு முன்பு நம் நாட்டில் பனை ஓலைகளே எழுதுவதற்கு மிகுதியாகப் பயன்பட்டன. பின்பு கற்களில் எழுத்துக்களை வெட்டும் முறையும் வழக்கத்திற்கு வந்தது. கல்லில் வெட்டப்பட்ட செய்திகள் கல்வெட்டுச் செய்திகள் எனப்படும். தமிழ் நாட்டுக் குகைகளிலும் பாறைகளிலும் கோவில்களின் கற் சுவர்களிலும் எழுத்துக்கள் வெட்டப்பட்டன. பௌத்த சமயத் துறவிகளுக்கும், சமண சமயத் துறவிகளுக்கும், மலைக் குகைகளில் கற்படுக்கைகள் அமைக்கப்பட்டன. அப் படுக்கைகள் மீது கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டன. 'இன்ன துறவிக்கு இன்னவர் அமைத்த படுக்கை இது' என்பன போன்ற செய்திகள் பொறிக்கப்பட்டன. இத்தகைய குகைக் கல்வெட்டுக்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து வெட்டப் பெற்றன. இப்பழக்கம் பல்லவர் காலத்தில் (கி.பி. 300-900) வளர்ந்தது.

இது பல்லவர்களுக்குப் பிற்பட்ட சோழப் பேரரசர் காலத்தில் (கி.பி. 900-1300) மிகுதியாயிற்று. சோழர்கள் தமிழகத்துப் பழங் கோயில்களைக் கற்கோயில்களாக மாற்றினர்; புதிய கற்கோயில்களையும் அமைத்தனர். அவர் தம் ஆட்சிக்கு உட்பட்ட சிற்றரசர்களும் பல கோயில்களை எடுப்பித்தனர். அக்கால அரசன் முதல் ஆண்டி ஈறாக யாவரும் சமயத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். அதனால் கோயிலுக்கு நிலங்களை வழங்கினர்; பூசைக்கும் விழாக்களுக்கும் பிறவற்றுக்கும் பயன் படுமாறு செல்வத்தை வழங்கினர்; தோட்டங்களை வழங்கினர்; நகைகளையும் பாத்திரங்களையும் பிறவற்றையும் வழங்கினர். காலை மாலைகளில் சந்தி விளக்குகள் எரிக்கவும் எப்பொழுதும் எரியத்தகும் நந்தா விளக்குகளை எரிக்கவும் ஆடுகளும் பசுக்களும் வழங்கப்பட்டன; சில வீடுகளும் கோயிலுக்கு விடப்பட்டன. கோவிலில் வேலை செய்யும் பணி மக்கள், ஆடல் மகளிர், பாடல் மகளிர், நடன ஆசிரியர் முதலியோர்க்கு வீடு அல்லது நிலம் மானியமாக விடப்பட்டது. இவை அனைத்தும் பல ஆவணங்களாக (பத்திரங்களாக)க் கோயிற் சுவர்களில் பொறிக்கப்பட்டன.

இக் கல் வெட்டுக்களால் நாம் அக்கால எழுத்துக்களைப் பற்றி அறியலாம்; அரசர்களைப் பற்றியும் அக்கால ஆட்சி முறை பற்றியும் அரசியல் அலுவலரைப் பற்றியும் அறியலாம்; மக்களுடைய பல திறப்பட்ட அறச்செயல்களை அறியலாம்; அக்கால மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டையும் சமய நிலையையும் இன்ன பிறவற்றையும் நன்கறியலாம். அக்காலத்தில் வெட்டப்பட்ட இக கல்வெட்டுக்களைக் கொண்டு இடைக்காலத் தமிழக வரலாற்றை நாம் ஒருவாறு அறிதல் கூடும்.

## பூவிருந்தவல்லிப் பெருமாள்கோயில் :

பூந்தண்மலியில் உள்ள பெருமாள் கோவில் வரதராசப் பெருமாள் கோவில் எனப் பெயர் பெறும். இக்கோவிலில் சீநிவாசன் சந்நிதி, அரங்கநாதன் சந்நிதி என்னும் இரண்டு சந்நிதிகள் உள்ளன. இக்கோவில் திருக்கச்சி நம்பி என்ற வைணவப் பெரியார் பூசித்த கோவில். ஆதலால் அப் பெரியாருக்கு ஒரு சந்நிதியும் இக்கோவிலுள் அமைந்துள்ளது. தாயார் பெயர் புஷ்பவல்லித் தாயார் என்பது. அத் தாயார் மல்லிகைப் பூவில் தோன்றிய காரணம் பற்றிப் பூவிருந்தவல்லி எனப் பெயர் பெற்றார் என்பது வரலாறு. அப்பெயரே காலப் போக்கில் ஊருக்கும் பெயராயிற்று என்று பெருமாள் கோவில் பட்டர்கள் கூறுகின்றனர்.

## கல்வெட்டுக்கள் :


பூந்தண்மலிப் பெருமாள் கோவிலில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை கி.பி. 13ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தவை. அவை குறிக்கும் அரசர்களையும் அவர்தம் காலங்களையும் கீழே காண்க:

| | அரசர்கள் | காலம் |
|---|---|---|
| 1. | சடையவர்மன் விக்கிரம பாண்டியன் | கி.பி. 1249-1258 |
| 2. | விசயகண்ட கோபாலன் | கி.பி. 1250-1280 |
| 3. | சேரன் இரவி வர்மன் குலசேகரன் | கி.பி. 1275-1290 வரையில் ஆட்சி புரிந்த இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தவன். |




ஸ்ரீநிவாசப் பெருமாள், குணசீலம்

By Courtesy:
'The Divya Kshetras in India Souvenir'.



பூவிருந்தவல்லிப் பெருமாள் கோயில்
கோபுரத் தோற்றம்.



பூவிருந்தவல்லிப் பெருமாள் கோயில்
விமானத் தோற்றம்.

**கல்வெட்டுச் செய்திகள் :**


*1.* சடையவர்மன் விக்கிரம பாண்டியனது ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. *1254*) பெருமாள் கோவில் இருந்த இடம்—சயங்கொண்ட சோழ மண்டலத்து மாங்காடு நாட்டுக் குழுகாணிப்பாக்கத்து அகரம் எனப் பெயர் பெற்றது. அங்கிருந்த பெருமாள் கோவில் பிள்ளைக் கோவில் எனப் பெயர் பெற்றது.

*2.* விசயகண்ட கோபாலனது இருபத்து நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி. *1273*) செம்மாம்பாக்கத்தைச் சேர்ந்த ஒருவன் பிள்ளைக் கோவிலில் ஒரு விளக்கு எரிக்க ஒரு பசுவை வழங்கினான்.


*3.* இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்பவனை வெற்றி கொண்ட சேரமன்னன் இரவிவர்மன் குலசேகரன் தன்னைச் 'சேரபாண்டியன்' என்று கூறிக் கொண்டான். அவன் 'கலியுகராமநல்லூர்' என்னும் ஊரிலிருந்த அகரத்தைப் பிரித்தான்; அதற்குச் 'சேரபாண்டியன் சதுர்வேதிமங்கலம்' எனப் பெயரிட்டான்; அம் மங்கலத்தை மறையவர்க்குச் சர்வ மானியமாக வழங்கினான்.

இந்த நான்கு கல்வெட்டுச் செய்திகளிலும் பெருமாள் கோவிலுள்ள இடத்தின் பெயர் 'பூவிருந்தவல்லி' என்பது காணப்படாமை அறியத்தகும்.

குழுகாணிப்பாக்கத்துக்கு அருகில் பூந்தண் மலி என்று ஓர் ஊர் இருந்ததாகப் பழைய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அப்பெயரே காலப்போக்கில் பூந்தமலி, பூந்தமல்லி எனக் கல்வெட்டுக்களில் மாறி வழங்கலாயிற்று. தாயார் மல்லிகைப் பூவில் தோன்றிய கதை தோன்றிய பின்பு 'பூவிருந்தவல்லி' என்று பழைய பெயர் மாற்றம் பெற்றது என்னலாம். தண்—குளிர்ந்த, பூ—மலர்கள், மலி—மலிந்துள்ள இடம்; குளிர்ந்த பூக்கள் மலிந்துள்ள இடம்



பூவிருநதவல்லிப் பெருமாள் கோயில்
விமானத் தோற்றம்.



பூவிருந்தவல்லிப் பெரிய மசூதி.

என்னும் பொருளில் இன்றைய 'பூந்தமல்லி' என்னும் பகுதி பழைய காலத்தில் 'பூந்தண்மலி' எனப் பெயர் பெற்றது போலும்! இப்பெயர் காலப் போக்கில் பலவாறு மாறி ஆங்கிலர் ஆட்சியில் 'பூனமல்லி' ஆயினமை வியப்பன்றே?

## நெடுஞ்செழிய விண்ணகர் :

பூந்தண்மலியில் முஸ்லிம் பள்ளி வாசல் ஒன்று உள்ளது. அஃது இற்றைக்கு ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்புகோல்கொண்டா சுல்தானால் கட்டப்பட்டது. அந்த மசூதியின் தரையில் பதிக்கப்பட்டுள்ள ஒன்பது கற்களில் தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கல்லிலும் ஒரே வரிதான் காணப்படுகிறது. அவ்வெழுத்துக்களில் அழிந்தனபோக எஞ்சியவை, ''புலியூர்க் கோட்டத்துப் பூந்தண்மலி நெடுஞ்செழிய விண்ணகர் இருந்த தேவர்'' என்னும் தொடரை உணர்த்துகின்றன. அக்கல் எழுத்துக்கள் முதற் பராந்தகன் (கி.பி. 907-954) காலத்தவை. அவை பொறிக்கப்பெற்ற கற்கள் பழைய பெருமாள் கோவில் ஒன்றைச் சேர்ந்தனவாகும். சங்க காலப் பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரில், அவனது ஆட்சிக்கு உட்படாத தொண்டை நாட்டில் ஒரு கோவில் எங்ஙனம் அமைந்திருத்தல் கூடும் என்று கல்வெட்டு அறிஞர் வியக்கின்றனர்.*

---



ஸ்ரீ வல்லாளமகாராஜன் கோபுரம், திருவண்ணமலை

## செய்திச் சுருக்கம்

### திருவிளக்கு வழிபாடு :

திருவண்ணமலை ஸ்ரீ அண்ணமலைப் பெருமான் ஆலயத்தில், நாட்டின் நலங்கருதி, பராபவ ஆண்டு தை மாதம் வெள்ளிக்கிழமை (27-1-1967) அன்று மாலை 7 மணி அளவில் சென்னை இந்து மத அற நிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு எம்.எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., துணை ஆணையர் உயர்திரு ஏ. சிதம்பரம், பி.ஏ., பி.எல்., ஆகியோர் முன்னிலையில், மிகவும் சிறந்த முறையில் திரிசதி (308) திருவிளக்கு வழிபாடு நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அன்று கோயிலுக்கு வந்திருந்து தரிசித்து மகிழ்ந்தனர்.

# "ஞான சித்தர்களும் சித்த மருந்தும்"

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

ஞானிகள் பஞ்ச பூதங்களைத் தம் வயப் படுத்தியவர்கள் என்பதை இதற்கு முன் கட்டுரையில் எழுதியிருந்தோம். அந்தப் பஞ்ச பூத சக்திகளுக்கு உரிய அதிதேவதைகளும், சரீரத்திலுள்ள உறுப்புகளும், இந்த பஞ்ச பூத சக்திகளை இடுகுறியாக அழைக்கப் பெற்ற அட்சரங்களும் இங்கு எழுதுவது பொருத்தமாகும் என எண்ணுகிறேன். அது கீழ்க் குறிப்பிட்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| பிருதிவி | — பிரம்மா | — சரீரம் | — நகாரம் |
| அப்பு | — விஷ்ணு | — வாய் | — மகாரம் |
| அக்கினி | — ருத்திரன் | — கண் | — சிகாரம் |
| வாயு | — மகேசன் | — மூக்கு | — வகாரம் |
| ஆகாயம் | — சதாசிவம் | — காது | — யகாரம் |

தூல தேக பஞ்சிகரணமாவது:—

பிருதிவி— அஸ்தி, மாமிசம், தோல், நரம்பு, ரோமம்.

அப்பு— வாய்நீர், மூத்திரம், வியர்வை, இரத்தம், சுக்கிலம்.

அக்கினி—பசி, தாகம், நித்திரை, சோம்பல், சங்கமம்.

வாயு— படுத்தல், நடத்தல், கிடத்தல், ஓடல், தாண்டல்.

ஆகாயம்—ராகம், துவேஷம், பயம், லச்சை, மோகம்.

இந்தப் பஞ்ச பூதங்களுக்கும் அப்பாற்பட்ட ஞானியினுடைய தேகம் சித்தியடையும் காலத்திலேற்படும் மாறுபாடுகளைத் தசதீட்சை என்று சொல்வர். அவையாவன:

1. முதல் தீட்சையில் ரோம துவாரங்கள் வழியாகக் கெட்ட நீர்கள் வியர்வையாகக் கழியும்.
2. முத்தோஷமாகிய வாத, பித்த, சிலேத்தும தோஷங்கள் நீங்கும்.
3. பழைய கெட்ட உதிரங்கள் கசியும்.
4. சர்ப்பம் தோலுரிப்பது போல் சரீரத்தில் தோலுரியும்.
5. சட்டை கழன்று தேகம் சிவந்த நிறமாகும்.
6. சட்டை கழன்று சுழிமுனை வாசல் திறந்து தூரதிருஷ்டி தெரியும்.
7. சட்டை வெளுப்பாகக் கழன்று தேகம் தீபம் போலப் பிரகாசிக்கும்.
8. சடலத்தை உயரத் தூக்கும். லகிறியாகும். கூடு விட்டுக் கூடு பாயும்.
9. தேகம் சூரியப் பிரகாசமாய் அஷ்டமா சித்தியும் கைலாய தேகமாகும்.
10. தேகம் தீபம் போலப் பிரகாசித்துத் தேகத்தை வெட்டக் கத்தியோடும், சொருப சித்தியாம். அண்டத்தில் மௌனம், நரை, திரை, மூப்பு, பிணி மரணம் கிடையாது.

இந்த தேகத்தை ஐந்து பிரிவாகத் தபயோகிகள் சொல்கின்றனர். அவையாவன: (1) இருள் தேகம், (2) மருள் தேகம், (3) சுத்த தேகம், (4) பிரணவ தேகம், (5) ஞான தேகம்.

(1) இருள் தேகம்—ஸ்தூல தேகத்தில் அபானத்தில் மலக் குற்றம், நாவில் நாடிக் குற்றம், கண்டத்தில் கபக் குற்றம், மேல் மூலத்தில் திரைக் குற்றம், மனதில் ஆணவ மலம் பொருந்தி நானெனும் அஞ்ஞானக் குற்றம்.

(2) மருள் தேகம்—மாயா சம்பந்தமாய்த் தனக்கு வருவது தெரியாமல் அகங்காரங் கொள்வது.

(3) சுத்த தேகம்—கருவி கரணுதிகள் இறந்து அறிவு அருள் வடிவாய்ப் பார்வைக்குத் தேகம் தோற்றும்.


(4) பிரணவ தேகம்—தேகம் தோற்றுகைக்குப் புலப்படாது. நிழல் சாயையும் கிடையாது.

(5) ஞான தேகம்—கண்ணிற்குத் தோன்ருது. அறிவிற்குப் புலப்படும்.

இருள் தேகத்திலிருந்து ஞான தேகத்தை அடைவதற்குப் பலவிதமான மார்க்கங்களைச் சித்தர்கள் சொல்ல வில்லை. உலக ரீதியில் மக்கள் ஆண்டவனை அடைவதற்குப் பற்பல வழிகள் உண்டென்றும், பல நதிகள் எல்லாம் ஒரே கடலில் போய் எப்படி ஐக்கியமாகி விடுகின்றவோ, அதுபோல் எல்லா மார்க்கங்களும் ஆண்டவனைஅடையும் மார்க்கமேதான் என்றும் சொல்வதைச் சித்தர்கள் பூரணமாய் ஒப்புக் கொள்வதில்லை என்று தோன்றுகிறது. ஒவ்வொரு சமயத்தவரும் சில குறிப்பிட்ட மந்திரங்களை வகுத்துக் கொண்டுள்ளனர். உதாரணமாக 'ஓம் நமசிவாய, ஓம் சரவணபவ, ஓம் முருகா' என்று சில மந்திரங்களைச் சைவர்களும், 'ஓம் நமோ நாராயணுய, ஓம் நமோ வாசுதேவாய ஓம் கோவிந்தாய நம:' என்று சில மந்திரங்களை வைணவர்களும், ஓதுகின்றனர். மந்திரங்களை உச்சாடனம் செய்வதால்,

பராபரத்தை அடையலாம் என்று சமய வல்ல பர்கள் கருதுகின்றனர். மந்திரங்களுக்கு அப் பாற்பட்டவனை மந்திரங்களால் பந்திப்பதென் பது அசம்பாவிதமல்லவா? அவன் மந்திரமாக வும், மருந்தாகவும் இருக்கின்றான். அவன் எல்லா மதமாகவும் இருக்கின்றான். ஆனால் மந்திரங்களால் கடவுளை அறிவதென்பது சாத் தியமானதல்ல. மந்திரம் அடியுமல்ல, நடுவு மல்ல, முடிவுமல்ல எனச் சித்தர்கள் கருதுவ தாகத் தெரிகின்றது,

உதாரணமாக ஓம் நமசிவாய என்னும் மந்தி ரத்தின் உட்பொருள் என்ன வென்பதைப் பெரி யோர்கள் அறிவித்தபடி கீழே ஒரு உருவத்தை அமைத்துக் காட்டியுள்ளோம். இந்த உருவத் தில் அமைந்திருக்கும் ஓம் நமசிவாய என்னும் அட்சரங்கள் ஓர் இடுகுறிப் பெயராயும் ஓர் தத்துவத்தைக் குறிப்பதாகவும் புலப்படுகிறது.




பஞ்ச பூதங்கள்:

| | | |
|---|---|---|
| சரீரம் | நகாரம் | ந |
| வாய் | மகாரம் | ம |
| கண்கள் | சிகாரம் | சி |
| மூக்கு | வகாரம் | வ |
| காதுகள் | யகாரம் | ய |

ஓம் இருக்குமிடத்தைக் கவனியுங்கள்,

பஞ்சபூத சக்திகளையே நகாரம், மகாரம், சிகாரம், வகாரம், யகாரம் என்றும், பிரண வத்தை ஓங்காரமென்றும் குறிப்புக்காகஅழைக் கலாயினர். மாணிக்கவாசகர் 'நமசிவாய வாழ்க' என்று திருவாசகத்தின் முதற் செய் யுளிலேயே நமசிவாயத்தை வாழ்த்துகின்றார்.

தாயுமானவர், பட்டினத்தார், திருவள்ளுவர், சிவவாக்கியர், அகத்தியர் முதலிய பெரியோர் களெல்லாம் பராபரம் மந்திரங்களுக்கு அப் பாற்பட்டதென்றும், மந்திரங்களாலும், தந்தி ரங்களாலும் ஆண்டவனைத் தன்வயப்படுத்த முடியாதென்றும்பறை சாற்றியுள்ளனர். மந்தி ரங்களையே தெய்வ வழிபாடாகப் பழகி வந்த நாம் மந்திரங்களினால் பராபரத்தையடைய முடி யாதென்று சொல்லும்போது புரட்சிகரமாகத் தோன்றக் கூடும். மனக் கசப்பைத் தருவதும் இயல்பு. ஆயினும் சித்தர்கள் ஆகிய தபோதனர் களின்கருத்தை நாம் இங்குக் குறிப்பிடவேண் டியது கடமையாகும். அலையும் மனதை ஒரு முகப்படுத்துவதற்கு மந்திரங்கள் ஒரு சாதனமே யாம். மந்திரங்களால் மரத்திலிருந்து மாங் காய் விழும்படி செய்யலாம். உடலில் ஏறிய விஷத்தை இறக்கலாம். கரடி, வெம்புலி வாயையும் கட்டலாம். தேவர்களை வசியப் படுத்தலாம். சக்கரங்களை வைத்துக் கொண்டு உச்சாடனம் செய்து பிறருக்குத் தீங்கும் செய்ய லாம். ஆனால் அதனை மாத்திரம் கொண்டு அறிவை அறிவது சாத்தியம் அல்ல என்பது தபோதனர்களுடைய கருத்து.

இந்தப் பஞ்சத பூத சக்திகள் இன்றி அறிவு என்னும் ஓங்காரத்தை அடைதல் அரிது. அந்த அறிவே சிவம் என்பதைக் குறிக்கிறது. அந்த அறிவிற்கு ஆதாரம் பஞ்ச பூத சக்திகள். இந்தப் படத்தின் தத்துவம் புரிந்து கொள்ள இயலாதவர்கள் இருளாகிய மாயா மலத்தை நீக்குபவனென்று சொல்லும் குருவைப் பணிந்து அவரால் கிருபை பெறுவதுதான் வழி. வாசா ஞானத்தைப் பேசும் குருமார்களை அண்டுதல் கூடாது. அபரவித்தை யென்னும் ஸ்திரீக ளோடு செய்யும் வாமவித்தையைப் பயிலும் குருமார்களுக்கும் பரவித்தை யென்னும் ஆத்ம வித்தையைப் பயிலும் குருமார்களுக்கும் பேதம் அறிந்து, ஆத்ம வித்தையைப் பயின்ற ஆசாரி யனை (ஆ—சிவம்; சாரியன்—சார்ந்திருப்பவன்) அண்டிப் பிழைத்தலே இருளைப்போக்கிக்கொள் ளும் வழி. இப்படிப்பட்ட ஆசாரியர் மூலை முடுக்குகளில் யாரும் அறியாமல் பித்தர்களைப் போல் நடமாடிக் கொண்டிருப்பர். செயலற்ற பிணம் போலிருப்பர்.

தபோதனர்கள் மந்திரங்களின் சக்திகள் எந்த அளவுக்குப் பயன் பெறுமென்பதைக்

கூறியுள்ளனர். அது கீழே சில செய்யுட்களைக் கொண்டு விளக்கற்பாலது.

மந்திரத்தை உன்னி மயங்கித் தடுமாறி
விந்துருகி நாதமாம் மேல்ஒளியைக் காணுமல்
அந்தரத்தே கோல் எறிந்த
அந்தகன் போல் ஆனேனே

என்கிருர் பட்டினத்தார்.

வேதாந்த வேதம் எல்லாம் விட்டொழிந்தே
நிட்டையிலே ஏகாந்தமாக இருப்ப தினி யெக்காலம்

என்கிருர் பத்திரகிரியார்.

இவர்கள் சொல்வதிலிருந்து மந்திரங்களும், வெறும் சுவடிகளும் பராபரத்தையடையும் மார்க்கத்தைக் காட்டக் கூடியன அல்ல என்பது புலனுகிறது. வேதங்கள், சாத்திரங்கள் எல்லாம் கடவுள் ஒருவர் உண்டென்பதை நிச்சயப் படுத்த வந்தவை. ஆனுல் அவை கடவுளைக் காட்ட வல்லமையற்ற தென்பதை அறிதல் வேண்டும். இதையே சிவவாக்கியர்,

சாமநாலு வேதமும் சகல சாத்திரங்களும்
சேமமாக ஓதினும் சிவனைநீர் அறிகிலீர்

என்ருர்.

மற்றும் பஞ்சாட்சர மந்திரத்தைப் பற்றி அவர் என்ன சொல்கிருர் என்பதையும் நாம் ஊன்றிக் கவனிக்கத் தக்கது.

அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும்
என்றுரைக்கும் அன்பர்காள்
அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும்
அல்லகாணும் அப்பொருள்
அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி
அவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும்
அவ்வுமாம் சிவாயமே

ஆகவே அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் அப் பொருளல்ல என்பதைக் குறிப்பாகக் காட்டி யுள்ளார். மற்றும் அவர்,

மந்திரங்கள் க்ற்றுநீர்
மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்கள் கற்றநீர்
மரித்தபோது சொல்வீரோ
மந்திரங்கள் உம்முளே
மதித்தநீரும் உம்முளே
மந்திரங்கள் ஆவது
மனத்தின் ஐந்து எழுத்துமே

என்று சொல்கிருர்.

இவ்விடத்தில் ஐந்து எழுத்துமே என்பது, பஞ்ச பூத சக்திகளால் இயங்கும் பஞ்சஞான இந்திரியங்களேயாகும் என்பதை அறிதல் வேண்டும்.

அட்சரங்கள் ஏகாட்சரம், திரியாட்சரம், பஞ் சாட்சரம், சடாட்சரம், அஷ்டாட்சரம் எனச் சொல்வர். பஞ்சாட்சரத்தையே பகிர்ந்து 51 அட்சரங்களென்பர். இந்த அட்சரங்க ளெல்லாம் மனத்தோடு நின்றுவிடும். அட்சர மென்பது ஒன்றுதான். அதுதான் சரம். சரத்தைப் பார்ப்போன் பரம் பார்க்கக் கூடு மென்பதே.

தாயுமானவர் இம்மந்திரத்தை எவ்விதம் மதிப்பிடுகிருர் என்பதையும் நோக்கற் பாலது.

மந்திரத்தை யுன்னி மயங்கா தெனக்கினி யோர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ?பராப ரமே!

வேதாந்திகளால் கொண்டாடப் பெருத மந் திரத்தை நினைத்து மயங்காமல், இனியொரு உபாயத்தைக் கற்பிக்கத் தகாதோ யன்கிருர்.

மற்றும் பரத்தை நிச்சயிக்க வந்த காவியங் கள், புராணங்கள், இதிகாசங்கள், வேதங்கள் என்பன கணக்கற்று மலிந்து கிடக்கின்றன. பரத்தின் வாசனை யறியாத புலவர்கள் அவை களுக்கு மனம் போன போக்கிலெல்லாம் விருத்தி யுரைகள் எழுதிக் குருடன் குருடனுக்கு வழிகாட்டியது போல் மக்களை பிரமையிலேயே ஆழ்த்தி வைத்துள்ளனர். தாயுமானவர் வெகு அழகாக அதை,

சின்னஞ் சிறியார்கள் செய்தமணற்
சோற்றையொக்கும்,
மன்னுங் கலைஞான மார்க்கம்;
பராபரமே!

என்ருர்.

லோகோபகாரமாய்ச் சமைத்துள்ள சாத்திர ஞான நெறிகள், மிகவும் சிறிய குழந்தைகள் சமைத்த (உண்ணுவதற்கு உபயோகப்படாத) மணற் சோற்றை யொத்துப் பயனற்றவை யாகும். அதாவது பரஞானத்தை யடையா மல் கால முழுவதும் அபரஞானத்திலேயே மூழ்கிக் கிடத்தல் கூடாதாம். அனுபவம் அடையத் தபோதனர்கள் அருளும் வேண்டும்.

—தொடரும்.

# இதுதான் இந்து மதம்

(கவியோகி மகரிஷி ஶ்ரீ சுத்தானந்த பாரதியார், அடையாறு, சென்னை-20)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## 9. உண்மை ஒன்றே:

இந்து மதம் என்றால் பல சாதி, சமயப் பிரிவு என்று பலர் கருதுவர்; இது பிழை; இந்து மதம் ஒருமையில் வேரூன்றிக் கிளை பரவி ஒரு சுவைக் கனி ரசந் தருவதாகும். 'ஏகம்ஸத்'—உண்மை ஒன்றே. 'ஏகோதேவ:'—இறைவன் ஒருவன் என்பது இந்து மத சாரம்.

எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா வுடலும் இறைவனு லயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்
எல்லார் வாழ்வும் இறைவன் யோகமே
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க
அன்பே நிறைக! அருளே பொலிக!

என்பது இந்து மதத்தின் சங்கநாதம் ஆகும். இந்து மதத் தத்துவங்களை வேதாந்தம், சித்தாந்தம் என்று இரண்டாகக் காணலாம். வேதாந்தம் உள்ளிருந்துவாழ்வைமுறைவகுத்து நடத்துவது. அதுவேர்; இது கிளை. 'சிவ மாதல் வேதாந்த சித்தாந்தமாகும்'. சவமான உடலிற் சிக்கிய சீவன் தனு கரண புவன போகாதிகளைத் துய்த்துக் களிம்பகன்று, தூய சிவமாதலே இந்து மதம். சிவம் என்பது இன்பந்தரும் கடவுளாம். மானிடம் மாறிப் பிறந்து கடவுட்டன்மை பெறுவதே இரண்டின் குறிக்கோளாகும். இரண்டிற்கும் போராட்டம் வேண்டுவதில்லை. திருமூலர் அருளுகின்றார்:

இரண்டு கடாவுள்ள இவ்வூரி னுள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இறுக்கிப் பிடித்தால்
இரண்டு கடாவும் ஒரு கடாவாமே

## 10. அன்பினால் பண்பாடு :

அன்பினால் பண்பட்டு, உள்ளம் தூயதானால் மன வேறுபாடுகள் நீங்கும். அன்பே உயிர் நிலை; அன்பே உயர் நிலை; சமயம் என்பதே அன்புக் கலைதான். ''இன்பமே என்பெரும் அன்பே'', என்று இறைவனைத் தொழுகின்றார் மணிவாசகர். அன்பில் உருகி அருள் மெருகேற்றினால் சீவன் சிவமயமாகப் பொலியும். இவ்வாறு படிப்படியாகப் பரிணமப்பட்டு மன மாசு நீங்கி மானிடம் கடவுளுண்மை பெறும் உண்மையைத்தான் நுண்மையாக மணிவாசகர், ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் சிவனே'' என்கிறார்.

## 11. ஒருமை ஒழுக்கம்:

வேதம் 'ஸம்கச்சத்வம், ஸம்வதத்வம், ஸம் வோமனும்ஸிஜானதாம்; ஸமான ஹ்ருதயே ஸ:' என்று கூவுகிறது. அதாவது மன வேறுபாடுகளை ஒதுக்கி, ஒருமுகப் படுங்கள், ஒன்றி முன்னேறுங்கள்; உள்ளறிந்த ஒருமை கலந்து பேசுங்கள்; மனதில் ஒருமையை ஊன்றுங்கள்; உள்ளொருமை பேணுங்கள் என்பதாம்.

'உள்ளொன்றினாலே உலகொன்றும் ஆதலினால் உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்றி, ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே! உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே' என்கிறார் அப்பர். 'ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி' என்கிறார் மணிவாசகர். நமது சமயமெல்லாம் ஒருமை முழக்கமே. நமது சமயத்தின் வேர் உள்ளொருமை.

எனது யானும் வேறாகி
உவரும் யாரும் யானாகும்
இதயபாவனா தீதம்—தருவாயே

என்று வேண்டுகிறார் அருணகிரியார். அவரது திருப்புகழ் அமுதம் ஒருமையாலேதான் தொடங்குகிறது.

ஏறுமயிலேறி விளை யாடுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகம் ஒன்றே.

நமது சமயத்தின் தனிச் சிறப்பு ஒருமையே; அந்த ஒருமை கடவுளே. 'என்று நீ அன்று நான்' என்பதே ஒருமையின் உணர்வு.

ஒன்றே நினைத்திருந்தேன்
ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின்
உள்ளடைந்தேன்

என்று காரைக்கால் அம்மையார், உள்ளொருமையுடன் இறைவனைக் கலந்து வாழ்ந்தார். ஒன்றான இறைவன் அருளே, பலவாக விரிந்து உலகாடலை நடத்துவது. தோற்றமும் ஒழுக்கமும் அந்த ஒன்றிலே நிகழ்வது. கடல் ஒன்றே; அதைக் கதிரவன் முகந்து மேகப் படலத்தை நெய்கிறான்; மேகம் மழை பொழிகிறது; மழை நீர் உலகில் ஊற்றாகி ஆற்றுப் பெருக்காகி மீண்டும் கடலிலேயே ஓடிக் கலக்கிறது. இப்படிக் கலக்குமுன் பயிரையும் உயிரையும்ஊட்டி வளர்க்கிறது. இதுதான் வாழ்வின் குறிப்பு.

## 12. மனவிகாரப் பன்மை :

பலவாகத் தோன்றி நம்மை அல்லற் படுத்தி மயக்கித் துக்கம் விளைவிப்பதெல்லாம் பேய் மனமே.

மாதுக்கம் நீங்கலுறுவீர்
மனம் பற்றி வாழ்மின்

என்று சம்பந்தர் வழிகாட்டுகிருர். மனம் எதிற் பற்றவேண்டும்?

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்ருர் வள்ளுவர் பெருமான். எதிலும் பற்றற்றுத் தானே தாஞன தனிமுதல்வனைப் பற்றுதலே ஒருமை யின்பமாகும். இறைவன் அருளை அன்பினுல் பெற்ருல் பன்மை மயக்கம் ஒழிந்து ஒருமை கூடும்.

## 13. சேரவாரும் செகத்தீரே :

தாயுமானுர் நம்மை அழைக்கிருர், 'காகம் உறவு கலந்துண்பதைக் காணீர்! சிவபோக வெள்ளம் பொங்கித் ததும்புகிறது; மனக் குரங்கின் வழியே போகாமல், அதை அடக்கி அன்பு செய்மின். அன்பு நிலே தேடும் பருவம். இது கண்டீர் சகத்தீரே'.

இன்று நாமும் சேரவாரும் சகத்தீரே என்றே மனித சமுதாயத்தைக் கூவுவோம். இறைவன் எங்கே? இங்கே! இதோ உள்ளத்தில் துடிப்பது எது? இறைவன் அருள்; இமைப் பொழுதும் நெஞ்சிலே நீங்காதுள்ளது.

உள்குவார் உள்ளத்தானை
உணர்வெனும் பெருமையானை
—அப்பர்.

யாவரும் எவரும் தாஞய்
அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந் திற்கும்
சொலப்படான் உணர்வின்மூர்த்தி
—நம்மாழ்வார்.

## 14. உணர்வின் மூர்த்தி :

'நான் தான்' என்ற இரு விளக்கங்கள் உள்ளன. தான் என்பது எதிலும் பற்றில்லாத தனிமுதற் பரம்பொருள். நான் என்பது வினைசுற்றி மனஞ்சுற்றி, விடுதலே தேடும் 'ஆன்மா'. மன மயக்கிற் சிக்கிய பாசான்மா மாசகன்று சுத்தான்மாவாஞல்தான் நமக்கு இறைவன் ஒளி தோன்றும். நம்மாழ்வார் திருப்புளியடியில் நீண்ட காலம் உள்ளொருமை கொண்டு யோகத்திலிருந்து பாடுகிருர்.

யானும் தாஞய் ஒழிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னேனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பிணைத்த தனிமுதலே
தேனும் பாலும் கன்னலும்
அமுதும் ஆகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே

இந்த ஒருமையுணர்வுதான் இந்து மதமாகும். சிந்தையொருமையே, தியான ஐக்கியமே, இந்து மதம்.

## 15. பிரியாத ஒன்று :

அடியோமோடும் நின்னேடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு

என்ற மங்களாசாசனத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவோம்.

மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாந்
மாமாப்ரஹ்ம நிராகரோத்

'நானும் பிரம்மத்தை மறுக்கேன், பிரியேன்; பிரம்மமும் என்னை மறுக்காது, பிரியாது. அது சத்தியம், ஞானம், அனந்தம். அதுவே என் இதயக் குகைக் கனல்' என்று வேதம் முழங்குகிறது. நக்கீரர் பெருமான் அடுக்கடுக்காகச் சொல்லுகிருர்.

ஒருவகைத் தேவரும், இருவகைத் திறமும்
மூவகைக் குணமும், நால்வகை வேதமும்
ஐவகைப் பூதமும் அறுவகை இரதமும்
எழுவகை ஓசையும் எண்வகை ஞானமும்
ஒன்பதின் வகையும் ஒண்மலர்ச் சிறப்பும்
பத்தின் வகையும் ஆகிய பரனை
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனை
ஈசனை இறைவனை ஈறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
ஈண்டிய சிறப்பின் இணையடிக் கீழ்நின்று
வேண்டும் அதுஇனி வேண்டுவன் யானே!

## 16. பன்மையில் ஒருமை :

'ஒன்றெனவும் தோற்றம் ஒடுக்கமதிலே யெனவும் கண்டவனே சாட்சிக்கிறை'. இந்த ஒருமையை உணர்க! பல விகார மாயந் தவிர்க. கிளைகள் பல மரம் ஒன்று; மரங்கள் பல தோட்டம் ஒன்று; இனிய கனிகள் பல; அவை கலந்த பஞ்சாமிர்தம் ஒன்று; விரல்கள் ஐந்து, கை ஒன்று; உறுப்புக்கள் பல, உடல் ஒன்று; உடல் உருக்கள் பல, உயிர் ஒன்று; உருக்கள் பல, உயர்வான் ஒன்று; விளக்குகள் பல, பல நிறம், மின் சக்தி ஒன்று; ஆடைகள் பல, பருத்தி ஒன்று; சமயங்கள் பல, சத்து சித்து ஆனந்த சுத்த பரமாத்ம சக்தி ஒன்றே.

## 17. சொல்லொணு இன்பம் :

இவ்வாறே சிந்தித்தால் உள்ள பொருள் ஒன்றில் உள்ளம் ஒன்றும். பிறகு என்னில் எதுவோ, அனைத்திலும் அதுவே என்று சம யோகம் தோன்றும். சாதியிலே மதங்களிலே, சாத்திரச் சந்தடிகளிலே அபிமானித்து அலேயும் மானிட மனம், உள்ளத்தில் நிருத்தமிடும் தனித் தலைவனைக் கூடும்; உடல் மனைவியைக் கூடும்; ஆன்மா இறைவனுடன் ஆனந்தக் கூத்தாடும்.

(முற்றும்)

# பௌத்தமும் தமிழும்

*(சிறுவை. திரு. மோகனசுந்தரம்)*

புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

இம் மும்மணிகளை மும்முறை வழிபாடு செய்தனர் பௌத்தர். ''ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்; ஆதிசான் முனிவன், பெருந்தவ முனிவன்; பிறவிப் பிணி மருத்துவன்; தெளிந்த நாதன்; தன்னுயிர்க்கிரங்கான் பிறவுயிரோம்பும் மன்னுயிர் முதல்வன்;'' புத்தர்இவர் காசிக்கு வடக்கே 100 கல் தொலைவில் கபிலவஸ்து எனும் இடத்தில் சாக்கிய குல மன்னனை சுத்தோதனர்க்கும் மாயாதேவிக்கும் பிறந்த உத்தமர். சித்தார்த்தர் என்ற சிறப்புப் பெயரினைத் தாங்கி, தரும பீடிகை சாற்றுவதற்கே இவ்வுலகிடை அவதரித்து அரச மாளிகையில் வளர்ந்தார்.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது

என்ற நிலைமை ஓர்ந்து, அதற்குரிய அறநெறிகளை உணர, ஒருநாள் திடீரென அரச மாளிகையினின்றும் மனைவி, குழந்தை, தந்தை மற்றுமுள்ள செல்வங்களை யெல்லாம் கடிதெனத் துறந்து வெளியே சென்றுவிட்டார். அவருக்குப் பிச்சைச் சோறே அமுதமாயிற்று. காடு மலை சுற்றினர். இந்து மத நூல்களை ஆராய்வதிலும் கடுமையான விரதங்களை அனுட்டிப்பதிலும் 6 ஆண்டுகள் கழித்தார். நினைத்த பலன் இல்லை. பின்னர் 7 வாரங்கள் அரச மரத்தடியில் தியான நிலையில் இருந்து, ஒருநாள்போதம் பெற்று —அதாவது ஞானநிலை அடைந்து ததாகதர் ஆனர். ததாகதர் எனின் உண்மையை அடைந்தவர் எனப் பொருள். அரச மரத்தடியில் போதம் பெற்றதால் அம்மரத்தினைப் போதி மரம் என்றே அழைத்தனர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என, இவர் அடைந்த உண்மை நிலையை யார்க்கும் அறிவித்த தரும நெறியே பௌத்த நெறியாகும். இந் நெறியை ஊர் ஊராகச் சென்று 45 ஆண்டு காலம் எல்லா மக்களுக்கும் உபதேசித்தார்.

புத்தர் பெருமானின் அருண் மொழிகளில் காணப்படும் பகுத்தறிவு வாதம் நம்மைக் கவர்கிறது. சரியான கருத்துக்களும், பகுத்தறிவுக் கண்ணேட்டமுமே அவரது நல்வழிக்கு முதல் படியாக அமைந்தவை.

''பகைமையையும் வெறுப்பையும் அடியோடு ஒழித்துப் பூரண அன்பு நிலவும் மனநிலை தான் இறைவனை அடையும் நிலை'' என்று புத்தர் விளக்கினர். சமய வாழ்வு வாழ விரும்புவோர், புலன் நுகர்ச்சியிலோ, கொடிய விரதங்களிலோ அழுந்தாமல் இரண்டுக்கும் நடுவான வழியில் செல்ல வேண்டும் என்று முதலில் கூறினர். பின்னர்த் துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண வழி எனும் நான்கு பேருண்மைகளை அவர் விளக்கினர். துக்க நிவாரண வழியாகிய தூய நல்வாழ்வுக்கு அவர் எட்டுப்படிகள் அல்லது வழிகள் வகுத்தார். நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு ஆகிய இவையே அட்டாங்க மார்க்கமாகும். மேலும் கொல்லாமை, கள்ளாமை, பிறனில் விழையாமை, பொய் சொல்லாமை, கள்ளுண்ணுமை ஆகிய பஞ்ச சீலத்தையும் உணர்த்தினர்.

'கர்மம், மறுபிறவி' என்ற கோட்பாடுகளைப் புத்தர் ஏற்றுக் கொள்கிறார். ஒருவன் என்ன செயல் புரிகிருனே, அதுவாகவே அவன் ஆகிவிடுகிறன். ஆதலால் ஒவ்வொருவனும்தானே தன்னை உருவாக்குகின்றன். ஆகவே நம்முடைய செயல்களிலிருந்து நாம் தப்பவே முடியாது எனவும், ''என் கருமமே என் உடைமை, என் கருமமே என் பிதிரார்ச்சிதம்; என் கருமமே என்னைத் தாங்கும் கருக்குழி, என் கருமமே என் இனம்; என் கருமமே எனக்குப் புகலிடம்'' என்று புத்தர் கூறுகின்றர்.

புத்தர் கடவுளைப் பற்றியும் விரதங்களைப் பற்றியும் ஒன்றும் கூறவில்லை. தம்மை வழிபடும்படி கூடக் கூறினரில்லை. ஆன்மீக வளர்ச்சிக்குரிய செயல் திட்டத்தையே வகுத்தார். ஆகம சித்தாந்தங்களை வகுக்கவில்லை. சமய நிறுவனங்களை நிறுவவில்லை. தூய்மையான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட ஒரு புதிய பாதையைக் காட்டுவதே அவருடைய நோக்கமாய் விளங்கியது. புத்தர் பெருந்தகை எதையும் மறைபொருள் எனக் கூறினரில்லை; தாம் கூறும் நெறிகள் உலகம் அனைத்துக்கும் சொந்தம் எனக் கூறினர். புத்தர் பிற சமயங்களை இகழ்வதைக் கண்டித்தார்.

பிறர்க்கறம் அருளும் பெரியோனுகிய புத்தர் பெருமான் அருளிய நல்லறங்கள் ''பௌத்த சமயம்'' என்பதாகி உலகெங்கும் பரவத் தொடங்கின. கி.மு. 5ஆம் நூற்ருண்டில் தோன்றிய இச்சமயம் கி.மு. 3ஆம் நூற்ருண்டில் தமிழ் நாட்டில் சீரும் சிறப்பும் எய்தி நிலவியது எனலாம். அசோகரது ஆட்சிக் காலம் கி.மு. 270 முதல் 233 என்பதாகும். அக்காலத்தில் அசோகரது ஆதரவில் மொக்கல புத்த தஸ்ஸே எனும் தேரரின் தலைமையில் பௌத்த சமய ஆராய்ச்சி பற்றிய மாநாடு ஒன்று சுமார் ஒன்பது திங்கள் நடைபெற்றது. மாநாட்டின் முடிபுக்கு இணங்க அசோகர் பல புத்த தேரர்களை நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் அனுப்பிப் பௌத்த சமயத்தைப் பரவச் செய்தார். அங்ஙனம் பல்வேறு இடங்களுக்கும் சென்ற புத்த தேரர்களில், அசோகரின் மகனுகிய, மகேந்திரரும் அவருக்குத்துணையாக அவர் சீடர்கள் சிலரும் தமிழ்நாடு, இலங்கை முதலிய இடங்களுக்கு வந்தனர். அவர்கள் கடல் வழியாக இலங்கை செல்லும் வழியில் அக்காலத்தே புகழ்பெற்று விளங்கிய காவிரிப் பூம் பட்டினத்தில் தங்கி இருக்கக்கூடும். அவ்வாறு தங்கிய மகேந்திரர் அங்கு ஒரு பௌத்த விகாரை கட்டியிருக்கிருர். இந்த விகாரையே சிலப்பதிகாரத்தில் கூறப்படும் ''இந்திர விகாரை'' என்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

புத்த தேரர்கள் பௌத்தசமயத்தைப் பரப்ப முற்படும்போது தாங்கள் மருத்துவம், கல்விப் பயிற்சி முதலியனவும் அளித்தார்கள். பௌத்தப்பள்ளிகள் ஏற்படுத்தியும், மக்கள் பிணிதீர்க்க மருத்துவம் செய்தும், தங்கள் அறக் கொள்கைகளைப் பரப்பினர். இதே மகேந்திரர் மதுரை முதலிய இடங்களில் விகாரைகளையும் பௌத்தப் பள்ளிகளையும் ஏற்படுத்தினர்.

இவைகளையெல்லாம் அசோகரது கல் வெட்டுக்கள் இரண்டு, மிகத் தெளிவாக விளக்குகின்றன. சௌராஷ்டிர நாட்டில் கிர்னுர் நகரத்துக்கு அருகில் உள்ள பாறையொன்றில் எழுதப்பட்ட அசோக சாசனம் இரண்டில்:

''காருண்யமுள்ள தேவனும்பிரியராகிய அரசர்பெருமானுடைய(அதாவது)அசோகர் ஆட்சிக்குட்பட்ட எல்லா விடங்களிலும், இவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரளபுத்திர தேசங்களில், அரசரால் இரண்டுவித மருத்துவச் சிகிச்சைகள் ஏற்படுத்தப்பட்டன. அவை மக்களுக்கு மருத்துவம், கால்நடைகளுக்கு மருத்துவம் என்னும் இருவகை மருத்துவ நிலையங்களாம்'' என்று குறிக்கப் பட்டுள்ளது.

மேலும் பிஷாவர் நகரத்துக்கருகில் காணப் படும் சாசனம் மூன்றில்:

''. . . . .இப்பால் தெற்கேயுள்ள சோழ பாண்டிய தாமிரபரணி(அதாவது இலங்கை) வரையிலும் இந்த (அதாவது அற) வெற்றி அடிக்கடி அரசரால் கைப்பற்றப்பட்டது'?

என்றும் உள்ளது.

ஆகவே இத்தகு சான்றுகளால் புத்தரின் அறநெறி சோழ பாண்டிய நாடுகளில் வெற்றி பெற்றது எனத் தெரிகிறது. கி.மு. 3ஆம் நூற் ருண்டிலேயே இதனுல் தமிழகத்தில் சீரிய முறையில் பௌத்தம் பரவி இருந்தது என்பது போதரும்.

கி.பி. 7ஆம் நூற்ருண்டில் சீன நாட்டிலிருந்து வந்த யுவாங் சுவாங் எனும் பௌத்த யாத்திரிகர் தம்குறிப்பில் காஞ்சிபுரத்தில் அசோக சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட நூறு அடி உயரம் உள்ள பௌத்த தூபி இருந்ததையும், சோழ நாட்டில் அசோகர் கட்டிய பௌத்த விகாரை இருந்ததையும், பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரைக்கு அருகில் மகேந்திரரால் கட்டப்பட்ட பௌத்த விகாரை கிலமாக இருந்ததையும் கூறுகின்ருர்.

பௌத்தம் தமிழ் நாட்டிலும் தமிழ் நூல்களிலும் கி.பி. முதல் இரண்டு நூற்ருண்டுகளில் சிறப்பெய்தி இருந்தது. கடைச் சங்க காலத்துத் தொகை நூல்களில் பௌத்தம் பற்றிய குறிப்புகள் காணப்படாவிடினும் கடைச்சங்க காலத்து நூல்களில் பௌத்தம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கடைச்சங்க காலத்து மணிமேகலை, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி ஆகிய நூல்கள், பௌத்த சமய நல்லறங்கள் பற்றிய பல குறிப்புகளைத் தெரிவிக்கின்றன.

துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்
ஒன்றிய வுரையே வாய்மைநான் காவது

என்பது 20ஆம் காதை.

பணைஐந் தோங்கிய பாசிலைப்போதி

என்பது சிலப்பதிகாரம்.

இருட்பார வினைநீக்கி எவ்வுயிர்க்கும் காவல்என
அருட்பாரம் தனிசுமந்த அன்றுமுதல்இன் றளவும்
மதுஒன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுஅன்றி நினக்(கு)உரித்தோ புண்ணிய நின்திருமேனி

என்பது வீரசோழிய உரை.

இவைபோன்ற பல நல்லறங்களைத் தமிழ் நூல்களில் பல இடங்களில் காணலாம். மணிமேகலையைப் பௌத்த சமயப் பிரசார நூல் என்றே கூறலாம். புத்தருக்குக் கோயில் கட்டி வழிபடாமல் அவருடைய திருவடி நிலைகளை மட்டும் வணங்கிய காலத்து எழுந்த காப்பியம் மணிமேகலை.

பௌத்த சமயம் கி.பி. 2ஆம் நூற்றாண்டில், கனிஷ்கன் காலத்தில், பழைய பௌத்த சமயம் ஈனயானம் (அதாவது சிறுநெறி) எனவும் புதிய சமயம் மகாயானம் (அதாவது பெருநெறி) எனவும் பெயர் பெற்றன.

புத்தரைக் குருதேவராகப் போற்றுவதுஈன யானம்.

புத்தரைக் கடவுளாகப் போற்றுவது மகா யானம்.

போதி மரக்கிளையை அல்லது திருவடியை வழிபடுவது ஈனயானம்.

புத்தருக்கு விக்கிரக ஆராதனை செய்வது மகா யானம்.

நம் தமிழகத்தில் ஈனயானமே பரவி இருந்தது. இலங்கையிலும் பர்மாவிலும் இன்று ஈனயானமே வாழ்கிறது.

இதுவன்றிச் சங்க காலத் தொகைநூல்களில் பௌத்த சமயப் புலவர்கள் யாத்த பாடல்கள் காணப்படுகின்றன. இளம்போதியார் என்னும் கடைச்சங்கப் புலவர் பௌத்தரே யாவர். இவர் இயற்றிய பாடல் நற்றிணை 82ஆம் பாடலாகும். மணிமேகலை இயற்றிய கூல வாணிகன் சாத்தனுர் அருளிய செய்யுட்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

அஃதன்றி நாதகுத்தனுர் இயற்றிய குண்டலகேசி எனும் நூலில், குண்டலகேசி மணிமேகலை போன்று பௌத்த சமயவாதம் செய்தவள். முழு நூல் கிடைக்கவில்லை. ''சித்தாந்தத் தொகை'' எனும் நூல் பௌத்தக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் நூல். இது இறந்து பட்டது. சிவஞானசித்தியார் உரை நூலாலும்—நீலகேசியின் உரை நூலாலும் இந்நூல் பற்றித் தெரியவருகிறது. மற்றொன்று புத்தர் பெருமான்மீது பாடப்பட்ட ''தோத்திர நூல்' இதுவும் இறந்துவிட்டது. பிறிதொன்று நீல கேசி உரையால் தெரியவரும் ''விம்பசார கதை'' இது புத்தர் காலத்தில் வாழ்ந்த விம்ப சாரர் கதையாகும்.

பௌத்தம் இலக்கணத் தொண்டும் செய்திருக்கிறது. சோழ நாட்டில் மிழலைக் கூற்றத்தில் (அதாவது கீரனூர் தாலுக்கா) பொன்பற்றி என்னும் ஊரின் குறுநில மன்னராகிய புத்தமித்திரனுர் இயற்றியது 'வீரசோழியம்' எனும் இலக்கண நூலாகும். அக்காலத்தில் ஆட்சி புரிந்த வீரசோழன் பெயரால் தொல்காப்பியத்திற்குப் பின் இஃது ஐந்து இலக்கணங்களையும் எடுத்துரைப்பது. இதற்கு உரை எழுதியவர் புத்தமித்திரரின் மாணவர் பெருந்தேவனுர் ஆவர். முதன் முதலாக இவர் சொற்பிறப்பாராய்ச்சியைச் சொல்லதிகாரத்தில் தாதுப் படலத்தில் விரிவாக விளக்கியுள்ளார். இங்ஙனம் தமிழகத்தில் பௌத்தம் இலக்கிய இலக்கண ஆட்சி பெற்றதுமல்லாமல் மக்கள் நெறிகளோடு கலந்து சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது.

பண்டைக் காலத்தில் பௌத்தம் தமிழகத்தில் சிறந்திருந்தது என்பதற்கு வேறு பல சான்றுகளையும் காணலாம். புத்தர் சிலைகளையும், விக்கிரகங்களையும் தமிழகத்தில் பரவலாகப் பல இடங்களில் கண்டெடுத்துள்ளனர். கூவம் கிராமத்தில் ஒரு வயலின் களத்து மேட்டில் உள்ள புத்தர் சிலை, தஞ்சைத் திருவலஞ்சுழிச் சிவன் கோவிலுக்கு வெளியில் காணும் புத்தர் சிலை, வட ஆர்க்காடு பள்ளூரில் உள்ள புத்தர் சிலை, காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் மதிற் சுவரில் வைத்துக் கட்டப்பட்டுள்ள சிலை, திருச்சி செயங் கொண்ட சோழபுரத்தில் உள்ள புத்தர் உருவச் சிலை, நாகையில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் உற்சவ மூர்த்தி முதலிய பலப்பல சிலைகள் தமிழகத்தில் பௌத்தமதம் மிகவும் வளர்ந்து பரவி யிருந்ததனை யுணர்த்தும்.

காவிரிப்பூம் பட்டினத்தில் பௌத்தப் பள்ளியின் தலைவராக அறவண அடிகள் என்பவர் இருந்தார். நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியர் ஆகிய ஆசாரிய தர்மபாலர் அவர்கள் காஞ்சியைச் சேர்ந்தவர் என அறிகிறோம். 7ஆம் நூற்றாண்டில் வந்த யுவாங் சுவாங், காஞ்சியில் ஒரு சிறந்த பல்கலைக் கழகமும், 100 பௌத்தப் பள்ளிகளும், 1,000 பிக்ஷுக்களும் இருந்ததாகக் கூறுகிறார். காஞ்சி மட்டுமின்றிப் பொதிகை, வஞ்சி, சங்கமங்கை, போதி மங்கை, மதுரை முதலியன, பௌத்த சமயத்தின் பெரு நிலையங்களாக விளங்கின.

தமிழகத்தில் கும்பகோணம், திருவலஞ்சுழி, பட்டீச்சரம், எலயனூர் பொன்பற்றி, புத்தகுடி, செட்டிப்பட்டி, ஆலங்குடிப்பட்டி, திருப்பாதிரிப்புலியூர், ஆவூர், நாவலூர், திருச்சோபுரம், பல்லாவரம், மாங்காடு, பாண்டவமலை, கழுகுமலை, அழகர் மலை, சித்தர் மலை, ஆனைமலை, ஆறு நாட்டார் மலை இன்ன பிற தலங்கள் பௌத்தத் திருப்பதிகளாக விளங்கியுள்ளன.

இங்ஙனம் தமிழகத்தில் சிறப்புற்றிருந்த பௌத்த சமயம், கி.பி. 6 அல்லது 7வது

நூற்றுண்டில் வைதிகமதம் தன் அடிப்படைக் கொள்கையில் மாறுதல் செய்தபடியாலும், பக்தி இயக்கத்தை மேற்கொண்டபடியாலும், பௌத்த சமயம் பல கிளைகளாகப் பிரிந்து அக்கிளைகள் தம்முள் போராடிக் கொண்டிருந்தமையாலும், மெல்லத்தேய்ந்துதேய்ந்து கி.பி. 14ஆம் நூற்றுண்டிற்குப் பிறகு தமிழ் நாட்டில் மறைந்தே விட்டது எனலாம்.

கடைசியாகப் புத்தர் தம் சீடர்களை நோக்கி அருளிய நல்லறம் ஒன்றின் ஒரு பகுதியைக் காண்போம்.

"ஓ பிட்சுக்களே, புறத் தோற்றங்களான யாவும் ஒழிந்த பிறகு, ஒரே உயிர்த் தத்துவம் மட்டும் எஞ்சி நிற்கின்றது. அது பிரபஞ்ச இயல்புகளுக்கு அப்பாற்பட்டுச் சுதந்திரமாய் உள்ளது. விறகு தீர்ந்த பிறகும், சுடர்அணைந்த பிறகும், நித்தியமான ஒளியில் எரிந்து கொண்டிருக்கும் தீ அதுதான். ஏனெனில் அந்தத் தீ சுடரிலுமில்லை, விறகிலுமில்லை, அந்த இரண்டில் உட்புறத்திலுமில்லை, வெளிப்புறத்திலுமில்லை. ஆனல் மேலேயும் கீழேயும் எங்கும் உள்ளது அது.

[சென்னை அனைத்திந்திய வானெலியினரால் ஒலிபரப்பப் பெற்ற இக்கட்டுரை, அநுமதி பெற்று, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.]

* * *



* * *

ஸ்ரீ நடராஜர் சிற்பம், கங்கைகொண்ட சோழபுரம்.

# இறை வழிபாடு

(அருண்மொழியரசு திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்)

**தெய்வம் ஒன்று :**

திருக்கோயில்களில் சிவலிங்கம், தட்சிணாமூர்த்தி, நடராஜர், சந்திர சேகரர், அம்பிகை, விநாயகர், முருகர் திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும், அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

நெருப்பு—சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு—அம்பிகை
நெருப்பில் உள்ளசெம்மை-விநாயகர்
நெருப்பில் உள்ள ஒளி—முருகவேள்
மலர்—சிவபெருமான்
மலரின் வடிவம்—அம்பிகை
மலரின் நிறம்—கணபதி
மலரின் மணம்—மயிலவன்
நூல்—சிவபெருமான்
நூலின் அகலம்—பார்வதி
நூலின் நீளம்—கணேசர்
நூலின் கனம்—குமாரக் கடவுள்.

சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி
திடமார் கணநாதன் செம்மை—படரொளி
கந்தவே ளாகும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு அருள் சக்தி, போர்ச் சக்தி, கோப சக்தி, புருஷ சக்தி.

அருட் சக்தி—பார்வதி
போர்ச் சக்தி—காளி
கோபசக்தி—துர்க்கை
புருஷ சக்தி—விஷ்ணு

அரியலால் தேவியில்லை
ஐயன்ஐயாறனார்க்கே

என்பது அப்பர் திருவாக்கு.

முக்கண்ணன்—முக்கண்ணி
சங்கரன்—சங்கரி
திரிபுரசுந்தரன்—திரிபுரசுந்தரி

என்பது போல், அரன்—அரி என வந்தது. ஆகவே, திருமாலின் வழிபாடும் அம்பிகையின் வழிபாடும் ஒன்றெனக் காண்க.

யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்
—சிவஞான சித்தியார்.

ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்
—அப்பர்.

திருக்கோயில்களில் காட்சி யளிக்கும் துவாரபாலகர்களில்ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்பது, உள்ளே வழி படச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகின்றது. இதையே ''ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரம்ம'' என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றேதான்; இரண்டாவது இல்லை என்பது இதன்பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வ பேதம், மூர்த்திபேதம், குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபடவேண்டும்.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல், தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம்; மற்றொன்று வெப்பம்; வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால் தான் மலர் மலராகக் காட்சியளிக்கும்.

வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷ்ணத்தால் தான் வாழ்கின்றது. ஒரு சமயம் உடம்பில் சூடு குறையுமானல் சுற்றத் தார் சூழ்ந்துகொள்வார்கள். மருத்து வர் வந்து பார்த்து 'Too Late'' என்று கூறி, அவர் விரும்பியதெல்லாம் கொடுங்கள் என்று சொல்லுவார். ஆகவே, உலகிற்கு வெப்பமும் தட்ப மும் இன்றியமையாதவை. வெப்பத் தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு. தட்பத்தின் நிறம் பச்சை. எனவே, சிவமூர்த்தி பவளம் போல் மேனியன். திருமால் பச்சை மா மலைபோல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திரு மால் ஆழியிடைத் துயிலுகின்றார். சிவாலயத்தில் வெந்த நீற்றையும், விஷ்ணு கோயிலில் தீர்த்தப் பிரசாதத் தையும் வழங்குகின்றார்கள்.

பாதி சிவம். பாதி விஷ்ணு. இந்த தத்துவத்தைச் சிவ மூர்த்தங்கள் இரு பத்து ஐந்தனுள் கேசவார்த்த மூர்த் தம் என்பது தெரிவிக்கின்றது. சங்கர நாராயணர் கோவிலும் இதற்குச் சான்று.

> தாழ் சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
> சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்—வீழும்
> திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
> கிரண்டுருவும் ஒன்றாய் இசைந்து

என்று ஆழ்வார் கூறுகிறார்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சி புரம், திருக்குற்றாலம், திருவருணை முதலிய திருத்தலங்களில் உள்ள சிவா லயங்களில் திருமாலும் காட்சி தருகின் றார்.

நம்மிடைப் பலருக்கும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்கா விடில் என்ன? மனித வாழ்வில் இறை யுணர்ச்சி இல்லாமல் வாழமுடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்குஎன்ன நஷ்டம்? என்ற வினாக்கள் உள்ளுணர் வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடை காண முயல்வது முறை.

விலங்குகளும் உண்ணுகின்றன; உலாவுகின்றன; வம்சத்தை வளர்க்கின் றன. மனிதர்களாகிய நாமும் உண் ணுகின்றோம்; உறங்குகின்றோம்; உலா வுகின்றோம்; மக்களைப்பெறுகின்றோம். இவை விலங்குகட்கும் மனிதர்கட்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. விலங் குகளினின்றும் மனிதன் உயர்ந்துகாட்சி யளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்றா லேயேதான்.

ஒரு கானகத்தில் விலங்கு மாநில மா நாடு கூடிற்று. அதில் தலைமை தாங் கிய சிங்கம் ''விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு, அவசியமின்றி அதிகம் செலவழிப்பது அறிவின்மை யாகும். அது வருந்தத்தக்கது; கண் டிக்கத் தக்கது'' என்று கூறிற்று. இது போல் மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கட வுளை வணங்காமல் வாழவில்லையா? என்று வினவுவார்கள். மானம் உள்ள வன் ஆடை உடுப்பான். மனம் உள்ள வன் இறைவனை வணங்குவான்.

மனிதன் செய்கின்ற பாவங்களுக் கெல்லாம் கழுவாய் உண்டு. நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும்கழுவாய் இல்லை.

> எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு
> —திருக்குறள்.

> ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
> மாணிழை மகளிர் கருச் சிதைத் தோர்க்கும்
> குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்
> வழுவாய் மருங்கின் கழுவாயும் உள
> நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
> செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
> அறம் பாடிற்றே (புறநானூறு 34)

**எனவே**, கழுவாய் இல்லாத பாவம் **நன்றி** கோறல் ஆகும். இதற்கு நேர் **மறுதலையாகச்** சிறந்த புண்ணியம் நன்றி மறவாமை யாகும். இந்த உடம்பை **யும்** உறுப்புக்களையும் உள்ளுறை கருவி **கரணங்களையும்** தந்தவன் இறைவன். **கண்ணைக்** கொடுத்த இறைவன் கண் **தூசு** பட்டு மங்காமல் இருக்கும் பொருட்டுக் கண்ணிற்குக் கதவு போல் **இமையும்** கொடுத்தான். அந்த இமை **யின் நுனியில்**உரோமங்களையும் அமைத் **தான்**. உணவு உண்கின்ற வாயில் **உணவைத்** துகள் படுத்த (Flour Mill) **பற்களையும்** கொடுத்தான். வாய்க்குள் **நுழைகின்ற** பொருள் நல்லனவா? அல் **லனவா?** என்று சோதித்து உள்ளே **அனுப்ப** வாய்க்கு நேராக இரண்டு **காவற்காரர்களைப்** போல் இரு நாசி **களை** அமைத்தார். உண்ணுகின்ற **உணவைப்** பல் மெல்லவும், நாவில் **நீர்ஊறவும்** அமைத்தார். நம்முடைய **உடம்பில்** எல்லா அவயவங்களிலும் **நரம்புகள்** உள. நாவில் மட்டும் நரம் **புகள் இல**. ஏனோ?

நரம்புள்ள பகுதிகள் சுளுக்கிக் **கொள்ளும்**. நாவில் நரம்பு வைத் **திருந்தால்** ஒரு நாளுக்கு நூறு முறை **யாவது** சுளுக்கிக் கொள்ளும். விளக் **கெண்ணெய்** தடவி உருவ வேண்டி **வரும்**. இறைவன் கருணையினால் இடை **யறாது** பேசுகின்ற நாவை நரம்பின்றிப் **படைத்துக்** கொடுத்தான். அவன் **கொடுத்த** நாவினால்அவனுடையநாமங் **களைச்** சொல்லுதல் நன்றி பாராட்டுத **லாகும்**. அவன் கொடுத்த தலையினால் **அப்** பரம பிதாவை வணங்குதல் நன் **றிக்** கடனாகும். வடமொழியில் காலை **யும் மாலையும்** கடவுளை வணங்குவதைச் **சந்தியா** வந்தனம் என்பார்கள். சம்—**செவ்வையாக**, தியா—தியானித்து, **வந்தனம்**—வணங்குவது சந்தியாவந்த **னமாகும்**. இந்தச் சொல்லைப் பார்க்கி **னும்** ஒரு கோடி மடங்கு பொருளாழம் **உள்ளதாகக்** கடவுளை வணங்குதற்குக் **காலைக்** கடன், மாலைக் கடன் என்று **தமிழில் ஆன்றோர்** கூறினர். கொடுத்த **கடனைத்** திருப்பிக் கொடாதது எத் **துணைப்** பெரிய பாபமாகுமோ, அத் **துணைப்** பெரிய பாபமாகும் இறைவனை வணங்காதிருத்தல். ''என் கடன்பணி செய்து கிடப்பதே'' என அப்பர் பெரு மான் குறிப்பிடுகின்றார்.

கருணையே வடிவமாகிய இறைவன் உயிர்களின் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான் என்பதை முன்னர் அறிந்தோம். அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும். காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம் பிலுள்ள வெப்பம் தணியும் பொருட் டுக் காவிரியில் நீராடுகின்றான். அது போல் அருட்கடலாயிருக்கிற ஆண்ட வனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம்ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே
தீயாடும் கூத்தன்

என்று மாணிக்கவாசக சுவாமிகள் திரு வெம்பாவையில் அருளிச் செய்கின்றார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.

ஆதலின் அப்பர் பெருமான் இறை வன் நமக்குத் தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்து விட்டு அக் கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய் யுங்கள் என்றும் அருளிச் செய்கின்றார்.

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

உடம்பின் பயன் இறைவனை வணங்கு வதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கட வுளைத் தொழுவதாகும்.

*கற்றதனாலாய பயன் என்கொல்? வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்*
*—திருவள்ளுவர்.*

இறைவனுடைய திருவடியில் அன்பில்லாதவர் கல்வியின் பெருக்காலும் குலத்தின் முறுக்காலும் நன்மையடைய மாட்டார்.

*சென்றது காலம் சிதைந்த(து) இளமைநலம்*
*நின்றதுசா வென்று நினைந்துருகி—மன்றில்*
*நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணு மாந்தர்*
*படிக்கின்ற நூல்எல்லாம் பாழ்*
*—அதிவீரராம பாண்டியர்.*

*கற்றதனாற் றொல்வினைக் கட்டறுமோ நல்லகுலம்*
*பெற்றதனாற் போமோ பிறவிநோய்— உற்றகடல்*
*நஞ்சுகந்து கொண்டருணை நாதனடித் தாமரையை*
*நெஞ்சுகந்து கொள்ளா நெறி*
*—அருணகிரியந்தாதி.*

ஆதலால், மனிதப் பிறப்புக்கு இறை வழிபாடு இன்றியமையாதது என வுணர்க. ஒரு மாவட்டத்திற்கும் மற்றொரு மாவட்டத்திற்கும் அரசாங்கத்தார் ஓர் எல்லைக் கல் அமைத்திருப்பது போல், விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறை வழிபாடாகும். இறை வழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும் இறை வழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர்க.

*எறும்புகடை யானைதலை ஈசனைப்பூ சித்துப்*
*பெறுங்கதிகண் டுந்தேறார் பேய்கள்—அறிந்த*
*உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்*
*தலகையாய் வைக்கப்படும்*
*—முதுமொழிவேல் வைப்பு.*

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் எறும்பு வழிபட்ட திருவெறும்பூரும், யானை வழிபட்ட திருவானைக்காவும் காட்சி தருகின்றன. எறும்பு முதல் யானை ஈறாக எல்லா வுயிர்களும் இறைவனை வழிபட வேண்டும் என்பதும் போதருகின்றது.

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து, அன்புடனும், ஆசாரமுடனும் கோயிக்குச் செல்லுதல் வேண்டும்.

கொடி மரத்திற்கு வெளியேவிழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிராகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்டமனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதலும், பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி, பிரசாதங்களைப் பய பக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தைக் கீழே சிந்துதலும், ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும், சிவலிங்கத்திற்கும் நந்திதேவருக்கும் இடையே போவதும் மிக்க குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்களை உண்டு, கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறுபிறப்பில் மலைப் பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்தபின் கொடிமரத்தின் அருகிலிருந்து வடதிசை நோக்கி யமர்ந்து மூலமந்திரம்ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாகத் தோத்திரப் பாடல்களை அதிகம் சப்தம் போடாமல் இனிய குரலில் துதிக்க வேண்டும். கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.

விளக்கிட்டார் பேறுசொல்லில்
மெய்ந்நெறி ஞானமாகும்
—அப்பர்.

கோயிலில் அணைகின்ற விளக்கை அபுத்தி பூர்வமாகத் தூண்டிய எலி, பலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து புகழ் பெற்றது.

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனுய் ஆக்கினையே
—திருவருட்பா.

இனி, நாள் தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்றுகூடிக் காலை அல்லது மாலையில் வழிபடவேண்டும். வீட்டுத் தலைவன் ஒரு பாடலைச்சொல்ல, ஏனையோர் அதனை வழிமொழிந்து சொல்ல, இறைவனைக் காதலுடன் வழிபாடு செய்ய வேண்டும். இதனுல் குடும்பத்தில்ஒற்றுமைஉண்டாவதுடன் அந்த வீட்டில் தெய்வ கடாக்ஷமும் திருமகள் விலாசமும் உண்டாகும்.

ஒரு தனி இழையை எளிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்றுபட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுத்துவிடும். அதுபோல், பல அன்பர்கள் வாரத்திற்கொரு நாள் கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்துவிடலாம். முஸ்லீம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்து வேளை தவருமல் தொழுவதும், கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறு தோறும் ஆண் பெண் அடங்கலும் தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும்போல், இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிக மிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிரார்த்தனைக் கூட்டம் நாள்தோறும் நடாத்தி முடிவில் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே ஆத்ம சாந்தியடைந்தார். ஆதலால்அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபரநலன்களை எளிதில்பெறுதல் வேண்டும்.

இவ்வாறு திருக்கோயில் வழிபாடு செய்வதற்கு ஏற்ற தெய்வத் தமிழ்ப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்ருேம். இவைகளை அன்பர்கள் அவசியம் மனப்பாடம்செய்துகொண்டு ஆலய வழிபாடு செய்து பிறவிப் பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்களாக.

---

## வைகானஸ ஆகமப் பயிற்சி வகுப்பு (குறுகிய காலம்)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட வியாஸ பாரத கலாதி ஸதஸ் ஸமாஜத்தின் ஆதரவில் வைகானஸ ஸூத்ரத்தைச் சார்ந்த வைஷ்ணவர்களுக்கு வைகானஸ ஆகமப் பயிற்சி வகுப்பு நடக்கவிருக்கிறது.

பயிற்சி வகுப்பு சென்னையில் நடக்கும். மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரு. 35 (முப்பத்தைந்து) உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

வகுப்பில் சேர விரும்புவோர் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு மனு செய்துக் கொள்ளலாம்:

காரியதரிசி:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட வியாஸ பாரத கலாதி ஸதஸ் ஸமாஜம்,
10, க்ருபா சங்கரி தெரு, மேல மாம்பலம், மதருஸ்-33.